# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை: 20
பக்கங்கள்: 28

சுடர் 33 கதிர் 86 மாசி 08ஆம் நாள் செவ்வாய்க்கிழமை 20 பெப்ரவரி 2018 வள்ளுவர் ஆண்டு 2049


## பற்றிக்ஸ் அணி மாகாணத்தில் சம்பியன்

யாழ்ப்பாணம், பெப். 20
யாழ்ப்பாண மாவட்ட விளையாட்டுச் சங்கம் நடத்திய மாகாண மட்ட கால்பந்தாட்டத் தொடரில் 20 வயது ஆண்கள் பிரிவில் யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி கிண்ணம் வென்றது.

(விரிவு பக். 28)

## இறுதியில் பங்கேற்காத பண்டத்தரிப்பு பெண்கள்

யாழ்ப்பாணம், பெப். 20
யாழ்ப்பாணப் பாடசாலைகள் விளையாட்டுச் சங்கம் நடத்திய மாகாணமட்ட 20 வயதுப் பெண்களுக்கான கால்பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டத்தில் பண்டத்தரிப்புப் பெண்கள் உயர்தரப் பாடசாலை அணி நேற்றுப் பங்கேற்கவில்லை. மாகாண மட்டத் தொடரொன்றின் இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்ற போதிலும் அந்த அணி ஆட்டத்துக்குச் சமுகம் தராமையானது அதிர்வலைகளையும் சர்ச்சைகளையும் தோற்றுவித்துள்ளது. அந்த அணியின் அசமந்தப் போக்குத் தொடர்பில் விளையாட்டு ஆர்வலர்கள்பலரும்மைதானத்தில்தமதுவிசனத்தைத் தெரிவித்துச் சென்றனர்.

(விரிவு பக். 27)

# உருளைக்கிழங்கு விலைச் சரிவால் வடக்குச் செய்கையாளர்கள் பாதிப்பு

## இறக்குமதி உருளைக்கிழங்குக்கான வரியை அதிகரிக்கக் கோரிக்கை



யாழ்ப்பாணம், பெப். 20
உள்ளூரில் உற்பத்தி செய்யப்படும் உருளைக்கிழங்கை மிகக் குறைந்த விலைக்கு விற்பனை செய்ய வேண்டியுள்ளது. இறக்குமதியாகும் உருளைக் கிழங்குக்கான வரியை அதிகரிக்க வேண்டும் என்று அரச தலைவரிடம் கோரிக்கை விடுத்தோம். எந்தப் பதிலும் இல்லை. இனியாவது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.
இவ்வாறு வடக்கிலுள்ள விவசாய அமைப்புக்கள் கோரியுள்ளன.
உருளைக் கிழங்குச் செய்கையில் உள்ளூரில் குறிப்பாக வடக்கில் சிறந்த அறுவடை கிடைத்துள்ளது. அவற்றைச் சந்தைப்படுத்தும்போது மிகக் குறைந்த விலைக்கே விற்க வேண்டியுள்ளது. இறக்குமதியாகும் >> 06

# தாமரை மொட்டால் தமிழீழம் மலரும்

## மகிந்தவை எச்சரித்தார் சம்பந்தன்

கொழும்பு, பெப்ரவரி 20

மகிந்த ராஜபக்ச தலைமையிலான அணியினர் தொடர்ந்தும் இதே போக்கில் செயற்பட்டால் தாமரை மொட்டில் இருந்தே தமிழீழம் மலரும் என்று எச்சரித்துள்ளார் எதிர்க்கட்சித் தலைவரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன்.
நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடிகள் மற்றும் சமகாலப் பிரச்சினைகள் தொடர்பில் நேற்று மாலை 4 மணிமுதல் இரவு 7 மணிவரை நாடாளுமன்றில் நடைபெற்ற சிறப்பு விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார். >> 06

## இனவாதம் பேசுவது தமிழ்க் கூட்டமைப்பே

### நாமல் கூறுகின்றார்

கொழும்பு. பெப். 20
நாட்டில் நாங்கள் இனவாதத்தைத் தூண்டினோம் என்று இரா.சம்பந்தன் கூறினார். நாம் இனவாதத்தைத் தூண்டவில்லை. வடக்கில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே இனவாதத்தைத் தூண்டி வருகின்றது.
இவ்வாறு கூட்டு எதிர்க்கட்சியின் >> 06

## “அந்தக் கதிரையில் நீங்களே அமருங்கள்”

### சைகையில் பேசினர் ரணிலும் மகிந்தவும்

கொழும்பு. பெப்.20
தலைமை அமைச்சருக்கான கதிரையைக் காட்டி தொடர்ந்து "அந்தக் கதிரையிலேயே அமர்ந்திருங்கள்" என்று ரணில் விக்கிரமசிங்கவுக்கு முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச கையால் சைகை காட்டினார். அது சபையின் கவனத்தை ஈர்த்தது. >> 06

## எதிர்க்கட்சித் தலைவர் பதவி கோருவோம்

### மகிந்த கூறுகின்றார்

கொழும்பு. பெப். 20
நாங்கள் எதிர்க்கட்சித் தலைவர் பதவியைக் கோருவோம். அந்தப் பதவியில் வருபவரே எதிர்கட்சித் தலைவராவார்.
இவ்வாறு முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச தெரிவித்தார்.
நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற சிறப்பு விவாதத்தில் கலந்துகொள்வ >> 06

# ஓர் ஆண்டு

## கிளிநொச்சியில் இன்று காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் பெரும் கவனவீர்ப்பு



கிளிநொச்சி. பெப்.
காணாமல் ஆக்கப்பட்டவர்களை விடுவிக்கவும், வெளிப்படுத்தவும் வலியுறுத்தி அவர்களின் உறவினர்களால் கிளிநொச்சியில் நடத்தப்பட்டுவரும் தொடர்போராட்டம் இன்று ஓர் ஆண்டை எட்டியுள்ளது. இன்று அவர்கள் பெரும் கவனவீர்ப்புப் போராட்டத்தை நடத்தவுள்ளனர். கிளிநொச்சியில் காலை 10 மணிக்குப் போராட்டம் நடக்கவுள்ளது. இந்தப் போராட்டத்துக்கு அனைவரும் ஆதரவு தர வேண்டும் >> 06

## தமிழீழத்தை இலக்கு வைத்து தமிழ்நாட்டில் பெரும் மாநாடு

சென்னை. பெப். 20
இலங்கையில் தமிழீழம் அமைவதுதான் நோக்கம். அதற்கான அரசியல் தீர்வு, அதற்கான முயற்சி தான் இந்த தமிழீழ விடுதலைக்கான எழுச்சி மாநாடு.
இவ்வாறு மலேசியாவின் பினாங்கு மாகாண துணை முதலமைச்சர் பேராசிரியர் ராமசாமி தெரிவித்தார்.
மே17 இயக்கத்தின் ஏற்பாட்டில் தமிழீழ விடுதலைக்கான எழுச்சி மாநாடு சென்னை சேப்பாக்கத்தில் உள்ள அண்ணா அரங்கில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. மாநாட்டை மலேசியாவின் பினாங்கு மாகாண துணை முதலமைச்சர் பேராசிரியர் ராமசாமி தொடக்கி உரையாற்றினார்.
அதிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.
அவர்தெரிவித்ததாவது: >> 06

### குழப்பம் முடிவுக்கு வந்தது

# கூட்டரசு தொடரும்

கொழும்பு. பெப். 20
உள்ளூராட்சித் தேர்தல் முடிவுகளின் பின்னர் கொழும்பு அரசியலில் ஏற்பட்டிருந்த குழப்ப நிலை ஒரு வாரத்தின் பின்னர் நேற்று முடிவுக்கு வந்துள்ளது. ஐக்கிய தேசியக் கட்சியும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் இணைந்து அமைத்துள்ள >> 06

## உயர்நீதிமன்ற முடிவு வரும்வரையில் கூட்டு

கொழும்பு. பெப். 20
கூட்டு அரசிலிருந்து விலகி தனித்துச் செயற்பட இரவு தீர்மானித்தோம். ஆனால் நாட்டை உறுதியற்ற நிலையிலிருந்து >> 23

## கச்சதீவு திருவிழாவில் சிங்களத்திலும் திருப்பலி

### கடற்படைப் பேச்சாளர் தெரிவிப்பு

கொழும்பு. பெப். 20
கச்சதீவு புதிய அந்தோனியார் ஆலயத் திருவிழாவில் இந்த முறை சிங்கள மொழியிலும் திருப்பலி ஆராதனை நடத்தப்படவுள்ளது என்று கடற்படையின் பேச்சாளர் கொமடோர் தினேஸ் பண்டார தெரிவித்தார். >> 06

## சிறுமி வன்புணர்வு; 10 வருடங்கள் சிறை

ஒன்றுவிட்ட தங்கையான சிறுமியை வன்புணர்ந்து தாயாக்கியவருக்கு 10 வருடங்கள் கடூழியச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.
பாதிக்கப்பட்ட சிறுமிக்கு 2 இலட்சம் ரூபா இழப்பீடு வழங்க வேண்டும் என்றும் யாழ்ப்பாண மேல்நீதிமன்று நேற்று உத்தரவிட்டது.

விரிவு பக்.05

## பட்டம் ஏற்றிய சிறுவன் கிணற்றில் வீழ்ந்து சாவு

### சாவகச்சேரியில் சோகம்

சாவகச்சேரி. பெப்.20
பட்டம் ஏற்றிய சிறுவன் வயலில் இருந்த பாதுகாப்பற்ற கிணற்றில் தவறி வீழ்ந்து உயிரிழந்தான். இந்தச் சம்பவம் நேற்று சாவகச்சேரி, விளைவேலி வயல் பகுதியில் நடந்துள்ளது.
சாவகச்சேரி, கல்வயல் முதலாம் கட்டையடியைச் சேர்ந்த ஜெயக்குமாரன் தீஸன் (வயது-16) என்ற சிறு >> 23

## பெண்பிரதிநிதித்துவத்தை கட்டாயம் ஆக்குவதில்லை

### தேர்தல்கள் ஆணைக்குழு முடிவு

யாழ்ப்பாணம். பெப். 20
உள்ளூராட்சிமன்றங்கள் அனைத்திலும் 25சதவீத பெண் பிரதிநிதித்துவத்தைக் கட்டாயமாக்குவதில்லை என்று தேர்தல்கள் ஆணைக்குழு நேற்று முடிவு செய்துள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.
25சதவீத பெண் பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்தக் கூடிய சபைகளில் மாத்திரம் >> 06

# கூட்டு அரசு தொடர்கிறதா? சபையில் மூண்டது சர்ச்சை

- பெரும்பான்மையை நிரூபிக்குமாறு மகிந்த அணி சவால்
- சு.கவால் தனித்து முடிவெடுக்கமுடியாதென ஐ.தே.க. பதில்
- 15 நிமிடங்களுக்கு சபை நடவடிக்கைகள் ஒத்திவைப்பு
- அரசிலிருந்து சு.க. விலகியதாக எந்த ஆவணமும் இல்லை – கரு

கொழும்பு, பெப். 20

கூட்டு அரசிலிருந்து சிறிலங்கா சுதந்திரக் கட்சி வெளியேறிவிட்டதாக அறிவித்துள்ளதால் நாடாளுமன்றத்தில் ஐக்கிய தேசியக் கட்சி பெரும்பான்மையை நிரூபிக்கவேண்டும். இது விடயம் குறித்து சபாநாயகர் உறுதியான அறிவிப்பை விடுக்கவேண்டும் என்றும் மகிந்த அணியான கூட்டு எதிரணி சபையில் நேற்று வலியுறுத்தியது.

>> 24

## தமிழ் அரசு மையக் குழு கொழும்பில் கூடுகிறது

### ஜெனிவா விவகாரம், தேர்தல் முடிவுகள் ஆராயப்படலாம்

யாழ்ப்பாணம், பெப். 20
இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் மையக் குழுக் கூட்டம் எதிர்வரும் 24ஆம் திகதி சனிக்கிழமை கொழும்பில் நடைபெறவுள்ளது.
இந்தக் கூட்டத்தில் ஐ.நா. மனித உரிமைகள் சபையின் கூட்டத் தொடர் தொடர்பான விடயங்கள்,

>> 07

## ராஜித – விமல் வீரவன்ச சபையில் கடும் சர்ச்சை

கொழும்பு, பெப். 20
அமைச்சர் ராஜித சேனாரத்னவுக்கும் மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்சவுக்கும் இடையில் சபையில் நேற்றுக் கடும் வாக்குவாதம் ஏற்பட்டது.
நாடாளுமன்றத்தில் நேற்றுத் திங்கட்கிழமை நடைபெற்ற அரசியல் நெருக்கடிகள் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் தினேஸ் குணவர்தன முன்வைத்த சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை மீதான விவாதத்தின்

>> 24

## குழப்பங்களை ஏற்படுத்துபவர்கள் யார்?

### மக்கள் அடையாளம் காண்பர் என்கிறார் மாவை

யாழ்ப்பாணம், பெப். 20
வெற்றி பெற்ற இடங்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆட்சியமைக்கும். இதனை ஏற்றுக் கொள்ள முடியாத கட்சி அத்தகைய சபைகளில் குழப்பங்களை ஏற்படுத்தும். அவ்வாறு குழப்பங்களை ஏற்படுத்துபவர்கள் யார் என்பதை மக்கள் அடையாளம் காண்பர்.
இவ்வாறு இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை. சேனாதிராசா தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது,
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

>> 07

## பேசாமல் சம்பந்தனை பிரதமராக நியமியுங்கள்

### இப்படிச் சொல்கிறார் முருதெட்டுவே ஆனந்த தேரர்

கொழும்பு, பெப். 20
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனை தலைமை அமைச்சராக நியமித்து ஆட்சியை முன்னெடுங் கள். நிறைவேற்று அதிகாரத்தை கையில் வைத்துக் கொண்டு ரணிலுக்கு எதிராக நடவடிக்கை எடுக்காமல் பெயரளவில் மாத்திரமே மைத்திரி அரச தலைவராக இருக்கின்றார். இவ்வாறு முருதெட்டுவே ஆனந்த தேரர் தெரிவித்தார். அபயராம விகாரையில் நேற்றுத் திங்கட்கிழமை இடம் பெற்ற செய்தியாளர்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது.
தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனை தலைமை அமைச்சராக்கி ஆட்சியை முன்னெடுக்கு

>> 25

## கூட்டு அரசை மாற்றவேண்டும்: நிலைப்பாட்டில் மாற்றமில்லை

### எஸ்.பி.திஸநாயக்க தெரிவிப்பு

கொழும்பு, பெப். 20
கூட்டு அரசில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டுமென்ற சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் நிலைப்பாட்டில் எந்தவிதமான மாற்றமும் இல்லை. நாங்கள் அரச தலைவருடன் மிகவும் ஒத்துழைப்புடன் செயற்பட்டு கூட்டு அரசில் மிகப் பெரிய மாற்றத்தைச் செய்தே தீருவோம் என்று சுதந்திரக் கட்சியின் மூத்த உறுப்பினரும் அமைச்சருமான எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்தார்.
அரச தலைவர் செயலகத்தில், மைத்திரி தலைமையில் சுதந்திரக் கட்சி உறுப்பினர்களுடன் நடைபெற்ற சிறப்புக் கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது,
நாம் இன்று ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடி தொடர்பில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவிடம் மிக நீண்டநேரம் கலந்துரையாடினோம். அரச தலைவரின் தீர்மானங்களுக்கு ஒத்துழைப்பு வழங்கி அவரு

>> 07

## விபத்தில் காயமுற்ற முதியவர் சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார்

யாழ்ப்பாணம், பெப். 20
விபத்துக்குள்ளான நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட முதியவர் சிகிச்சை பயனின்றி 7 நாள்களின் பின்னர் நேற்று உயிரிழந்தார்.
யாழ்ப்பாணம், வண்ணார் பண்ணை மேற்கைச் சேர்ந்த செ.நந்தகுமார் வயது 63 என்பவரே இவ்வாறு உயிரிழந்தார்.
தனியார் நிறுவனம் ஒன்றில் பணிபுரியும் .நந்தகுமார் கடந்த 12ஆம் திகதி துவிச்சக்கர வண்டியில் சென்ற போது கொக்குவில் சந்தியில் விபத்துக்குள்ளானார். வேகமாக வந்த மோட்டார் ஸைக்கிள் அவரை மோதித்தள்ளியது என்று தெரிவிக்கப்பட்டது. விபத்துக்குள்ளான நந்தகுமாரை குறித்த மோட்டார் சைக்கிளின் சாரதி மீட்டு உடனடியாக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசா

>> 24

## ஐ.நா. அமர்வு இலங்கைக்கு இம்முறை பொறியாக அமையும

### திஸ்ஸ விதாரண எச்சரிக்கை

கொழும்பு, பெப். 20
எதிர்வரும் 26ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபை அமர்வில் இலங்கை கடும் நெருக்கடிகளுக்கு முகம்கொடுக்க நேரிடும். இவ்வாறு பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
தற்போதைய அரசின் மீதுள்ள அதிருப்தியை நடந்து முடிந்த உள்ளூராட்சி தேர்தலின் மூலம்

>> 07

## வடக்கில் இனவாதக் கும்பலின் ஆதிக்கம் அதிகரித்து வருகிறது

### சபையில் ஜே.வி.பி எச்சரிக்கை

கொழும்பு, பெப். 20
வடக்கில் இனவாதக் கும்பலின் ஆதிக்கம் அதிகரித்து வருவதை தேர்தலின் ஊடாக எம்மால் இனங்காண முடிந்தது. இதனை தெற்கு மக்கள் புரிந்து கொள்ள வேண்டும். இவ்வாறு மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திசநாயக்க தெரிவித்தார்.
நாடாளுமன்றத்தில் நேற்று மாலை இடம்பெற்ற சிறப்பு விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:

>> 25

## ரணில் பதவிதுறக்காவிடின் பெரும்போராட்டம் வெடிக்கும்

### கம்மன்பில முழக்கம்

கொழும்பு, பெப். 20
தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க உடனடியாக பதவி விலக வேண்டும். அல்லாதுபோனால் நீதிமன்றம் மற்றும் அரசியல் நடவடிக்கை மூலம் அவரை பதவி நீக்குவதற்கான வேலைத்திட்டங்களை முன்னெடுப்பதற்கு எதிர்பார்த்துள்ளோம். அவ்வாறும் அதனைச் செய்ய முடியாவிடத்து நாட்டில் மக்கள் போராட்டம் வெடிப்பதை தவிர்க்க முடியாதென மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்தார்.
கூட்டு எதிர்க்கட்சி ஏற்பாடு செய்த செய்தியாளர்கள்

>> 24

## தாஜுதீன் வழக்கில்

# தவறிய அழைப்பில் தடயம் தேடும் சி.ஐ.டி

கொழும்பு, பெப். 20
பிரபல றக்பி வீரர் வசிம் தாஜுதீன் படுகொலை விவகாரத்தில் கொலையாளிகள் தொடர்பிலான தகவல்களை வெளிப்படுத்த குற்றப் புலனாய்வுப் பிரிவு, அவரது அலைபேசிக்கு இறுதியாக வந்த தவறிய அழைப்பு தொடர்பில் அவதானம் செலுத்தியுள்ளது.
2012ஆம் ஆண்டு மே 17ஆம் திகதி அதிகாலை 12.32 மணிக்கு தவறிய அழைப்பு, 0773554441 எனும் இலக்கத்தில் இருந்து வந்துள்ளது.
தொலைபேசி இலக்கம் தொடர்பிலான தொலைபேசி கோபுர, தொழில் நுட்பத் தகவல்கள் உள்ளடங்கியதாக விரிவான பகுப்பாய்வு அறிக்கையை குற்றப் புலனாய்வுப் பிரிவினர் நாடியுள்ள நிலையில், அதனைப் பெற்றுக்கொடுக்க கொழும்பு மேலதிக நீதிவான் சாந்தனீ டயஸ், டயலொக் நிறுவனத்தின் பிரதான நிறைவேற்று அதிகாரி சுபுன் வீரசிங்கவுக்கு உத்தரவிட்டுள்ளார்.
குற்றப் புலனாய்வுப் பிரிவு டயலொக் நிறுவனத்திடம் நீதிமன்றம் ஊடாக கோரியுள்ள தகவல்களில், 8 கேள்விகளுக்கு முக்கியமாக விடை கோரியுள்ளது.

>> 07

# தொழில் செய்வதை தடுக்கிறது கடற்படை

## தலைமன்னாரில் மீனவர்கள் ஆர்ப்பாட்டம்





மன்னார், பெப்.20

**தமது வாழ்வாதாரத் தொழிலைச் செய்வதற்குத் தடை விதிக்க வேண்டாம் எனக் கோரி தலைமன்னார் மீனவர்கள் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். தலைமன்னார் துறைமுக பிரதான வீதி மறிக்கப்பட்டு காலை 9 மணியளவில் ஆரம்பிக்கப்பட்ட ஆர்ப்பாட்டம் மாலைவரை நடைபெற்றது.**

"நேற்றுத் தொழிலுக்குச் சென்ற எங்களை கடலுக்குச் செல்ல வேண்டாம் என்று கடற்படையினர் மறித்தனர். ஏன் நாம் தொழில் செய்யக் கூடாது என அவர்களிடம் கேட்டோம். கடலில் உள்ள திட்டுக்களில் பறவைகள் வந்து செல்கின்றன என்றும், அந்தத் திட்டுக்களில் தங்கி நின்று தொழில் செய்ய வேண்டாம் என்றும் கூறினார்கள். பறவைகள் சரணாலய உத்தியோகத்தர்களிடமும் இது பற்றிக் கேட்டோம். இரு தரப்பினரும் இது மேலிட உத்தரவு என்றனர். அதையடுத்தே நாம் ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தோம்." என்று ஆர்ப்பாட்டம் செய்த மீனவர்கள் தெரிவித்தனர். "காலங்காலமாக நாம் இங்கு தொழில் மேற்கொண்டு வருகின்றோம் இடையிடையே இவ்வாறான பிரச்சினைகள் ஏற்பட்டன. உரிய அதிகாரிகளிடம் பேசி தொழிலை மேற்கொண்டோம். இன்று (நேற்று) மீண்டும் தடை விதித்துள்ளனர். தென் பகுதி மீனவர்கள் எங்கு வேண்டுமானாலும் தொழில் செய்யலாம். நாங்கள் எங்களுக்கென்று கொடுக்கப்பட்ட குறுகிய வட்டத்துக்குள் கூட தொழில் செய்ய முடியாத நிலையில் உள்ளோம். பறவைகள் வாழ வழிசெய்யும் இவர்கள் ஏன் மனிதர்கள் வாழ விடுகிறார்கள் இல்லை. மன்னார் மாவட்ட கடற்றொழில் உதவிப் பணிப்பாளர் இங்கு வந்திருந்தார். அவர் உரிய பதில் எதுவும் தரவில்லை." என்றும் அவர்கள் குறிப்பிட்டனர். வேண்டும் வேண்டும் தீடை எமக்கே வேண்டும், போராடுவோம் போராடுவோம் தீடைக்காகப் போராடுவோம். போன்ற பல்வேறு வாசகங்கள் பொறிக்கப்பட்ட பதாகைகளையும் ஆர்ப்பாட்டக்காரர்கள் கைகளில் ஏந்தியிருந்தனர். சம்பவ இடத்துக்குச் சென்ற மன்னார் மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் பிரியந்த பீரிஸ் இது தொடர்பில் தான் கடற்படை அதிகாரிகளுடன் கலந்துரையாடி உரியதீர்வு பெற்றுத் தரப்படும் என்று கூறிச் சென்றார் என்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர். தலைமன்னார் பங்குத் தந்தை நவரட்ணம் போராட்டத்தில் ஈடுபட்ட மீனவர்களைச் சந்தித்துக் கலந்துரையாடினார். மக்களுக்கு இடையூறு ஏற்படாத வகையில் போராட்டத்தை இடைநிறுத்த வேண்டும் என்று அவர் கோரியதை அடுத்து மீனவர்கள் போராட்டத்தை இடைநிறுத்தினர். இன்று பங்குத் தந்தையின் தலைமையில் அந்தத் திட்டுக்களுக்குச் சென்று கரைவலைத் தொழிலைச் செய்வது என்றும் முடிவெடுக்கப்பட்டது. (ற-ரி)




## குருதி தான முகாம்

மட்டக்களப்பு,பெப்.20

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் தற்போது நிலவிவரும் குருதிப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதன் நோக்கில் காத்தான்குடி பள்ளிவாசல்கள் முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளனத்தின் ஏற்பாட்டில் காத்தான்குடி மருத்துவமனையில் குருதி தான முகாம் இடம்பெற்றது.

பொது நபர் ஒருவரின் அனுசரணையில் "மனித நேயம் உயிர் காக்கும்" எனும் தொனிப் பொருளில் காலை 7.00 மணிமுதல் பிற்பகல் 4.30 மணிவரை இடம்பெறறது.

இதில், ஆண், பெண் என 604 நபர்கள் குருதி வழங்கினர். கிழக்கு மாகாணத்தின் அதி கூடிய தொகை குருதியை ஒரே நாளில் தானமாக சேகரித்த குருதி வங்கி என்ற பெருமையை காத்தான்குடி தள மருத்துவமனை பெற்றுக் கொண்டதாக மருத்துவமனை அத்தியட்சகர் மருத்துவர் .MSM. ஜாபிர் தெரிவித்தார்.



## தீ விபத்தில் குடியிருப்பு பகுதி சேதம்

ஹற்றன்,பெப்.20

ஹற்றன், சேகுலர் வீதியில் உள்ள குடியிருப்புப் பகுதியில் திடீரெனத் தீப் பற்றிய சம்பவம் ஒன்று ஏற்பட்டது.

சம்பவ இடத்துக்கு வந்த பொலிஸார் தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர். தீப் பரவலினால் கூரைப் பகுதி முற்றாக எரிந்து நாசமாகியது.

நாட்டில் நிலவி வரும் அதி கூடிய வெப்பத்தின் காரணமாக குடியிருப்புக்கு பொருத்தப்பட்டிருந்த கூரைத் தகடுகள் தீப் பற்றியிருக்கலாம் என்று பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை அங்கிருந்தவர்களுக்கு காயங்கள் எதுவும் எற்படவில்லையெனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை ஹற்றன் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ற.ரி2)

## நீர்த்தாங்கியிலிருந்து தவறி வீழ்ந்தவர் காயம்

தென்மராட்சி,பெப்.20

நீர்த் தாங்கியில் வேலை செய்து கொண்டிருந்த இளைஞன் தவறி வீழந்து காயமடைந்தார்.

மதவாச்சி கரிகன்வெலவைச் சேர்ந்த நிஷாந்த (வயது23) என்ற இளைஞனே ஆபத்தான நிலையில் யாழ்.போதனா மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார் எனத் தெரிவிக்கப்பட்டது.

இச் சம்பவம் நேற்று தென்மராட்சி நாவற்குளிப் பகுதியில் இடம்பெற்றது. பகுதியில் நிர்மாணிக்கப்பட்டு வரும் 60 அடி உயர நீர்த்தாங்கியில் வேலை செய்து கொண்டிருந்தபோதே தவறி வீழ்ந்துள்ளார். (ற.ரி2,9)

## துப்பாக்கி வைத்திருந்தவர் கைது

கொழும்பு,பெப்.20

கலேவல, வககோட்டே பகுதியில் சட்ட விரோதமான முறையில் துப்பாக்கி வைத்திருந்தவர் கைது செய்யப்பட்டார்.

கலேவல பொலிஸ் பிரிவினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பிலேயே சந்தேக நபர் கைது செய்யப்பட்டார். சந்தேக நபரிடமிருந்து துப்பாக்கியொன்று பொலிஸாரினால் மீட்கப்பட்டது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கலேவல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ற.ரி2)

## வெவ்வேறு விபத்துக்களில் நால்வர் காயம்

தென்மராட்சி பெப் 20

தென்மராட்சிப் பிரதேசத்தில் நேற்றுக் காலை இடம்பெற்ற சாலை விபத்துக்களில் தாளையடி கத்தோலிக்க பங்குத் தந்தை உட்பட நால்வர் காயமடைந்தனர்.

இவர்களில் இருவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்..

சாவகச்சேரி மருத்துவமனைக்கு அருகில் இடம்பெற்ற சைக்கிள் மோட்டார் சைக்கிள் விபத்தில், தாளையடியிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிச் சென்ற கத்தோலிக்க மதகுரு அருட்பணி கபிரியேல் அருள்நேசன் அடிகள் (வயது58), மற்றும் சைக்கிளில் சென்ற சாவகச்சேரி பெரிய அரசடியைச் சேர்ந்த மார்க்கண்டு சரவணபவன் (வயது 67) ஆகியோர் காயமடைந்தனர்.

வரணியிலிருந்து யாழ்ப்பாணத்துக்குச் சென்று கொண்டிருந்தபோது, வேம்பிராய்ப் பகுதியில் சாலையின் குறுக்கே ஓடிய நாய்களுடன் மோட்டார் சைக்கிள் மோதியது.

இதில், அம்பிகைபாகன் உதயகுமார் (வயது38) என்பவர் காயமடைந்தார்.

கச்சாயிலிருந்து விடத்தற்பளைக்கு மகனுடன் மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த மோட்டார் சைக்கிளின் சக்கரம் பள்ளத்தில் இறங்கியதால் தூக்கி வீசப்பட்டதில் விபத்து ஏற்பட்டது.

இதில் விடத்தற்பளையைச் சேர்ந்த குணரத்தினம் குணமணி (வயது68) என்பவர் காயமடைந்தார்.

இவர்கள் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு இருவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (ற.ரி2,9)

## விபத்தில் பெண் சாவு 10 பேர் படுகாயம்

அனுராதபுரம்,பெப்.20

அனுராதபுரம் பதவிய பகுதியில், நேற்று இடம்பெற்ற விபத்தில் பெண்ணொருவர் உயிரிழந்ததுடன், 10 பேர் படுகாயமடைந்தனர்.

சிவனொளிபாதமலை யாத்திரைக்கு சென்று மீண்டும் திரும்பிக்கொண்டிருந்த வான் ரக வாகனமொன்று மின்சார கம்பத்தில் மோதியதிலேயே இந்த விபத்து இடம்பெற்றதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவத்தில் காயமடைந்தவர்கள் பதவிய மருத்துவமனையில் சேர்க்கப் பட்டனர்.

அதில் அறுவர் அனுராதபுரம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டனர்.

காயமடைந்தவர்களில் தேரர் ஒருவரும் உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (ற.ரி2)

# வவு. பேருந்து நிலையத்தில் கஞ்சாவுடன் ஒருவர் கைது

வவுனியா,பெப்.20

கிளிநொச்சியிலிருந்து கொழும்பு நோக்கி கேரளக் கஞ்சா கடத்திச்சென்றவரை வவுனியா பொலிஸார் நேற்று முன்தினம் இரவு 11.15மணியளவில் கைது செய்துள்ளனர்.

கிளிநொச்சியிலிருந்து கொழும்பு நோக்கி கஞ்சா கடத்துவதாக பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் வவுனியாபழைய பேருந்து நிலையத்தில் சந்தேகத்துக்கிடமாக நின்ற கிளிநொச்சி விவேகானந்த நபர் கிழக்கை சேர்ந்த நடராஜா பிரசன்னா (வயது 33) என்பவரின் பயணப்பொதியினை சோதனையிட்ட சமயத்தில் சுமார் 2கிலோ 10கிராம் எடையுடைய கேரளக் கஞ்சா பொலிஸாரால் கைப்பற்றப்பட்டது. குறித்த நபரை மேலதிக விசாரணைகளின் பின்னர் வவுனியா மாவட்ட நீதிவான் மன்றத்தில் முற்படுத்தவுள்ளனர் என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (எ-4)

# இந்துக்களுக்காக அஞ்சாது குரல் கொடுத்தவர் நீலகண்டன்

## ஆறு.திருமுருகன் தெரிவிப்பு

**அகில இலங்கை இந்து மாமன்றத்தின் தலைவர் கந்தையா நீலகண்டன் இந்துக்களுக்காக என்றும் அஞ்சாது குரல் கொடுத்து வந்தவர் என்று செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் தெரிவித்தார். கந்தையா நீலகண்டனின் உயிரிழந்ததை அடுத்து அவரால் அனுப்பிவைக்கப்பட்ட செய்திக்குறிப்பில் மேலும் உள்ளதாவது;**

அகில இலங்கை இந்து மாமன்றத்தின் தலைவரும், திருக்கேதீச்சர ஆலயத் திருப்பணிச் சபையின் தலைவரும் புகழ்பூத்த சட்டத்தரணியுமான கந்தையா நீலகண்டன் (நேற்று முன்தினம்) பிற்பகல் 2.30மணியளவில் கொழும்பில் உயிரிழந்தார். சிறந்த சமூக சமயசேவையாளராக விளங்கிய இவர் வடமராட்சி கரணவாயைப் பிறப்பிடமாகக் கொண்டவர். உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் பாடசாலையிலும், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியிலும் கற்று சட்டக் கல்லூரிக்குச் சென்று இளம் வயதிலேயே சட்டத்தரணியானவர். கடந்த ஐம்பது ஆண்டு காலமாகச் சட்டத்துறையிலும், அகில இலங்கை இந்து மாமன்றத்தின் வளர்ச்சியிலும் அயராது உழைத்தவர். இந்துக்களுக்காக என்றும் அஞ்சாது குரல் கொடுத்து வந்த இவர் இலங்கைச் சட்டத்தரணிகள் சங்கத்தின் உபதலைவராகவும், கொழும்பு இந்து வித்தியா விருத்திச்சங்கத் தின் தலைவராகவும் சிறந்த பணியாற்றியவர். நெருக்கடியான காலகட்டங்களில் வடக்கு கிழக்கு மாகாணத்தில் அகதிகளாக அல்லலுற்றவர்களுக்குப் பேருதவி புரிந்தவர். இன்றும் இலங்கை மனிதநேய அமைப்பின் செயலாளராகப் பல ஆதரவற்ற சிறுவர் இல்லங்களுக்கும், பல்கலைக்கழக மாணவர்களுக்கும் தொண்டாற்றி வந்தவர். இன்றும் சரஸ்வதி மண்டபத்தில் நடைபெறும் ஆன்மிக நிகழ்ச்சியை ஏற்பாடு செய்துவிட்டு தனது வீட்டுக்குச் சென்ற வேளையில் திடீரென மாரடைப்பால் உயிழந்துள்ளார். கொழும்பில் உள்ள நீலகண்டன் அன் நீலகண்டன் சட்ட ஆலோசனை நிறுவனத்தின் அதிபராகிய இவர் 16ஆம் திகதி 4ஆம் மாதம் 1947ஆம் ஆண்டு பிறந்தவர். இவரது மனைவி, பிள்ளைகள் மூவரும் சட்டத்தரணிகள் என்பது குறிப்பிடத்தக்கது என்றுள்ளது.

# முதியவர் சாவு

உறவினர் வீட்டுக்கு அதிகாலை புறப்பட்ட முதியவர் திசைமாறி அலைந்து திரிந்து மயங்கி வீழ்ந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு நேற்று முன்தினம் உயிழுந்தார்.

ஏழாலை மத்தி ஏழாலையைச் சேர்ந்த சு.தெய்வேந்திரம் (வயது -58) என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

வீட்டில் படுத்திருந்த அவர் கடந்த 13ஆம் திகதி அதிகாலை உறவினர் வீட்டுக்குச் செல்வற்காகப் புறப்பட்டு திசைமாறி அலைந்து திரிந்துள்ளார். குப்பிளான் பகுதியில் மயங்கி வீழ்ந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். சிகிச்சை பயனின்றி நேற்று முன்தினம் உயிரிழந்தார். இறப்பு விசாரணையை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி பிரேமகுமார் மேற்கொண்டார்., (21)

# மணல் ஏற்றிய குற்றச்சாட்டில்

## *4 உழவியந்திரங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன*

கிளிநொச்சி பெப் 20

அனுமதிப்பத்திரம் இன்றி மண்ல் ஏற்றிய நான்கு உழவியந்திரங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன என்று கிளிநொச்சி முல்லைத்தீவு மாவட்டப்பிரதி பொலிஸ்மா அதிபரின் சிறப்பு பிரிவினர் தெரிவித்தனர்

கிளிநொச்சி மாவட்டத்தின் தருமபுரம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கல்லாறுப் பகுதியில் அனுமதி இல்லாது மணல் ஏற்றப்படுகின்றது என பொலிஸாருக்குக் கிடைத்த ரகசியத் தகவலை அடுத்து கல்லாறு பகுதிக்கு நேற்றுமுன்தினம் சென்ற பொலிஸார் இரண்டு உழவியந்திரங்களை கைப்பற்றியுள்ளதோடு அவற்றின் சாரதிகளையும் கைது செய்துள்ளனர். மேலதிக விசாரணை மற்றும் நீதிமன்ற நடவடிக்கைக்காக தருமபுரம் பொலிஸ் நிலையத்தில் அவர்கள் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். அதேநேரம் உமையாள்புரம் பகுதியில் அனுமதிப்பத்திரம் இன்றி மணல் ஏற்றிய இரண்டு உழவியந்திரங்கள் கைப்பற்றப்பட்டு அவற்றின் சாரதிகளும் கைது செய்யப்பட்டுளு;ளனர். கைது செய்யப்பட்டவர்களும் உழவியந்திரங்களும் மேலதிக விசாரணை மற்றும் நீதிமன்ற நடவடிக்கைக்காக கிளிநொச்சி பொலிஸ் நிலையத்திலும் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக கிளிநொச்சி முல்லைத்தீவு. மாவட்ட பிரதி பொலிஸ்மா அதிபர் மகேஸ் வெலிக்கன்னவின் சிறப்பு பிரிவினர் தெரிவித்தனர். (எ-6)

# வலிகாமம் வடக்கு மக்களுக்கு உணவு உடை வழங்கி உதவினார் நீலகண்டன்

## வலி.வடக்கு மீள்குடியேற்ற புனர்வாழ்வுச் சங்கம் இரங்கல்

உயிரிழந்த கந்தையா நீலகண்டன் வலி.வடக்கில் இருந்து இடம்பெயர்ந்த மக்கள் உணவு உடைகளுக்கு மிகவும் துன்பப்பட்ட வேளையில் எமது கோரிக்கையை ஏற்று எமக்கு குறிக்கப்பட்ட காலம்வரை தொடர்ந்து உணவு, உடை வழங்கி உதவியவர் என்று வலி.வடக்கு மீள்குடியேற்ற புனர்வாழ்வுச் சங்கம் தெரிவித்தது.

அகில இலங்கை இந்து மாமன்றத்தின் தலைவரும், மூத்த சட்டத்தரணியுமான கந்தையா நீலகண்டன் உயிரிழந்ததை அடுத்து குறித்த சங்கம் அனுப்பிவைத்த இரங்கல் செய்தியிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் உள்ளதாவது; அகில இலங்கை இந்துமாமன்றத் தலைவர் கந்தையா நீலகண்டன் ஐயாவின் மறைவுச் செய்தி எம்மை ஆழ்ந்த கவலைக்கு உள்ளாக்கியது. துயர்தீர்த்த உத்தமரின் மறைவுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை மிகவும் கவலையுடன் தெரிவித்துக்கொண்டு அன்னாரின் ஆத்மா சாந்தி அடையஇறைவனை வேண்டி நிற்கின்றோம் என்றுள்ளது. (21)

# நீலகண்டனின் இறப்பு மக்களுக்கு பேரதிர்ச்சி

அகில இலங்கை இந்து மாமன்றத் தலைவர் கந்தையா நீலகண்டன் உயிரிழந்த செய்தி மனம் ஏற்றுக்கொள்ள மறுக்கும் பேரதிர்ச்சி என்று இந்து சமய அலுவல்கள் அமைச்சர் .டி.எம்.சுவாமிநாதன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் அனுப்பி வைத்த செய்திக் குறிப்பில் மேலும் உள்ளதாவது; செயற்கரிய செய்தோர் பெரியோர் என்னும் வாக்குக்கமைய அமரர் கந்தையா நீலகண்டன் சமயத்துக்காகவும், சமூகத்துக்காகவும் உழைத்த பெருந்தகையாளன் என்பதை அறிந்தவன் என்ற வகையில் அவரின் பிரிவை எம்மினத்தின் பேரிழப்பாக எடுத்துக் கொள்கிறேன். இவர் முன்னெடுத்த பணிகள் மகத்தானவை. தமிழினத்துக்கும் இந்து மதத்துக்கும் சேவை புரிவோர் மத்தியில் இவரது இடைவெளியை நிரப்புவது கடினமானது. சமயத்துக்காகவும், சமூகத்துக்காகவும் தன் வாழ்நாளின் பெரும் பகுதியை அர்ப்பணித்த அன்னாரது பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தாருக்கு ஆறுதல் சொல்வதோடு, அன்னாரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றேன் என்றுள்ளது. (21)

# கொள்கைப் பற்றாளனாக விளங்கியவர் நீலகண்டன்

## *ஜனநாயக மக்கள் முன்னணி தெரிவிப்பு*

தமிழ் பேசும் சமூகம் ஒற்றுமையாக வடக்கு கிழக்கு, மேலகம், மலையகம் என்பன ஒரே குடையின் கீழ் ஒற்றுமையாக பயணிக்க வேண்டும் என்ற ஆணித்தரமான தூர நோக்கு கொள்கைப் பற்றாளனாக விளங்கியவர் அமரர் கந்தையா நீலகண்டன். இவ்வாறு ஜனநாயக மக்கள் முன்னணியினர் தெரிவித்தனர்.

நீலகண்டனின் உயிரிழப்பை அடுத்து ஜனநாயக மக்கள் முன்னணியினரால் அனுப்பிவைக்கப்பட்ட இரங்கல் செய்தியில் மேலும் உள்ளதாவது;

தமிழ் பேசும் மக்களின் ஒரு நேரிடையான குரலாகவும் அவர்களின் துயரங்களை தற்துணிவுடன் வெளிக்கொணர்ந்தவராகவும் நேர்மையான அரசியலுக்கு ஆதரவுடன் தமிழ், இந்து மத விருட்ச வளர்ச்சிக்கு தன்னை அர்ப்பணித்தவருமான அமரர் கந்தையா நீலகண்டனுக்கு க்கு எமது கண்ணீர்க் காணிக்கைகள் சமர்ப்பணமாகுக.

பொது அமைப்புச் செயற்பாடுகளுக்கு அப்பாற்பட்டு வட கிழக்கு, மேலக, மலையக அரசியலில் நேர்மையான அரசியல் வாதிகளுக்கு ஆதரவு வழங்கும் தற்துணிவுடன் செயற்பட்டு ஒரு முதுகெலும்புள்ள ஒரு மனிதனாக தன்னை புடம் போட்டு காட்டிய பெருமை வரலாற்றின் ஒரு மைல் கல். அன்னாருக்கு எமது கண்ணீர் அஞ்சலிகளை சமர்ப்பணம் ஆக்குவதோடு குடும்பத்தார், உற்றார், உறவினர்களுக்கும் எமது அஞ்சலிகள் உரித்தாகட்டும் என்றுள்ளது. (21)

### அகில இலங்கை இந்து மாமன்றத்தின் தலைவர்

# நாட்டின் பல்வேறு முரண்பாடுகளுக்கு எதிராகவும் கண்டனம் வெளியிட்டவர்

## *இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம் தெரிவிப்பு*

அகில இலங்கை இந்து மாமன்றத்தின் தலைவரும், மூத்த சட்டத்தரணியுமான அமரர் கந்தையா நீலகண்டன் இந்து மதத்துக்கு எதிரான அடக்குமுறைகளுக்கு எதிராக மட்டுமன்றி நாட்டில் நடைபெறும் பல்வேறு முரண்பாடுகளுக்கு எதிராகவும் துணிவோடு கண்டனம் வெளியிட்டு வந்தார். என்று இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம் தெரிவித்தது.

இது தொடர்வில் திணைக்களத்தின் பணிப்பாளர் அ.உமாமகேஸ்வரன் அனுப்பிவைத்துள்ள இரங்கல் செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது;

இவர் கொழும்பு தமிழ்ச் சங்கத் தலைவராக உறுப்பினராக, இலங்கை மனித நேய அமைப்பின் செயலாளராக, இனப் பிரச்சினைக்கு இணக்கம் காணும் குழு உறுப்பினராக இருந்து சிறப்பு மிக்கதோர் பணியாற்றியதோடல்லாமல் சிறுவர் இல்லங்களுக்கான மனிதநேய உதவிகள், பல்கலைக்கழகங்களைச் சேர்ந்த வறிய மாணவர்களின் முன்னேற்றத்துக்கான உதவிகள், போர்க்காலச் சூழலில் வடக்குக்கிழக்கு பாதிக்கப்பட்ட வேளையில் அவர் நல்கிய வாழ்வாதார உதவிகள் எனச் சிறந்ததோர் சமூகத் தொண்டனாக வலம் வந்தார். அத்துடன் நின்றுவிடாது ஆக்கபூர்வமானதொரு முடிவு கிடைக்கும்வரை தன்னை அர்ப்பணித்துப் போராடும் மனவுறுதிகொண்டவராகவும் விளங்கினார். இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் வளர்ச்சிப் பாதையிற் பக்கபலமாக நின்று செயற்பட்டார், அன்னாரது பிரிவாற் துயருற்றிக்கும் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரது ஆத்மா சாந்தியடையப்பிரார்த்திக்கின்றோம் என்றுள்ளது. (21)

# சிப்பாயின் சடலம் மீட்பு

முல்லைத்தீவு, பெப். 20

முல்லைத்தீவு கொக்கிளாய் 19ஆவது கஜபா றெஜிமன்ட் படைமுகாமில் இருந்து சிப்பாய் ஒருவர் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

அவரது சடலம் மாவட்ட மருத்துவமனையில் உடற்கூற்றுப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்ட பின்னர் நேற்றுமுன்தினம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. கடந்த வெள்ளிக்கிழமை அவர் சடலமாக மீட்கப்பட்டிருந்தார்.

ஹரண பகுதியைச் சேர்ந்த ஜே.விஜயவர்த்தன (வயது 32) என்ற கோப்ரலே சடலமாக மீட்கப்பட்டார். விசாரணை தொடர்வதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (எ-ரி3)

# அலங்கார உற்சவம்

உரும்பிராய் வடக்கு, நரியன் தோட்ட மஹாமாரி அம்மன் (பேச்சி அம்மன்) ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் இன்று செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகின்றது.

தொடர்ந்துநடைபெறும்திருவிழாவில் எதிர்வரும் 2ஆம் திகதி வைரவர் மடையும், 18ஆம் திகதி அம்மன் ஊர்வல கிராம பிரதிட்ஷணமும் நடைபெறும். (எ-4)

## ‘நினைவுகளுடன் பேசுதல்’ நிகழ்வு இன்று இடம்பெறும்

யாழ்ப்பாணம்,பெப்.20
எழு கலை இலக்கியப் பேரவையின் ஏற்பாட்டில் பு.சத்தியமூர்த்தியின் 9ஆவது வருட நினைவு தினத்தை முன்னிட்டு ‘நினைவுகளுடன் பேசுதல்’ நிகழ்வு இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதன் தலைமையில் யாழ்ப்பாணம் இந்து ஆரம்பப் பாடசாலையில் இன்று செவ்வாய்க்கிழமை மாலை 3 மணிக்கு இடம்பெறவுள்ளது.
நிகழ்வில் ‘நினைவுகளைப் பேசுதல்’ எனும் தலைப்பில் ஊடகவியலாளர் இளங்கீரனும் ‘காலத்தைப் பேசுதல்’ எனும் தலைப்பில் கலாநிதி கே.ரி கணேசலிங்கமும் உரையாற்றவுள்ளனர்.
அனைவரையும் வருகை தருமாறு ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (எ-4)

## மெய்வன்மைப் போட்டி



சாவகச்சேரி பெப் 20
சாவகச்சேரி கச்சாய் சாலை குழந்தையேசு முன்பள்ளிச் சிறார்களின் மெய்வன்மைப் போட்டி புனித லிகோரியார் ஆலய முன்றலில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.
முன்பள்ளி அபிவிருத்திச் சங்கத் தலைவர் தலைமையில் நடைபெற்ற போட்டிகளுக்கு விருந்தினர்களாக ஆலயப் பங்குத் தந்தை அருட்பணி றெஜி சௌந்தரா மற்றும் சாவகச்சேரி லயன்ஸ் கழகத் தலைவர் லயன் உ.சிசில் றெமிண்டஸ் ஆகியோர் கலந்து கொண்டனர் என தெரிவிக்கப்பட்டது. (எ9)



மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தியாலயத்தின் இல்ல மெய்வன்மைத் திறனாய்வுப் போட்டிகள் அதிபர் க.உதயகுமாரன் தலைமையில் அண்மையில் நடைபெற்றன. விருந்தினர்கள் மங்கள விளக்கேற்றுவதைப் படத்தில் காணலாம். (எ-9)



வலி. கிழக்கில் வாளிச் சின்னத்தில் போட்டியிட்டு நான்கு உறுப்பினர்களைப் பெற்றுக்கொண்ட கா. கதிர்காமநாதன் (செல்வம்) தலைமையிலான சுயேட்சைக் குழுவினர் தங்களுக்கு வாக்களித்த மக்களுக்கு வீடுவீடாகச் சென்று நன்றி தெரிவித்தனர். இந்த சம்பவம் அண்மையில் இடம்பெற்றது.

### ஒன்றுவிட்ட சகோதரியான

# சிறுமியை வன்புணர்ந்தவருக்கு பத்து வருடங்கள் கடூழியச் சிறை

### யாழ்ப்பாண மேல்நீதிமன்று விதித்தது

யாழ்ப்பாணம், பெப். 20
ஒன்றுவிட்ட தங்கையான சிறுமியை வன்புணர்ந்து தாயாக்கிய அண்ணனுக்கு 10 வருடங்கள் கடூழியச் சிறைத்தண்டனை விதித்து உத்தரவிட்டது யாழ்ப்பாண மேல்நீதிமன்று. பாதிக்கப்பட்ட சிறுமிக்கு 2 லட்சம் ரூபா இழப்பீடு வழங்க வேண்டும் என்றும் மேல்நீதிமன்று தனது உத்தரவில் தெரிவித்தது.

பருத்தித்துறை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றிருந்தது. குறித்த குற்றவாழி குடும்பத் தலைவர். அவர் சிறுமியை இரண்டு தடவைகள் வன்புணர்ந்துள்ளார். சம்பவம் பொலிஸ் நிலையத்துக்குத் தெரிவிக்கப்பட்டது.
சிறுமியின் வாக்கு மூலத்தின் அடிப்படையில் குடும்பத்தலைவர் கைது செய்யப்பட்டார். பருத்தித்துறை நீதிவான் மன்றில் சுருக்கமுறையற்ற விசாரணைகள் இடம்பெற்றன. சந்தேகநபர் விளக்கமறியலில் வைக்கப்பட்டார். வழக்கேடு சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு அனுப்பப்பட்டதும் சந்தேகநபர் பிணையில் விடுவிக்கப்பட்டார்.
சிறுமியை இரண்டு தடவைகள் வன்புணர்வுக்கு உட்படுத்திய குற்றச்சாட்டில் சட்டமா அதிபர் திணைக்களம் யாழ்ப்பாண மேல் நீதிமன்றில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்தது. மேல்நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் முன்னிலையில் விசாரணை இடம்பெற்றது.
எதிரி சார்பில் மன்றில் முற்பட்ட சட்டத்தரணி, “தங்கை முறையான சிறுமியை வன்புணர்வுக்கு உட்படுத்தியமைக்காக தற்போது எதிரி மனவருத்தம் அடைகிறார். அவர்தன் மீதுசுமத்தப்பட்ட இரண்டு குற்றச்சாட்டுகளையும் ஏற்றுக்கொள்கிறார். அத்துடன் எதிரி 5 பிள்ளைகளின் தந்தை. எனவே அவரின் குடும்பநிலையைக் கருத்திற்கொண்டு எதிரிக்கு குறைந்த பட்ச தண்டனை வழங்க வேண்டும்” என்று மன்றில் கருணை விண்ணப்பம் செய்தார்.
“எதிரி தனது குற்றத்தை ஏற்றுக்கொண்டாலும் தங்கை முறையான சிறுமியைத் தாய்மை ஆக்கிவிட்டார். அதனால் அநரிச் சிறுமிக்குத் தற்போது ஒரு பெண் குழந்தை உள்ளது. எதிரி குற்றம் புரியும்போது, சட்டமுறையான திருமணத்தின் ஊடாக 3 பிள்ளைகளுக்கு தந்தையாக இருந்துள்ளார். எதிரி புரிந்துள்ள குற்றத்துக்கு 7 வருடங்கள் தொடக்கம் 20 வருடங்கள் வரை சிறைத்தண்டனை விதிக்க முடியும். எனவே எதிரிக்கு அதிகூடிய தண்டனை விதிக்க வேண்டும்” என்று அரச சட்டவாதி நாகரட்ணம் நிஷாந் மன்றில் விண்ணப்பம் செய்தார்.
இரு தரப்பு விண்ணப்பங்களையும் பரிசீலித்த நீதிபதி “தங்கை முறையான சிறுமியை வன்புணர்வுக்கு உட்படுத்தி தாய்மையடையச் செய்தமைக்காக 10 வருடங்கள் கடூழியச் சிறைத்தண்டனை விதிக்கப்படுகின்றது. எதிரி அதே குற்றத்தை மீளவும் புரிந்தமைக்காக அதற்கும் 10 வருடங்கள் கடூழியச் சிறைத்தண்டனை விதிக்கப்படுகின்றது. இரண்டு தண்டனைகளையும் ஏக காலத்தில் எதிரி அனுப்விக்க முடியும்” என்று தீர்ப்பில் தெரிவித்தார்.
பாதிக்கப்பட்ட சிறுமிக்கு 2 லட்சம் ரூபா இழப்பீடு வழங்கவேண்டும். அதனை வழங்கத் தவறின் 2 வருடங்கள் கடூழியச் சிறைத்தண்டனை அனுபவிக்க வேண்டும். தண்டமாக 10 ஆயிரம் ரூபா செலுத்த வேண்டும். அதனை செலுத்தத் தவறின் 2 மாதங்கள் சிறைத்தண்டனை அனுபவிக்க வேண்டும் என்று நீதிபதி தனது தீர்ப்பில் தெரிவித்தார். (4-37)

## தனியார் பேருந்து சேவை ஆரம்பம்

யாழ்ப்பாணம், பெப். 20
மிருசுவில் வடக்கு பொதுச்சந்தை மக்களின் நீண்ட கால கோரிக்கைக்கு இணங்க தனியார் பேருந்து சேவை தென்மராட்சி சிற்றூர்தி சங்கத் தலைவரின் தலைமையின் கீழ் நேற்றுமுன்தினம் முதல் ஆரம்பித்து வைக்கப்பட்டது.
இந்த சேவையானது தினமும் மிருசுவில் வடக்கு பொதுச் சந்தையில் இருந்து யாழ்ப்பாணம் வரை மூன்று நேர சேவையாக இடம்பெறும். ஏ-4 முதன்மை வீதியில் இருந்து இந்த கிராமம் 4 கிலோமீற்றர் தூரத்தில் அமைந்துள்ளது. மக்களின் போக்குவரத்துப் பிரச்சினையை தீர்த்து வைக்கும் வகையில் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்று தென்மராட்சி தனியார் பேருந்து சங்கத் தலைவர் தெரிவித்தார். (எ-8)




## மெய்வன்மை போட்டி

யாழ்ப்பாணம், பெப்.20
யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வன்மை விளையாட்டுப் போட்டி கல்லூரி மைதானத்தில் இன்று செவ்வாய்க்கிழமை மதியம் ஒரு ணிக்கு நடைபெறவுள்ளது.
கல்லூரி அதிபர் மி.விமலநாதன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் முதன்மை விருந்தினர்களாக வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன் மற்றும் கொக்குவில் மேற்கு சி.சி.த.க பாடசாலை ஆசிரியர் கிருபாஹரி இளங்கோவன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (எ)

## இறைத்தியான வழிபாடு

யாழ்ப்பாணம், பெப். 19
இந்தியாவின் எம்மாவுஸ் இறைத்தியான இயக்குனர் அருட்தந்தை அகஸ்ரின் மொண்டகாட் அடிகளாருடன் அருட்தந்தை றபேல் அடிகளார் இணைந்து நடத்தும் இறைத்தியான குணமாக்கல் வழிபாடு யாழ்ப்பாணம் இறைத்தியான இல்லத்தில் (பழைய பூங்கா வீதி மறவகுளம் முன்பாக) நாளை புதன்கிழமை காலை 8.30 மணியிலிருந்து 12.30 மணிவரை நடைபெறவுள்ளது. அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அருட்.பணி.அ.யோறன்ஸ் கேட்டுள்ளார்.

## திருட்டு

கோப்பாய்.பெப்.20
கடந்த வியாழக்கிழமை வீட்டுக்காரர் வீட்டில் இல்லாததைப் பயன்படுத்தி திருடர்கள் வீட்டின் முன் பக்கக் கதவை உடைத்து உள்ளே சென்று பணம் மற்றும் நகைகளை திருடிச் சென்றுள்ளனர்.
இந்தச் சம்பவம் கடந்த வியாழக்கிழமை கோப்பாய் வடக்கில் பட்டப்பகல் வேளையில் இடம்பெற்றுள்ளத்து.
இரண்டு பவுண் நகை திருடப்பட்டுள்ளது. இது தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர். (எ17)

## நற்சிந்தனை பாராயணம்

யாழ்ப்பாபணம், பெ.20
யோகர் சுவாமிகள் அருளிச் செய்த நற்சிந்தனைப் பாடல்கள் பாராயணம் செய்யும் நிகழ்வு நல்லூர் தேரடி நாயன்மார் குருபூசை மடத்தில் இன்று முற்பகல் 10 மணிக்கு இடம்பெறவுள்ளது.
பொன்னம்பலவாணர் ஐயா தலைமையில் இடம்பெறும் நிகழ்வில் அனைவரையும் கலந்துகொள்ளுமாறுஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (எ)

## மதிப்பளிப்பு

அளவெட்டி,பெப்.20
அளவெட்டி பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம் நடத்தும் ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களை மதிப்பளிக்கும் நிகழ்வு சங்க அலுவலகத்தில் இன்று செவ்வாய்க்கிழமை 3 மணிக்கு இடம்பெறவுள்ளது. (எ-17)

## கச்சதீவு...

இந்திய இலங்கை யாத்திரிகர்கள் ஒன்று கூடுகின்ற கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய திருவிழா எதிர்வரும் 23ஆம் திகதி நடைபெறவுள்ளது. இந்தியாவில் இருந்து 5 ஆயிரம் பேரும், இலங்கையிலிருந்து 8 ஆயிரம் பேரும் பங்கேற்பர் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்தியாவில் இருந்து வரும் யாத்திரிகள், பன்னாட்டுக் கடல் எல்லையில் இருந்து கடற்படையின் பாதுகாப்புடன் அழைத்து வரப்படுவர். கச்சதீவு திருவிழாவில் முதல் தடவையாக, தமிழ் மொழியுடன், சிங்கள மொழியிலும் திருப்பலி ஆராதனை நடத்தப்படவுள்ளது.

காலி மறைமாவட்ட ஆயர் ரேமன்ட் விக்கிரமசிங்க ஆண்டகை சிங்கள மொழியில் ஆராதனையை நிகழ்த்துவார்.

கச்சதீவு திருவிழாவில், ஏனைய பகுதிகளைச் சேர்ந்த மக்களையும் பங்கேற்க ஊக்குவிக்கும் வகையிலேயே சிங்கள மொழியிலும் ஆராதனை நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

திருவிழாவில் பங்கேற்கும் பக்தர்கள் இரண்டு நாள்கள் தங்குவதற்கான வசதிகளையும், உணவு வசதிகளையும் கடற்படையினர் ஏற்படுத்திக் கொடுக்கவுள்ளனர் என்று கடற்படையின் பேச்சாளர் தெரிவித்தார். (ற-5)

## தமிழீழத்தை...

மாநாடு நடத்த எவ்வளவு சிரமப்பட்டு இருப்பார்கள் என்று தெரியும். இலங்கை மக்களுக்கு தமிழீழம் என்பது முக்கியமானது. ஈழத்தில் அப்பாவி தமிழர்களை சிங்கள அரசு கொன்று குவித்தது. ஈழ மக்களுக்கு முறையான விடுதலை இல்லை. பல பிரச்சினைகளை இன்னும் சந்தித்துக் கொண்டிருக்கிறார்கள்.

இந்த மாநாட்டின் மூலம் தமிழீழம் அமைய விரைவில் அரசியல் தீர்வு வர வேண்டும். ஏன் இந்த மக்களுக்கு சரியான நீதி கிடைக்க நடவடிக்கை எடுக்கவில்லை. இலங்கையில் இனப்படுகொலை நடந்தது கொடூரமானது. இது குறித்து பன்னாட்டு விசாரணை நடத்துவோம் என்று சொல்லியும் நடவடிக்கை எடுக்கவில்லை.

தமிழர்கள் உணர்ச்சிவசப்படக்கூடியவர்கள் தான். இலங்கையில் தமிழீழம் அமைவது தான் நோக்கம். அதற்கான அரசியல்தீர்வு, அதற்கான முயற்சி தான் இந்த மாநாடு -என்றார். (ற- 5)

## தாமரை...

அவர் தெரிவித்ததாவது:

முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவின் வாக்கு வீதம் ஒவ்வொரு தேர்தலிலும் குறைந்துகொண்டே வந்துள்ளது. 2015ஆம் ஆண்டு அரச தலைவர் தேர்தலிலும் நாடாளுமன்றத் தேர்தலிலும் மக்கள் கொடுத்த ஆணையின் பிரகாரம் நல்லாட்சி அரசு தொடர்ந்து பயணிக்க வேண்டும்.

உள்ளூராட்சித் தேர்தலில் சிறிலங்கா பொதுமக்கள் முன்னணி 44.69 சதவீத வாக்குகளைப் பெற்றுள்ள போதிலும் இவை பொய்கள் மூலமாகப் பெறப்பட்ட வாக்குகளாகும். 2015ஆம் ஆண்டு அரச தலைவர் தேர்தலில் மகிந்த ராஜபக்சவுக்கு கிடைத்த வாக்குகளை விடக் குறைவுதான். இந்தத் தேர்தலிலும் அவர் வெற்றி பெறவில்லை.

தேர்தல் பரப்புரையின் போது, தமிழீழக் கதைகளைக் கூறியே சிங்கள மக்களை ஏமாற்றி இந்த வாக்குகளைப் பெற்றுள்ளனர். ஐக்கிய தேசியக் கட்சிக்கும், சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும் அளிக்கப்படும் வாக்குகள் தமிழீழம் உருவாக வழியை உருவாக்கும் என்று சிங்கள மக்களை ஏமாற்றி நம்பவைத்திருக்கிறீர்கள்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரான நாங்கள் தமிழீழத்தைக் கேட்கவில்லை. ஒன்றுபட்டு ஒரே நாட்டுக்குள் அதிகாரங்களைப் பகிர்ந்து கொள்ளுமாறு தான் கேட்கிறோம்.

ஆனால், நீங்கள் இதுபோன்று தொடர்ந்து நடந்து கொள்வீர்களேயானால், ஈழம் மலர்ந்து விடும். தாமரை மொட்டில் இருந்துதான் அந்த ஈழம் மலரும் - என்றார். (ற-5)

## ஓர் ஆண்டு...

என்று காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

காணாமல் ஆக்கப்பட்டவர்களை விடுவிக்கவும், வெளிப்படுத்தவும் வலியுறுத்தி வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தொடர் போராட்டங்கள் நடத்தப்பட்டுவருகின்றன. கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், திருகோணமலை ஆகிய இடங்களில் இந்தப் போராட்டங்கள் உறவினர்களால் நடத்தப்படுகின்றது. இந்த விடயத்தில் அரசு தீர்வைத் தரும் வரை போராட்டத்தைக் கைவிடப் போவதில்லை என்று அவர்கள் தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சியில் கடந்த ஆண்டு பெப்ரவரி மாதம் 20ஆம் திகதி கந்தசுவாமி ஆலயம் முன்பாகக் கொட்டகை அமைத்துப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டது. அன்றுமுதல் வீதியோரத்தில் தமது உறவுகளுக்காகப் பல்வேறு இடர்பாடுகளின் மத்தியிலும் உறுதியுடன் மக்கள் போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் பல்வேறு தரப்பினர் சந்தித்துக் கலந்துரையாடினர். தமிழ் அரசியல் தலைவர்கள், தெற்கு அரசியல் தலைவர்கள், வெளிநாட்டு தூதர்கள் எனப் பலதரப்பினர் சந்தித்துச் சென்றபோதும் காணாமல் ஆக்கப்பட்டோர் விடயத்தில் காத்திரமான நடவடிக்கைகள் எவையும் இதுவரை எடுக்கப்படவில்லை.

கிளிநொச்சியில் ஆரம்பிக்கப்பட்ட போராட்டம் இன்றுடன் ஒரு ஆண்டைக் கடக்கின்றது. அதை முன்னிட்டு போராட்டத்தில் ஈடுபடும் உறவுகள் இன்று கவனவீர்ப்புப் போராட்டம் ஏற்பாடு செய்துள்ளனர். இந்தப் போராட்டத்துக்குப் பல தரப்பினரும் ஆதரவு தெரிவித்துள்ளனர்.

### ஆதரவு

கிளிநொச்சி நகர வர்த்தக சங்கம், கிளிநொச்சி பொதுச் சந்தை வர்த்தக சங்கம், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கிளிநொச்சி மாவட்ட இளையோர் அணி, கிளிநொச்சி மாவட்ட திறன்விருத்தி அமையம், கரைச்சி கிராம அபிவிருத்திச் சங்கம், கரைச்சி கிராம மாதர் அபிவிருத்திச் சமாசம், விவேகானந்தநகர் கிராம அபிவிருத்திச் சங்கம், விவேகானந்தநகர் கிழக்கு கலைமகள் சனசமூக நிலையம் என்பன இந்தப் போராட்டத்துக்கு ஆதரவளிக்கின்றோம் என்று உதயனுக்குத் தெரிவித்தனர். தாம் போராட்ட இடத்துக்குச் சென்று அவர்களுடன் இணைந்து கொள்ளவுள்ளோம் என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

கிளிநொச்சியில் நடத்தப்படவுள்ள கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டத்துக்கு ஆதரவு வழங்குவோம் என்று தெரிவித்துள்ளனர் கிளிநொச்சியில் போராட்டம் நடத்தும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள்.

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் நடத்தும் இந்தப் போராட்டத்துக்கு முழுமையான ஆதரவு வழங்குகின்றோம் என்று தெரிவித்துள்ளார் தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ.ஆனந்தசங்கரி.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் விடயத்தில் அரசும், மக்கள் பிரதிநிதிகளும் பாராமுகமாக இருப்பது நாட்டுக்கே பெரும் அவமானம். ஒரு நியாயமான தீர்வை வழங்காது காலங்கடத்தி இழுத்தடித்துத் தற்போது கைவிட்டுள்ளமையை எவராலும் ஏற்றுக்கொள்ள முடியாது. தமிழ் மக்கள் பிரதிநிதிகளின் கையலாகாத்தனத்தை எண்ணி அவர்கள் வெட்கித் தலைகுனிய வேண்டும் என்று அவர் கூறியுள்ளார்.

### சந்திப்பு

அதேவேளை முல்லைத்தீவில் போராட்டம் நடத்திவரும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களை சுவிஸ் நாட்டைச் சேர்ந்த மனித உரிமை ஆர்வலர் யெவிஸ் பௌனி சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

காணாமல் ஆக்கப்பட்டவர்கள் பிரச்சினையை எதிர்வரும் மார்ச் மாதம் நடைபெறவுள்ள மனித உரிமைகள் சபை அமர்வில் உலகுக்கு வெளிச்சம்போட்டுக் காட்ட ஏற்பாடு செய்யப்படும் என்று அவர் கூறியுள்ளார். (ற-4.ரி3)

## உருளைக்கிழங்கு...

உருழைக்கிழங்கும் வடக்குச் சந்தைகளில் உள்ளமையே அதற்குப் பிரதான காரணமாகவுள்ளது. இறக்குமதி வரியை அதிகரித்தால் அல்லது அவற்றை வடக்கு மாகாணத்துக்கு இறக்குமதி செய்வதைத் தடுத்து நிறுத்தினால் வடக்கிலுள்ள உருழைக்கிழங்குச் செய்கையாளர்கள் அதிகளவில் வருமானம் பெறுவர்.

### பயன்இல்லை

வரி அதிகரிப்புத் தொடர்பில் அரச தலைவருக்குக் கடிதம் அனுப்பிப் பல வாரங்கள் கடந்துவிட்டன. அதற்கான பதில் அரச தலைவரிடமிருந்து இன்றுவரை கிடைக்கவில்லை. இந்த விடயத்தில் அரச தலைவர் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வடக்கிலுள்ள மாவட்டங்களின் விவசாய அமைப்பினர் கோரிக்கை விடுக்கின்றனர்.

### அதிக விளைச்சல்

இந்தமுறை யாழ்ப்பாண மாவட்டத்தில் மாத்திரம் 2 ஆயிரத்து 816 மெற்றிக்தொன் உருளைக்கிழங்கு அறுவடையை எதிர் பார்ப்பதாக மாவட்டச் செயலக விவசாயப் பிரிவு தெரிவித்துள்ளது.

"யாழ்ப்பாண மாவட்டத்தில் கடந்த வருட உருளைக்கிழங்குச் செய்கைக்கான அறுவடை தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது. விவசாயிகள் கடந்த வருடங்களிலும் இந்தச் செய்கையில் ஆர்வம்காட்டினர். மானிய விலையில் உருளைக்கிழங்கு விதைகள் வழங்கப்பட்டன. கடந்த வருடம் ஆயிரத்து 400 விவசாயிகள் 94 ஹெக்ரயரில் உருளைக்கிழங்கு செய்கையில் ஈடுபட்டனர். அவர்களுக்கு ஒரு அந்தர் விதை உருளைக்கிழங்கு அரை மானிய விலையில் 7 ஆயிரம் ரூபாவுக்கு வழங்கப்பட்டது. ஒரு விவசாயிக்கு நான்கு அந்தர் விதை உருளைக்கிழங்கு வழங்கப்பட்டது" என்று மாவட்டச் செயலகத்தினர் தெரிவித்தனர்.

திருநெல்வேலி, சுன்னாகம், மருதனார்மடம், அச்சுவேலி, புன்னாலைக் கட்டுவன், ஊரெழு, பண்டத்தரிப்பு, ஆவரங்கால், நீர்வேலி ஆகிய பிரதேசங்களில் அறுவடை நடக்கின்றது. ஒரு கிலோ உருளைக்கிழங்கு 40 ரூபா முதலே வியாபாரிகள் கொள்வனவு செய்கின்றனர் என்று விவசாயிகள் தெரிவித்தனர். (ற-4.ரி)

## இனவாதம்...

நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச சபையில் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுத் திங்கட்கிழமை நடைபெற்ற விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் தெரிவித்ததாவது:

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை அடிப்படையாக வைத்து ஆட்சியைக் கவிழ்க்க முனையவில்லை. யாருக்கும் நாம் ஆட்சியை வழிநடத்திச் செல்ல முட்டுகொடுக்கவும் தயாராகவில்லை.

நாட்டு மக்களின் முக்கிய பிரச்சினையை தீர்க்காமையே தேர்தலில் ஆளும் கட்சி தோல்வி பெறுவதற்குக்காரணமாகும். மக்கள்ஆணையை இன்னும் கூட அரசால் புரிந்துக்கொள்ள முடியவில்லை. போரை நிறைவு செய்த மகிந்த ராஜபக்சவை சிறையில் அடைக்காமைக்கு மக்கள் அரசுக்கு எதிராக ஆணை வழங்கவில்லை. மக்கள் அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றாமையே தோல்விக்குக் காரணமாகும்.

நாட்டில் இனவாதத்தைத் தூண்டினோம் என்று இரா.சம்பந்தன் கூறினார். நாம் இனவாதத்தை தூண்டவில்லை. வடக்கில் தமிழ் தேசியக் கூட்டமைப்பே இனவாதத்தைத் தூண்டி வருகின்றனர் - என்றார். (ற-5.61)

## எதிர்க்கட்சித்...

தற்கு வந்தபோதே முன்னாள் அரச தலைவர் இவ்வாறு கூறினார்.

அவர் தெரிவித்ததாவது:

சிறிலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்து ஒருவர் தெரிவானால் அவருக்கு நாங்கள் வெளியிலிருந்து ஆதரவளிப்போம். ஆனால் ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து வருபவருக்கு நாங்கள் ஆதரவளிக்கமாட்டோம். நாங்கள் எதிர்க்கட்சியாக இருப்போம்.

எமக்கு வழங்க வேண்டிய இடத்தை அவர்கள் வழங்குவார்கள் என்று எதிர்பார்க்கின்றோம். அரசு இருக்கும், இல்லாமலும் போகும். ஆனால் இந்த அரசு இன்னும் இரண்டு வெசாக் போயா தினங்களுக்கே நிற்கும். அதன்பிறகு இருக்காது. தலைமை அமைச்சரை நீக்குவது குறித்து சட்டமா அதிபரது ஆலோசனை தேவை தானா?. அரச தலைவர் நிறைவேற்று அதிகாரம் கொண்டவர் என்பதை யாரும் மறந்துவிட வேண்டாம் - என்றார். (ற-5)

## அந்தக்...

நாடாளுமன்றம் நேற்றுக் காலை கூடியது. விவாதம் நடைபெற்றிருந்த இடைநடுவில் சபைக்கு வந்திருந்த முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச சபையில் இருந்த ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்களைப் பார்த்து சில கிண்டல்களை அடித்ததுடன், கை சைகைகளையும் காட்டி சபையின் கவனத்தை ஈர்த்தார். சற்று நேரத்தின் பின்னர் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவும் சபாபீடத்திற்குள் நுழைந்தார். இருவரும் கண் அசைவின் ஊடாகப் பேசிக்கொண்டனர்.

விவாதம் நடந்து கொண்டிருக்கும் போது தினேஸ் குணவர்தன முன்னாள் அரச தலைவர் மகிந்தவுடன் பேசிக்கொண்டிருந்த போது, ஆசனத்தில் அமர்ந்து கொண்டு தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க முன்னாள் அரச தலைவருக்குச் சிரித்தவாறு ஏதோ கூறினார். இதன்போது மகிந்த ராஜபக்சவும் சிரித்துக்கொண்டு சைகை காண்பித்துப் பேசினார்.

தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க கடதாசி துண்டில் ஏதோ எழுதி எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தனுக்கும் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனுக்கும் படைகள சேவிதரின் ஊடாக அனுப்பி வைத்தார்.

தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தனது ஆசனத்திலிருந்து எழுந்து வெளியே செல்லும்போது மகிந்த ராஜபக்சவுக்கு கை சைகையைக் காட்டினார். "வேண்டாம் கதிரையில் தொடர்ந்து அமர்ந்திருங்கள்" என்று பலமுறை கை சைகையை மகிந்த காட்டினார். லக்ஸ்மன் கிரியெல்லவை தலைமை அமைச்சர் ரணில் கை காட்டியபோது "அவர் வேண்டாம் நீங்கள் இருங்கள்" என்று சிரித்துக்கொண்டே கை சைகையால் கூறினார் மகிந்த. (ற-5.61)

## கூட்டரசு...

கூட்டு அரசு தொடரவுள்ளது. கூட்டு அரசிலிருந்து பிரிந்து செல்லும் முடிவு கைவிடப்பட்டது என்று சிறிலங்கா சுதந்திரக் கட்சி நேற்று உத்தியோகபூர்வமாக அறிவித்தது. நீடித்து வந்த அரசியல் குழப்பத்துக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுள்ளது. அமைச்சரவையில் மாற்றம் மேற்கொள்வதற்கு இரு தரப்பும் இணங்கிக் கொண்டுள்ளனர்.

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்களுக்கும் இடையே சிறப்புச் சந்திப்பு அரச தலைவர் செயலகத்தில் நேற்றுக் காலை நடைபெற்றது. கூட்டு அரசில் சுதந்திரக் கட்சியின் வகிபாகம் பற்றி விரிவாகப் பேசப்பட்டுள்ளது.

அரசிலிருந்து வெளியேறி எதிரணியில் அமர்ந்தால் அது மகிந்த அணிக்கு சாதகமாகிவிடும் என்றும், மக்கள் மத்தியில் சுதந்திரக் கட்சி இன்னும் செல்வாக்கு இழக்கும் என்றும் கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. மாற்றங்களை ஏற்படுத்திவிட்டு இதே அடிப்படையில் பயணிப்பதே சிறப்பு எனவும் எடுத்துரைத்துள்ளனர். -

### மகிந்த அணியுடன் இணைய முடியாது

இரு தரப்பினர்களினதும் கருத்துகளைச் செவிமடுத்த அரச தலைவர், மகிந்த அணியுடன் இணைந்து ஆட்சியமைத்தால் அது தனது கொள்கைக்கு முரணாகிவிடும் என்றும் குறிப்பிட்டுள்ளார். எதிர்க்கட்சியில் அமர்வதற்கு விருப்பமானவர்களுக்கு அதற்கான கதவு திறந்தே உள்ளது எனவும் கூறியுள்ளார்.

இந்தச் சந்திப்பின் பின்னரே, ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து கூட்டு அரசைத் தொடர்வதற்கான முடிவை சிறிலங்கா சுதந்திரக் கட்சி எடுத்துள்ளது. ஆனால் அமைச்சரவையில் மாற்றம் மேற்கொள்ளப்படவுள்ளது. இந்த மாற்றம் நாளை அல்லது நாளை மறுதினம் இடம்பெறும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இதன் மூலம் கடந்த ஒரு வாரகாலமாக கொழும்பு அரசியலை புரட்டிப் போட்ட புயலுக்கு முடிவு கட்டப்பட்டது. (ற-5.61)

## பெண்...

அதனை உறுதி செய்வது என்றும், ஏனைய சபைகளில் அந்தச் சட்டத்தை கட்டாயமாக்காமல் செயற்பட அனுமதிப்பது என்றும் தேர்தல்கள் ஆணைக்குழு நேற்று நடத்திய மிக நீண்ட கலந்துரையாடலில் முடிவு செய்யப்பட்டுள்ளது.

தேர்தல் முடிவுகள் வழக்கத்துக்கு மாறான முறையில் இம்முறை அமைந்திருப்பதால், 25 சதவீத இடங்களை பெண்களுக்கு ஒதுக்குவதில் சட்டரீதியான தடைகள் உள்ளன. சில சபைகளில், அரசியல் கட்சிகள் 20 சதவீத வாக்குகளையும், 2க்கும் குறைவாக உறுப்பினர்களையும் பெற்றிருக்கின்றன. விகிதாசார முறையில் பெண் வேட்பாளர்களை நியமிப்பதில் சிக்கல்கள் எழுந்துள்ளன.

இந்தச் சிக்கல் காரணமாக உள்ளூராட்சித் தேர்தலில் வெற்றியீட்டியவர்களின் பெயர்களை அரசிதழில் வெளியிடுவதிலும் தாமதம் ஏற்பட்டுள்ளது.

தேர்தல்கள் ஆணைக்குழுவின் கூட்டம் நேற்று நடைபெற்றது. அதன்பின்னர் நாடாளுமன்றத்தில் அனைத்துக் கட்சித் தலைவர்கள், சட்டமா அதிபர், தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் பங்கேற்ற கூட்டமும் நடைபெற்றது.

உள்ளூராட்சித் தேர்தல் சட்டத்தின் அடிப்படையில் சபைகளில் கட்டாயம் 25 சதவீதம் பெண் பிரதிநிதித்துவம் இருப்பது உறுதிப்படுத்தவேண்டிய நிலை உள்ளது. சில சபைகளில் அதனைச் செயற்படுத்துவது அறவே சாத்தியமற்ற நிலையில் உள்ளது. தேர்தல் சட்டத்தில் திருத்தம் மேற்கொள்ள வேண்டும். திருத்தம் மேற்கொண்டாலும் அடுத்த தேர்தலிலேயே அதனை நடைமுறைப்படுத்த முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த இக்கட்டை அடுத்து 25சதவீத பெண் பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்தக் கூடிய சபைகளில் அதனை உறுதிப்படுத்துவதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளது. 25 சதவீத பெண் பிரதி நிதித்துவத்தை உறுதிப்படுத்த முடியாத சபைகளில் அதனைக் கட்டாயமாக்காமல் விடுவதற்கு தேர்தல்கள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது. 25சதவீத பெண் பிரதிநிதித்துவம் கட்டாயமாக்கப்படாத சபைகளில், ஏதாவது வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டால் அதற்கு ஏற்றவாறு விடயங்களைத் தீர்ப்பதற்கும் தேர்தல்கள் ஆணைக்குழு கூட்டத்தில் முடிவு செய்தது. (ற-5)

# இலங்கையில் கிடைக்கும் அடையாளம் கூட எமக்கு இந்தியா வழங்கவில்லை

## மோடி முன்னிலையில் அரவிந்தகுமார் எம்.பி. தெரிவிப்பு

புதுடில்லி, பெப். 20

இலங்கையில் இந்திய வம்சாவளியினர் என்று அழைக்கப்படுவதற்கு உள்ள நியதிகளுக்கு ஏற்புடையதான அளவுக்கு கூட, இந்தியாவில் எம்மை இந்திய வம்சாவளியினராக அடையாளப்படுத்துவதற்கான ஏற்பாடுகள் இல்லை. இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் அரவிந்தகுமார் தெரிவித்தார்.

புதுடில்லியில் பரவாசி பாரதிய கேந்திர நிலையத்தில் கடந்த வாரம் நடைபெற்ற இந்திய வம்சாவளி நாடாளுமன்ற உறுப்பினர்களின் முதலாவது மாநாட்டில் தமிழ் முற்போக்கு கூட்டணியின் பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அரவிந்த குமார் பங்கேற்றிருந்தார். இந்தியத் தலைமை அமைச்சர் நரேந்திரமோடி, இந்திய அயலுறவு அமைச்சர் சுஷ:மா சுவராஜ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் உரையாற்றிய அரவிந்தகுமார் மேலும் தெரிவித்ததாவது,

உலகெங்கும் வாழும் இந்திய வம்சாவளி மக்களின் பிரதிநிதிகளாக வெவ் வேறு நாடுகளில் மக்கள் பிரதிநிதிகளாக தெரிவு செய்யப்பட்டிருக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்கள், மேயர்கள் ஆகியோரை ஒன்று திரட்டி முதன் முறையாக இந்தியாவில் ஒரு மாநாட்டினை



நடாத்தும் இந்தச் சந்தர்ப்பத்தில் இலங்கையில் வாழும் இந்திய வம்சாவளியினர் சார்பில் நாடாளுமன்ற உறுப்பினர்களாகிய நாங்களும் கலந்து கொள்வதில் மகிழ்ச்சியும் பெருமையும் அடைகின்றோம்.

இலங்கை - இந்திய அரசுகளுக்கு இடையே ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டு மக்களை பகிர்ந்து கொள்ளப்பட்டபோதும் இலங்கையில் வாழும் இந்திய வம்சாவளியினரான பெருந்தோட்டத் தமிழ் மக்கள் இலங்கையில் இந்திய வம்சாவளியினர் என்று அழைக்கப்படுவதற்கு உள்ள நியதிகளுக்கு ஏற்புடையதான அளவுக்கு கூட இந்தியாவில் தம்மை இந்திய வம்சாவளியினராக அடையாளப்படுத்துவதற்கான ஏற்பாடுகள் இல்லை.

இந்திய வம்சாவளியினர் என்று உறுதிபடுத்தி இந்திய அரசு வழங்கும் பிஐஓ சான்றுகளோ அல்லது கடல் கடந்து வாழும் இந்தியர்களுக்கான ஓசிஐ இந்த மக்களுக்கு இல்லை. அதனைப் பெற்றுக்கொள்வது என்றாலும் இந்தியாவில் இந்த மக்கள் வாழந்ததற்கான. சான்றுகளை இந்திய அதிகாரிகள் உறுதிப்படுத்த வேண்டும் எனும் நிபந்தனை முன் வைக்கபட்டுள்ளது.

சுமார் ஐந்து தலைமுறைகள் கடந்து இலங்கையில் இந்திய வம்சாவளியினராக வாழ்ந்துகொண்டிருக்கும் இந்த மக்கள் இந்தியாவில் தமது மூதாதையர் வாழ்ந்த வரலாற்று ஆவணங்களையோ சொத்துக்களையோ ஆதாரமாக சமர்ப்பிக்குமாறு கேட்கப்படுகின்றார்கள். இது நடைமுறைச் சாத்தியமற்றது என்பது உங்களால் புரிந்து கொள்ளப்பட முடியும் என்று நான் எண்ணுகிறேன்.

இலங்கை - இந்திய அரசுகளுக்கு இடையே, சிறிமா சாஸ்திரி ஒப்பந்தம் இலங்கையில் வாழும் பெருந்தோட்டத் தொழிலாளர்களும் அவர்களில் தங்கி வாழ்வோரும் இந்திய வம்சாவளியினர் என்பதை உறுதிப்படுத்த உரிய ஆவணமாகும் என்பதை நினைவுபடுத்த விரும்புகிறேன். இந்த விடயத்தை அயலுறவுத்துறை அமைச்சர் திருமதி சுஸ்மா சுவராஜ்க்கும் எமது குழுவினருக்கும் இடையே இடம்பெற்ற இருதரப்பு பேச்சில் நாம் விளக்கி கூறியுள்ளோம்.

நாங்கள் மொத்தமாக ஒன்பது நர்டாளுமன்ற உறுப்பினர்கள் இலங்கை நாடாளுமன்றத்தில் இந்திய வம்சாவளீ தமிழ் மக்களை பிரதிநித்துவம் செய்கின்றோம் - என்றார். (5)

# ஊடகங்களுக்கு ஒரு முகம் உள்ரீதியாக வேறு செயற்பாடு

## தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி இரட்டை நிலைப்பாடு என்கிறார் யோகேஸ்வரன்

மட்டக்களப்பு, பெப். 20

தமிழ் மக்களுக்காக ஒற்றுமையாக ஆட்சியமைக்க வேண்டும் என்ற அடிப்படையில், கொள்கைக்கு அப்பால் சென்று பேச்சு நடாத்திய போதும் சாதகமான பதிலை தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி வழங்கவில்லை. இவர்கள் வெறுமனே ஊடகங்களுக்கு ஒரு கருத்தையும், உள்ரீதியாக வேறு செயற்பாடுகளையும் முன்னெடுத்து தமிழ் மக்கள் மத்தியில் குழப்பத்தினை ஏற்படுத்த முனைகின்றார்கள். இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சீனித்தம் யோகேஸ்வரன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் விடுத் துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

உள்ளூராட்சித் தேர்தல் முடிவுகளின் பிரகாரம் கோரளைப்பற்று, கோரளைப்பற்று வடக்கு, ஏறாவூர்ப்பற்று போன்ற பிரதேச சபைகளில் நாங்கள் சில கட்சிகளுடன் இணைந்து ஆட்சி அமைக்க வேண்டிய சூழல் இருக்கின்றது. தமிழ்க் கட்சிகள் ஒன்றிணைந்து ஆட்சியமைக்க நாங்கள் சகல விட்டுக்கொடுப்புடன் செயற்படுவதற்குத் தயாராக இருக்கின்றோம் என்று தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி தெரிவித்திருந்தது.

எமக்கும் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சிக்கும் கொள்கை ரீதியாகப் பல முரண்பாடுகள் இருந்தாலும் நாங்கள் அதனைப் பொருட்படுத்தாத வகையில் இது சார்பாகப் பரிசீலிப்பதற்கு எமது தலைமையிடம் நான் வேண்டுகோள் விடுத்தேன். எமது தலைமையும் இது தொடர்பில் பேசுமாறு என்னிடம் பெறுப்புத் தந்தார்கள்.

தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் கோரிக்கையின் அடிப்படையில் கடந்த 16ஆம் திகதி மாலை 5.30 மணிக்கு நானும் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் மூத்த உறுப்பினரும், முன்னாள் மாகாண சபை உறுப்பினர் திரவியத் துடன் சேர்ந்து வாழைச்சேனை யில் பேச்சில் ஈடுபட்டோம். நீங்கள் சகல விட்டுக் கொடுப்புடன் தமிழ் கட்சிகள் சேர்ந்து தமிழ் மக்கள் பிரதேச சபையை ஆட்சியமைப்பதற்கு ஒத்துழைப்புத் தருவதாக ஊடகங்கள் மூலம் கூறியிருந்தீர்கள். இந்தக் கோரிக்கையை நாங்கள் ஏற்றுக் கொண்டு உங்களிடம் பேசுவதற்கு வந்துள்ளேன் என்று தெரிவித்தேன். கோரளைப்பற்று, கோரளைப்பற்று வடக்கு, ஏறாவூர்ப்பற்று ஆகிய பிரதேச சபைகளில் நாங்கள் தவிசாளராகச் செயற்பட விரும்பு கின்றோம். உங்களது கருத்துக்களை இணைந்து ஆட்சி அமைப்பது சார்பாக பேச வந்தவன் என்ற சார்பில் கோருகின்றேன் என்று தெரிவித்தேன்.

ஆரம்பத்தில் நாங்கள் அவ்வாறு தான் அறிக்கை வெளியிட்டிருந்தோம். தற்போது அதனை கட்சித் தலைவர் சந்திரகாந்தனிடம் ஒப்படைத்திருக்கின்றோம். அவர் தற்போது சிறையில் இருப்பதால் அவருடன் நாளை காலை சென்று கலந்துரையாடிய பின்னர் முடிவினைத் தெரிவிப்பேன் என்று தெரிவித்தார். கடந்த 17ஆம் திகதி பல தடவைகள் தொலைபேசி அழைப்பினை ஏற்படுத்திய போது அவர் அதற்கான பதிலை எனக்குத் தரவில்லை. இதுவரை பதில் தரவில்லை. நான் ஏமது தலைமையுடன் தொடர்பு கொண்டு அவர்கள் எந்த முடிவும் சொல்லவில்லை என்பதைத் தெரிவித்தைத் தொடர்ந்து ஆட்சி அமைப்பது சார்பாக வேறு ஏற்பாடுகளுக்கு நடவடிக்கை எடுப்பதாகக் குறிப்பிட்டனர், என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (5.46)

(முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்...)

## கூட்டு அரசை...

டன் தொடர்ந்து இணைந்து இருப்பது என்ற முடிவை சுதந்திரக்கட்சி மற்றும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி என்ற வகையில் நாம் எடுத்தோம். எம்முடன் அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஒற்றுமையுடன் இருக்கின்றனர்.

எமது நாடாளுமன்ற உறுப்பினர்கள் எவரும் எந்தக் கட்சிக்கும் தாவமாட்டார்கள். எமது கொள்கையில் மிகவும் உறுதியாக எம்முடன் இணைந்து இருக்கின்றனர். நாம் ஒருபோதும் மாற மாட்டோம். மேலும் கூட்டு அரசில் ஒரு மிகப்பெரிய மாற்றமொன்றை செய்யவேண்டும் என்ற எமது நிலைப்பாட்டில் எவ்விதமான மாற்றமும் இல்லை. நாங்கள் அந்த நிலைப்பாட்டிலிருந்து வெளியே செல்லவில்லை. கூட்டு அரசில் மாற்றத்தைச் செய்யவேண்டும் என்ற எமது தீர்மானத்தில் எந்த மாற்றமும் இல்லை என்பதை உறுதியாகத் தெரிவிக்கின்றோம் - என்றார். (5.31)

## ஐ.நா. அமர்வு...

மக்கள் வெளிப்படுத்தியுள்ளனர். உள்நாட்டில் மாத்திரமின்றி பன்னாட்டு ரீதியிலும் அரசு பெரிய நெருக்கடிக்கு முகம் கொடுத்துள்ளது. இதற்குக் காரணம் அரசின் அசமந்தப் போக்கே ஆகும். இவர்களின் முட்டாள் தனமான செயற்பாடுகளும் ஆட்சி முறையும் பன்னாட்டு அளவில் நாட்டை நெரிக்கடிக்கு உள்ளாக்கியுள்ளது. இலங்கை அரசு பன்னாட்டுச் சமூகத்தின் பங்களிப்புடன் பொறுப்பு கூறல் பொறிமுறையை முன்னெடுத்து பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதியை நிலைநாட்ட வேண்டும் என்று தெரிவித்து 2015 ஆம் ஆண்டு ஜெனிவா மனித உரிமைகள் சபையின் 30 ஆவது கூட்டத்தொடரில் பிரேரணை நிறைவேற்றப்பட்டது. இலங்கையும் அனுசரணை வழங்கியிருந்தது. பிரேரணை மீள புதுப்பிக்கப்பட்டு இலங்கைக்கு இரண்டு ஆண்டு கால அவகாசமும் வழங்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் மனித உரிமைகள் ஆணையாளரால் அறிக்கை வெளியிடப்படும். அந்த அறிக்கையில் இலங்கை தொடர்பான தமது அதிருப்தியையே அவர் வெளியிடுவார். இலங்கையில் காணப்படும் உள்நாட்டு விவகாரங்கள் அந்த அளவில் மோசமாகவே காணப்படுகின்றது. இந்த முறை மனித உரிமைகள் சபை அமர்வை எப்படி முகம் கொடுக்கப் போகின்றார்கள் என்பது கேள்விக்குறியே -என்றார். (5.31)

## தாஜுதீன்...

குறித்த இலக்கத்துக்கு உரிய நபர் யார்?, அந்தச் சந்தர்ப்பத்தில் அலைபேசி செயலில் இருந்தது மணி அடித்ததா?, அலைபேசியை கையில் வைத்திருந்தவர் அதனைத் துண்டித்தாரா?, அந்த அழைப்புக்கு பதில் இல்லாமல் தானாக அழைப்பு துண்டிக்கப்பட்டதா?

அழைப்பை ஏற்படுத்தியவர் எந்த தொலைபேசி கோபுர பகுதிக்கு உட்பட்ட இடத்தில் இருந்து அழைப்பை ஏற்படுத்தினார்?, அலைபேசி இணைப்பு செயலில் இருந்ததா?, அழைப்பை வேண்டுமென்றே ஏற்காது தவறவிட்டாரா?, அலைபேசி செயல் இழந்ததால் அழைப்பு துண்டிக்கப்பட்டதா? ஆகிய 8 கேள்விகளுக்குப் பதில் கிடைக்கும் வகையில் இந்த பகுப்பாய்வு அறிக்கையை குற்றப் புலனாய்வுப் பிரிவு கோரியுள்ளது. (5.71)

## தமிழ் அரசு...

உள்ளூராட்சித் தேர்தல் முடிவுகள் உள்ளிட்ட விடயங்கள் முக்கியமாக ஆராயப்படவுள்ளது. உள்ளூராட்சித் தேர்தலில் கட்சி உறுப்பினர்கள், கட்சிக்கு எதிராக இயங்கியமை உள்ளிட்ட விடயங்களும் இந்தக் கூட்டத்தில் ஆராயப்படவுள்ளதாகத் தெரியவருகின்றது. (5)

## குழப்பங்களை...

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் கூடிய இடங்களில் வெற்றிபெற்றுள்ளது. வெற்றி பெற்ற இடங்களில் ஆட்சியையும் அமைக்கும். நாம் ஏற்கனவே வெளிப்படையாகக் கூறியுள்ளோம். ஆட்சியமைக்க முடியாத சில கட்சி அத்தகைய சபைகளில் குழப்பங்களை ஏற்படுத்த முயற்சிக்கும். அவ்வாறு குழப்பங்களை ஏற்படுத்துபவர்கள் யார் என்பதை மக்கள் புரிந்து கொள்வார்கள். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு குழப்பங்களை ஏற்படுத்தாது. ஆனால் எதிரிகள் எங்களை குழப்பவாதிக ளாகக் காட்டுவதற்கு முயற்சிகளை மேற்கொள்வார்கள் - என்றார். (5)

# போத்தல் தண்ணீரும் ஆரோக்கியமற்றதாம்

## கூறுகின்றனர் என்கிறார் வடக்கு முதல்வர்

முல்லைத்தீவு, பெப்.20

அருந்துவதற்காகப் போத்தல்களில் அடைக்கப்பட்ட நீரையே இன்று பலரும் பயன்படுத்துகின்றனர். அதுவும் கூட ஆரோக்கியமானதொன்றல்ல என்று கூறப்படுகிறது. மனிதனுடைய உடல் அவன் வாழுகின்ற சூழலுக்கு ஏற்பவே இசைவாக்கமடைகின்றது. வடபகுதியில் வாழுகின்ற மக்களின் உடல்கள் அவ்வப்பகுதி நிலத்தடி நீரைப் பயன்படுத்துவதற்கே இசைவாக்கம் பெற்றுள்ளன.

இவ்வாறு வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

முல்லைத்தீவு சிலாவத்தை தமிழ் வித்தியாலயத்தில் நேற்று இடம்பெற்ற வடமாகாணத்தில் விவசாயம், கால்நடை வளர்ப்பு ஆகிய துறைகளில் ஈடுபட்டுள்ள விவசாயிகளை ஊக்குவிக்கும் முகமாக முல்லைத்தீவு மாவட்டத்தில் இடம்பெற்ற போட்டியில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசில்கள் வழங்கும் நிகழ்வு நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஒருவர் வவுனியாக் கிணற்று நீரைத் தொடர்ந்து 3 4 நாள்களுக்கு அருந்தினால் அவருக்கு சிறுநீர் எரிவு உண்டாகும் என்பார்கள். எமது விவசாய முயற்சிகளுடன் நிலத்தடி நீரையும் பாதுகாத்து அடுத்த சந்ததிக்கும் ஒரு ஆரோக்கியமான சூழலை ஏற்படுத்திக்கொடுக்கவேண்டிய பெரும் பொறுப்பு எம்மைச் சார்ந்ததாகும்.

வடக்கு மாகாண மக்கள் விவசாயத்தில் வல்லவர்கள். இவர்களின் விவசாய உள்ளீடுகளுக்கு இலங்கையின் ஏனைய பாகங்களில் குறிப்பாக தென் இலங்கையில் நல்ல வரவேற்புண்டு. வடக்கு மாகாண விவசாயிகளால் உற்பத்தி செய்யப்படும் சின்ன வெங்காயம் நாடு முழுவதிலும் விரும்பி உபயோகிக்கப்படுகின்றது. அதேபோன்று மரக்கறி வகைகள், இராசவள்ளிக் கிழங்கு, பொன்னாங்காணி, கீரைவகைகள் ஆகியவற்றுக்கு தம்புள்ள பொருளாதார மத்திய நிலையத்தில் நல்ல வரவேற்புக் காணப்படுகின்றது.

முல்லைத்தீவு நிலக்கடலைக்கு ஏனைய பகுதிகளில் விளைகின்ற நிலக்கடலைகளை விட கூடுதலான வரவேற்பு உண்டு. எமது விவசாயிகள் நிலத்தடி நீரை நம்பியே விவசாய உப உணவு உற்பத்திகளில் ஈடுபடுகின்றனர். எமது விவசாயிகளின் உள்ளீடுகளின் தரங்களும் தொடர் உற்பத்திகளும் வடபகுதி விவசாய முயற்சிக்கு நல்லதொரு வரவேற்பைத்தேடித்தந்திருக்கின்றது.

பல்நாட்டுக் கம்பனிகளினதும் இரசாயனக் கலவை நிறுவனங்களினதும் உந்துதலினால் மாட்டெருவை மறந்து கூட்டெருவைக்கைவிட்டு அக்றோ கெமிக்கல்ஸ் நிறுவனங்களின் உரக்கலவைகளை வகை தொகையின்றி பாவிக்கத் தொடங்கியதால் நீரில் காணப்படுகின்ற நைதரசனின் அளவு மிகக் கூடுதலாகி இந்த நீர் அருந்த முடியாத அளவுக்கு நஞ்சூட்டப்பட்டிருப்பது வேதனையளிக்கின்றது. நாம் எறிந்து வரும் பாவிக்கப்பட்ட குரும்பைகளில் மண் நிரப்பி மரக்கறி விதைகளை அவற்றுள் நட்டு முளைவிட்டவுடன் நிலத்தில் நடும் ஒரு பழக்கம் உருவாகியிருக்கிறது. சிறிது காலத்தில் குரும்பை மண்ணுடன் கலந்து உரமாகின்றது. அது வரையில் ஈரப் பதத்தைப் பேணி வருகின்றது. இவ்வாறான பழக்கங்களை மேற்கொள்வது குரும்பை களில் நீர் தேங்கி நின்று டெங்கு போன்ற நோய்கள் வருவதைத் தடுக்கின்றது. பிளாஸ்டிக் பாவனை கட்டுப்படுத்தப்படுகிறது. வரவுசெலவு கணக்கு வைக்கப்பட்டு மழைநீரை நம்பிய விவசாயச் செய்கை பயன் அற்றது என்ற முடிவுக்கு பல விவசாயிகள் வந்திருக்கின்றார்கள். இது தவறான முடிவோ என்று எண்ண வேண்டியுள்ளது. முற்காலத்தில் ஒவ்வொரு வீட்டிலும் நெற்குதிர்ப் பெட்டிகள் காணப்பட்டன. அதனால் எந்தக் காலத்திலும் சோற்றுப்பஞ்சம் வந்ததில்லை. மாறாக இன்று ஒரு மூடை நெல் உற்பத்தி செய்வதற்கு எவ்வளவு செலவாகும் எனக் கணக்கிடுகின்றார்கள். உற்பத்திச் செலவு அரிசியின் விலையை விடக் கூடுதலாக விருப்பின் பயிர்ச்செய்கையை கைவிட்டு விடுகின்றார் கள். அதனால் அவர்களின் பயிர்ச்செய்கை நிலங்கள் தரிசு நிலங்களாக மாற்றப்படுகின்றன. பயிர்ச்செய்கை நிலங்கள் பல இன்று கைவிடப்பட்டு வருவது உண்மையே. பயிரிடப்படாத பயிர்ச்செய்கை நிலங்கள் தற்காலிகமாகவோ அன்றி நிரந்தரமாகவோ விவசாய அமைச்சினால் பொறுப்பேற்கப்பட்டு உற்பத்தி நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தப்பட வேண்டும் என நான் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றேன். அதற்கான நியதிச் சட்டங்கள் தயாராகி வருகின்றன- என்றார். (ற-21)

## மணல் ஏற்றியவர்கள் கைது

மட்டக்களப்பு.பெப்.20

மட்டக்களப்பு. வாகனேரி பகுதியில் சட்டவிரோதமான முறையில் மணல் ஏற்றிய இருவர் நேற்று கைது செய்யப்பட்டனர். இவர்களிடமிருந்து உழவு இயந்திரங்கள் கைப்பற்றப்பட்டன.

பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து இவர்கள் கைது செய்யப்பட்டனர். (ற.ரி4)



## முதியோர் சமூகத்தினர் மதிக்கப்பட வேண்டும்



மட்டக்களப்பு.பெப்.20

முதியோர் சமூகத்தை அநேகர் ஒரு பொருட்டாகவே கருதுவதில்லை. வாழ்வின் இறுதிக் காலத்தில் அநேகரால் ஒதுக்கப்படுகின்ற ஒரு சமூகமாக முதியோர் சமூகம் காணப்படுகின்றது.

இவ்வாறு இலங்கைசெஞ்சிலுவைச் சங்கத்தின் மட்டக்களப்பு மாவட்டக் கிளைத் தலைவரும் அஹிம்சா சமூக நிறுவனத்தின் ஆலோசகருமான த.வசந்தராஜா தெரிவித்தார்.

பலாச்சோலைக் கிராமத்தைச் சோர்ந்த 40 முதியவர்களுக்கு அஹிம்சா எனும் சமூக நிறுவனம் போசாக்கு உணவுப் பொதிகளை நேற்று வழங்கியது.

இதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

அவர்களது இளமைக்காலத்திலே நமக்காகவும் நம்மைச் சார்ந்தவர்களுக்காகவும் அவர்கள் உழைத்ததை எல்லாம் நாம் மறந்தேவிடுகின்றோம்.

அத்தகைய மனிதர்களை மதித்துப் போற்றவும் கௌரவித்து வாழ்த்தவும் உலகில் சிலர் இல்லாமலும் இல்லை.

பலர் தங்களது மகிழ்ச்சியான தருணத்தை ஆர்ப்பாட்டமாகக்களிக்கின்ற நேரத்திலே சிலர் மட்டும் தங்களது மகிழ்ச்சியான தருணத்தை முதியவர்களை நினைந்து அவர்களது தேவைகளை உணர்ந்துதங்களால் இயன்றவரை அவர்களுக்கு உதவிசெய்து மகிழ்கின்றனர். இத்தகையவர்கள் நிச்சயம் தெய்வத்துள் வைக்கப்படுவர் என்றார். (ற.ரி4.46)

## ஐ.நா.சமாதான பணியில் இலங்கை இராணுவ குழு

கொழும்பு.பெப்.20

இலங்கை இராணுவத்தின் 12 ஆவது குழு ஐக்கிய நாடுகள் சபையின் சமாதான நடவடிக்கைப் பணிகளுக்காக நேற்று லெபனான் சென்றுள்ளனர்.

ஒரு வருடகால சேவையில் 13 படைத் தலைமையகங்கள் உள்ளடங்கலாக 150 படையினர் உள்ளடங்குகின்றனர்.

இலங்கை சிங்கப் படை, பொறியியல் படையணி, சமிக்ஞைப் படையணி, போர் காலாட் படையணி, கொமாண்டோ படையணி, விசேட படையணி, பொறியியல் சேவைப் படையணி, இராணுவ மருத்துவப் படைய்ணி, இராணுவ பொலிஸ் படையணி மற்றும் இராணுவ ஜெனரல் படையணி போன்றவை இந்தக் குழுவில் உள்ளடங்குகின்றனர். (ற.ரி4)

## பொய்யான பரப்புரை செய்தவரை கைது செய்யக் கோரி ஆர்ப்பாட்டம்



நுவரெலியா.பெப்.19

நடந்து முடிந்த உள்ளூராட்சித் தேர்தலில் தொழிலாளர் தேசிய சங்க ஆதரவாளர் என்று கூறப்படும் ஒருவர் மோசடியில் ஈடுபட்டார் என்று கொத்மலை பிரதேச சபைக்கு உட்பட்ட மக்கள் நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டம் செய்தனர்.

ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளர் பட்டியலில் கெட்டபுலா வட்டாரத்தில் ஏற்கனவே ஒருவர் போட்டியிட்ட போது அதனைக் குழப்பும் நோக்கில் கடந்த 8ஆம் திகதி தொழிலாளர் தேசிய சங்க ஆதரவாளர் ஒருவர் தான் அந்த வட்டாரத்தில் போட்டியிடுவதாக பொய் பரப்புரையில் ஈடுபட்டார் என்று கூறப்படு கிறது. இதனைக் கண்டித்தும் தேர்தல் சட்ட விதிகளின் படி அவரைக் கைது செய்யுமாறு வலியுறுத்தியும் ஆர்ப்பாட்டம் முன்னெடுக் கப்பட்டது. நூற்றுக்கும் மேற்பட்ட மக்கள் பதாகைகளை ஏந்தி, கோஷங்களை எழுப்பியவாறு ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தனர். (ற.ரி4)




புற்றுநோய்க்கு எதிர்ப்பு தெரிவித்து எச்.எஸ்.பி.சி வங்கி ஊழியர்கள் 1000 பேர் நேற்று முன்தினம் கொழும்பில் நடைபவனி ஒன்றை மேற்கொண்டிருந்தனர். இராஜகிரிய பகுதியில் ஆரம்பமான இந்த நடைபவனி குதிரைப்பந்தயத்திடல் பகுதியில் முடிவடைந்தது.

# நம்பிக்கையில்லாத் தீர்மானமே என்னை அகற்ற ஒரே வழி

## ரணில் எடுத்துரைப்பு

கொழும்பு, பெப். 20

நாடாளுமன்றத்தில் நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டுவந்து நிறைவேற்றினால் மாத்திரமே, நான் தலைமை அமைச்சர் பதவியை விட்டு வெளியேறுவேன் என்று தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க, திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார்.

சபாநாயகர் கரு ஜெயசூரிய, ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச்செயலர் கபீர் காசிம் ஆகியோருடன் இணைந்து, அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவை நேற்று முன்தினம் இரவு தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க சந்தித்திருந்தார்.

இந்தச் சந்திப்பின் போது கருத்து வெளியிட்ட ரணில் விக்கிரமசிங்க, ஐக்கிய தேசியக் கட்சி தனக்கு முழுமையான ஆதரவை வழங்குவதாகவும், தமது கட்சி நாடாளுமன்றத்தில் அதிகபட்ச ஆசனங்களைக் கொண்டிருப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டு வந்து நிறைவேற்றாமல், தலைமை அமைச்சர் பதவியை விட்டு கீழ் இறங்குவதற்கு எந்தத் தேவையும் இல்லை என்றும் அவர் இந்தச் சந்திப்பில் குறிப்பிட்டுள்ளார். (5)

# நடப்பு அரசியல் சூழல் வெறுப்பைத் தருகிறது

## எம்.ஏ.சுமந்திரன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், பெப். 20

உள்ளூராட்சித் தேர்தலுக்குப் பின்னர், அரசை அமைப்பதற்காக நாடாளுமன்ற உறுப்பினர்களை வாங்கும் தற்போதைய சூழல் வெறுப்பை ஏற்படுத்துகிறது. இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும், பேச்சாளருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

கொழும்பு ஆங்கில ஊடகத்துக்கு வழங்கிய செவ்வியில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரசை அமைப்பதற்கான எந்தவொரு பேச்சுக்களிலும் பங்கேற்க கூட்டமைப்பு விரும்பவில்லை.

பெருமளவு பேச்சுக்கள் நடந்து கொண்டிருப்பதை நாம் அறிவோம். என்ன நடக்கப் போகிறது என்று எமக்குத் தெளிவாகத் தெரியவில்லை.

எனவே, யாருக்கு ஆட்சியமைக்கும் ஆற்றல் உள்ளது என்பதை அறிய நாம் காத்திருப்போம். அதன் பின்னர் என்ன செய்வது என்று முடிவு செய்வோம் ஜனநாயக மறுசீரமைப்பு, ஊழலுக்கு எதிரான நடவடிக்கை, யாராக இருந்தாலும், தண்டனையில் இருந்து தப்பிப்பதற்கு எதிரான கொள்கைகளுக்கு ஆதரவளிப்பவர்களுக்கு கூட்டமைப்பு ஆதரவு அளிக்கும்.

எமது முடிவு கொள்கையின் அடிப்படையிலானதே தவிர, தனிநபர்களை அடிப்படையாகக் கொண்டது அல்ல.

இப்போது, எப்படி அரசு அமைக்கப்படவுள்ளது என்பது பற்றியே மக்கள் பேசுகிறார்கள்.

கட்சித்தாவல்களை மேற்கொள்வதற்காக பல முயற்சிகள் நடந்து கொண்டிருக்கின்றன. அத்தகைய செயற்பாடுகளில் ஈடுபட நாம் விரும்பவில்லை - என்றார். (5)

# ரணில் விக்கிரமசிங்கவை நீக்குவதற்கு இதுவரை ஆலோசனை கேட்கவில்லை

## சட்டமா அதிபர் தெரிவிப்பு

கொழும்பு, பெப். 20

தலைமை அமைச்சர் பதவியிலிருந்து ரணில் விக்கிரமசிங்கவை நீக்கலாமா என்பது தொடர்பில், அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன என்னிடம் இதுவரை எந்தவொரு ஆலோசனையையும் கோரவில்லை. இவ்வாறு சட்டமா அதிபர் ஜெயந்த ஜெயசூரிய தெரிவித்தார்.

ரணில்விக்கிரமசிங்கவைப் பதவியில் இருந்து நீக்குவதற்கு வாய்ப்புள்ளதா என்று, சட்டமா அதிபரின் ஆலோசனையைப் பெற்றுக் கொள்ளவுள்ளதாக, அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன உறுதியளித்தார் என்று, கூட்டு எதிரணியினர் கூறியிருந்தனர்.

எனினும், அரச தலைவர் மைத்திரிபால இன்னமும் தம்மைத் தொடர்பு கொண்டு எந்த ஆலோசனையையும் கோரவில்லை என்று, சட்டமா அதிபர் ஜெயந்த ஜெயசூரிய தெரிவித்துள்ளார்.

"அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன இந்த விடயம் தொடர்பாக என்னுடன் தொடர்பு கொண்டு ஆலோசனை கோரினால், தலைமை அமைச்சரைப் பதவி நீக்கம் செய்வதற்கான சூழ்நிலை கள், வாய்ப்புகள் பற்றி ஆராயப்படும்" - என்று தெரிவித்துள்ளார். (5)

# நாட்டில் அரசு இருக்கிறதா?

## கேள்வி எழுப்புகிறார் மகிந்த

கொழும்பு, பெப். 20

உள்ளூராட்சித் தேர்தல் முடிவுகளின் பின்னர் நாடு முற்றிலும் குழம்பியுள்ளது. இன்று நாட்டில் அரசு இருக்கின்றதா என்றே தெரியவில்லை. இவ்வாறு முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஊடகத்துக்கு வழங்கிய செவ்வியிலேயே மேற்கண்டவாறு கூறியுள் ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நிறைவடைந்து ஒரு வார காலம் கடந்துள்ள நிலையிலும், இன்னும் கயிறு இழுக்கப்பட்டு வருகின்றது. நாட்டு மக்கள் என்ன நடக்கின்றது என்பதனை அவதானித்து வருகின்றனர். நாட்டில் இன்று அரசு உள்ளதா என்பதே தெரியவில்லை.

தலைமை அமைச்சர் பதவி பற்றிப் பல்வேறு கதைகள் கூறப்படுகின்றன. இவர்கள் உண்மையில் என்ன செய்கின்றார்கள். சட்டத்தை நடைமுறைப்படுத்தும் விதத்தில் குறைபாடுகள் காணப்படுகின்றன. நாட்டின் பொருளாதாரம் சீர்குலைந்துள்ளது.

உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் சம்பளத்துக்கு வேலை செய்யாது அதனை மதிப்புறு சேவையாகக் கருதிச் செயற்படுமாறு உறுப்பினர்களிடம் அரசு கோரியுள்ளது. அவ்வாறு செய்வதென்றால் அமைச்சரவை அமைச்சர்களும் சம்பளம் இன்றி மதிப்புறு சேவையாற்ற வேண்டுமென உள்ளூராட்சி மன்ற ஒன்றியம் கோரியுள்ளது. அவர்கள் கூறுவதிலும் உண்மையில்லாமலில்லை. அரசின் செயற்பாடுகள் வெறும் பேச்சில் மட்டுமேயாகும். அனைத்துப் பக்கங்களிலும் அடிபடுவது அப்பாவி மக்கள் மட்டுமே - என்றார். (5)

# கனடாவுக்கு செல்ல முற்பட்ட இலங்கையர் நாடு கடத்தப்பட்டார்

கொழும்பு, பெப். 20

போலிக் கனேடிய கடவுச்சீட்டை பயன்படுத்திக் கனடா செல்ல முயற்சித்த இலங்கையர் நாடு கடத்தப்பட்டுள்ளார்.

கட்டார் வானூர்தி நிலையம் ஊடாகக் கனடா செல்ல முயற்சித்த இலங்கையர் வானூர்தி நிலைய அதிகாரிகளினால் இலங்கைக்கு நாடு கடத்தப்பட்டுள்ளார்.

நாடு கடத்தப்பட்ட இலங்கையரை கட்டுநாயக்க வானூர்தி நிலையத்தில் குற்ற விசாரணைத் திணைக்கள அதிகாரிகள் கைது செய்துள்ளனர். கைது செய்யப்பட்டவர் மினுவாங்கொட நீதி மன்றத்தில் முற்படுத்தப்பட்ட நிலையில் இன்று வரை விளக்கமறியலில் வைக்குமாறு பதில் நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

திருகோணமலை, உப்பு வெளி பிரதேசத்தைச் சேர்ந்த சரவணமுத்து தங்கவேல் என்ற 62 வயதுடைய நபரே இவ்வாறு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். சந்தேக நபருக்குப் போலி கடவுச்சீட்டு தயாரிப்பதற்கு உதவிய நபரைக் கைது செய்வதற்கான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக வானூர்தி நிலைய குற்ற விசாரணை பிரிவுத் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (5)

# நின்றுகொண்டு மோட்டார் சைக்கிள் ஓட்டி இளைஞன் கின்னஸ் சாதனை



கொழும்பு, பெப். 20

எவரது உதவியுமின்றி 100 கிலோ மீற்றர் தூரத்தை நின்றுகொண்டு மோட்டார் சைக்கிள் ஓட்டி, குருநாகலைச் சேர்ந்த 23 வயது இளைஞனான தரிந்து கின்னஸ் சாதனை படைத்துள்ளார்.

கடந்த 16ஆம் திகதி அநுராதபுரம் இரண்டாம் மைக்கல் பிரதேசத்திலிருந்து காலை 10.30 மணிக்கு தனது பயணத்தை ஆரம்பித்துள்ளார். சுமார் 100 கிலோ மீற்றர் தூரம் பயணித்துக் குருநாகல் சாரகம ஏரிக்கு அருகில் பயணத்தை நிறைவு செய்துள்ளார். மணிக்கு 70 கிலோ மீற்றர் வேகத்தில் மோட்டார் சைக்கிளை ஓட்டியுள்ளார்.

"சிறு வயது முதல் மோட்டார் சைக்கிளில் பயணிக்க அதிக ஆர்வம் இருந்தது. ஒரு நாள் மோட்டார் சைக்கிளில் பயணிக்கும் போது பொலிஸார் கைது செய்தனர். அன்று இவ்வாறான சாதனை ஒன்றை நிகழ்த்த வேண்டும் என்ற எண்ணம் தோன்றியது. பொலிஸாருக்கு மிக்க நன்றி. அதனாலேயே இன்று இவ்வாறான சாதனையை நிகழ்த்த முடிந்தது" - என்று தரிந்து தெரிவித்தார். (5)

# வடக்கிலும் குளிரான காலநிலை தொடரும்

கொழும்பு, பெப். 20

எதிர்வரும் நாள்களில் நாட்டின் பல பகுதிகளில் காலை மற்றும் இரவு வேளைகளில் குளிரான காலநிலை காணப்படும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

வடக்கு, வடமத்திய, மேல்மாகாணங்களில் இத்தகைய காலநிலை காணப்படும்.

இதேவேளை பிற்பகல் 2 மணியின் பின்னர் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களின் சில இடங்களில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும்.

நாட்டின் சில பகுதிகளில் காலை வேளைகளில் பனிமூட்டத்துடன் கூடிய காலநிலை காணப்படும் என்றும், அந்தத் திணைக்களம் மேலும் குறிப்பிட்டுள்ளது. (5)



# சீனாவுக்கு ஆதரவு மைத்திரி உறுதி

கொழும்பு, பெப். 20

சீனாவின் திட்டங்கள், முதலீடுகளுக்கு இலங்கை உறுதியான ஆதரவை வழங்கும் என்று அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன உறுதியளித்துள்ளார்.


இலங்கைக்கான சீனத் தூதுவர் செங்சியுவான் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவைச் சந்தித்துப் பேச்சு நடத்திய போதே இந்த உறுதிமொழி அளிக்கப்பட்டதாக, சைனா 'ரைம்ஸ்' செய்தி வெளியிட்டுள்ளது.

இந்தச் சந்திப்பின் போது, அம்பாந்தோட்டைத் துறைமுகத்தைச் சீன நிறுவனம் முகாமைத்துவம் செய்வதற்கும், சீன முதலீட்டிலான கைத்தொழில் பூங்கா மற்றும் சீனாவின் திட்டங்களுக்கும் அரச தலைவர் தமது ஆதரவை வெளிப்படுத்தியுள்ளார்.

இரண்டு நாடுகளுக்கும் இடையிலான அரசியல், பொருளாதார, மற்றும் வர்த்தக உறவுகள் தொடர்பாகவும் இந்தச் சந்திப்பின் போது கருத்துக்கள் பரிமாறப்பட்டுள்ளன.

இலங்கையில் ஏற்பட்டுள்ள அரசியல் குழப்பங்களை அடுத்து, சீனத் தூதுவர் ஏற்கனவே தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவையும் சந்தித்துப் பேச்சு நடத்தியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (5)

## மரண அறிவித்தல்



பிறப்பு 27 . 03 . 1954

இறப்பு 19 . 02 . 2018

### ஆறுமுகம் கனகலிங்கம்

**(உரிமையாளர் - ஆதிவிநாயகர் ஸ்ரோர்ஸ், வவுனியா)**

குண்டங்கரை, களபூமி, காரைநகரைப் பிறப்பிடமாகவும், 24/2 கதிரேசு வீதி, வைரவப்புளியங்குளம், வவுனியாவை நிரந்தர வதிவிடமாகவும், 8A(2/2) 57 ஆவது ஒழுங்கை, வெள்ளவத்தையை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட வவுனியா பிரபல தொழிலதிபர் ஆறுமுகம் கனகலிங்கம் (உரிமையாளர் - ஆதி விநாயகர் ஸ்ரோர்ஸ், வவுனியா) நேற்று (19.02.2018) திங்கட் கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - அன்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ் சென்றவர்களான கம்பளை நடராசா - அன்னம்மா தம்பதிகளின் (நடராசா & சன்ஸ்) அன்பு மருமகனும், சிவதேவியின் பாசமிகு கணவரும், தர்சனா (ஆசிரியர் - பூவரசங்குளம் மகாவித்தியாலயம் - வவுனியா), சிவசங்கர் (பொறியியலாளர் - Project Manager - Intec), உமாசங்கர் (பொறியியலாளர் - Link Engineering) ஆகியோரின் அன்புத் தந்தையும், Dr. ஜங்கரன் (தேசிய வைத்தியசாலை - கொழும்பு), பிரசன்யா (Simcentric - Technologies - Project Manager) ஆகியோரின் அன்பு மாமனாரும், அபிஷன், அக்ஷரா ஆகியோரின் அன்புப் பேரனும், சிவபாதசுந்தரலிங்கம், சிவபூதிமலர் ஆகியோரின் அன்பு சகோதரரும், சந்திராவதி, காலஞ்சென்ற இளந்தளைசிங்கம் சரோஜினிதேவி, சாரதாதேவி, விவேகானந்தன், சாந்தினிதேவி, லோகேஸ்வரி, காலஞ்சென்ற தர்மதேவன், இந்திராதேவி, இந்திரேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனரும், காலஞ்சென்ற வேலாயுதம், ஞானேஸ்வரி மற்றும் கருணானந்தராஜா நாகரஞ்சனி ஆகியோரின் அன்பு சம்பந்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 22.02.2018 வியாழக்கிழமை காலை 7 மணியளவில் அவரது வவுனியா இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தட்சணாங்குளம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**

(ACO/..)(11.17)

**சங்கர் - 077 828 0934, உமா - 077 879 7943**

## மரண அறிவித்தல்



### செல்லப்பா நடராசா

**(ஓய்வுநிலை ராணுவ உத்தியோகத்தர், முன்னாள் பாதுகாப்பு உத்தியோகத்தர், மக்கள் வங்கி, சுன்னாகக்கிளை)**

உரும்பிராய் வடக்கைப் பிறப்பிடமாகவும், பெரியமதவடி உடுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லப்பா நடராசா (ஆமி நடராசா) 18.02.2018 ஞாயிற்றுக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லப்பா - தங்கம்மா தம்பதிகளின் பாசமிகு மகனும், காலஞ்சென்றவர்களான சுவாமிநாதன் - சின்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற குலமணியின் (ஓய்வுபெற்ற ஆசிரியர், உடுவில் மகளிர் கல்லூரி) அன்புக் கணவரும், தவரஞ்சன் (கனடா), காலஞ்சென்ற அருந்ததி ஆகியோரின் பாசமிகு தந்தையும், பிரமிலாவின் அன்பு மாமனாரும், லதுர்சன், சௌமியா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (21.02.2018) புதன்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக உடுவில் பூவோடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**நூலக வீதி, பெரியமதவடி,**
**உடுவில் கிழக்கு.**
**(உடுவில் பிரதேச செயலகம் முன்பாக)** (CS/14038)(11.17)

**தகவல்**
**மகன் - தவரஞ்சன்**
**076 300 4262**

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

## திருமதி லக்ஷி நந்தகுமார்

### ஏங்கிருக்கிறாய் அன்னையே....!

நேற்று நிழல்போல் இருந்த நீ - இன்று நினைவாய் மாறிவிட்டாய்...!
கண் இமைக்கும் நேரத்தில் காற்றாகி -கண்ணீர் துளியுமாகிவிட்டாய்...!
இதயங்களெல்லாம் நொருங்க - இமைகளெல்லாம் நனைய
நீ எங்களை தவிக்கவிட்டு - இன்று ஓராண்டு ஆயிற்றுதம்மா!

நேற்று வரை எம்மோடு எம் குடும்பத் -தலைவியாய்...! பாசமாய்...! பந்தமாய்...!
எம்மோடு வாழ்ந்த நீ இன்று எம் - காவல் தெய்வமுமானாய்...!
நீ எங்களை விட்டு தூரத்திலில்லை- நினைவுகளில் நிலைத்து இருக்கிறாய்...!
நீ எங்கும் போகவில்லை -எங்கள் இதயங்களில் நிறைந்து வாழ்கிறாய்...!

என்றாவது ஒருநாள் எங்கோ ஓரிடத்தில் - நாம் மீண்டும் சந்தித்துக்கொள்வோம்!...
எம் பந்தத்திற்கு என்றும் மரணமில்லை அன்னையே...!

ஆண்டொன்று ஆனதென்று அறிவு எமக்கு கூறுகிறது
உண்மைதானா இதுவென்று எம் உள்ளுணர்வு மறுக்கிறது
கண்மூடித்திறப்பதற்குள் எல்லாம் கனவு போல்தான் தெரிகிறது
கனவாகி விடாதா என்றும் எம் நனவு மனம் ஏங்குகிறது
மறக்கவும் முடியவில்லை உன்னை- மனதில் மறைக்கவும் முடியவில்லை
மங்கையே உன் மரிப்பு நம்மையெல்லாம் - மரண பயத்துள்ளே தள்ளியது

மாண்பு மிக்கவளே! மனங்கலங்காதே!
வாழ்தலுக்கான போராட்டத்தில் - இங்கு -நீதான் ஜெயித்துள்ளாய்
வாழ்கின்றாயே நம் அகங்களில்... தொடர்கிறது நம் போராட்டம்
உன் நினைவு விழுதுகளையும் சுமந்தபடி
விழுதுகள் விருட்சமாகி உன் நிழலை நிஜப்படுத்தும்
நம்புவோம் நம்பியே மன் அமைதிகொள்வோம்
மனங்கலங்காதே நீயும் அமைதிகொள்
படைத்தவன் படி அளப்பான் என்றே.....



தோற்றம் 29.05.1984

மறைவு 03.03.2017

திதி - மாசிமாத பூர்வபட்ச பஞ்சமி (20.02.2018) செவ்வாய்க்கிழமை

**குடும்பத்தினர்.**

"சின்னத்துரை சிற்பாலயம்"
118, சிவப்பிரகாசம் வீதி
யாழ்ப்பாணம்.
077 677 9314

## தேர்தல் கடமைகளில் ஈடுபட்ட அரச உத்தியோகத்தர்கள்

### கொடுப்பனவுகளுக்கு விண்ணப்பிக்கலாம்

மாங்குளம்.பெப்.20

கடந்த 10ஆம் திகதி நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தல் கடமைகளில் ஈடுபட்ட அரச உத்தியோகத்தர்கள் கடமைக்குரிய கொடுப்பனவுகளுக்கு தங்கள் அலுவலகங்கள் ஊடாக விண்ணப்பிக்கமுடியும் என தேர்தல் திணைக்களம் அறிவித்துள்ளது.

இது தொடர்பான விவரங்கள் அடங்கிய சுற்றுநிருபம் (2018-01) அனைத்துச் செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள் மற்றும் பகுதிப் பொறுப்பாளர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம் ஒவ்வொரு நிலைகளிலும் கடமைபுரிந்தவர்கள் தமது கடமைக்கு ஏற்ற கொடுப்பனவுகளைப் பெறமுடியும். இந்தமுறை வழக்கத்துக்கு மாறாக வாக்கெடுப்பு நிலையங்களிலே வாக்கெண்ணல் பணிகளும் நடைபெற்றதன் காரணமாக சில உத்தியோகத்தர்களுக்கு வாக்கெண்ணல் கடமைகளுக்கு நியமனக்கடிதம் வழங்கப்படவில்லை. இருப்பினும் இவர்கள் தங்கள் கடமைக்கான வரவுச் சான்றிதழைக்கொண்டு தங்கள் கொடுப்பனவைப் பெற்றுக் கொள்ளமுடியும்.

இந்தக் கொடுப்பனவுகள் எதிர்வரும் ஏப்ரல் 30ஆம் திகதியுடன் நிறைவு செய்யப்படவுள்ளன. இது தொடர்பான மேலதிக விடயங்களை www.elections.gov.lk என்ற இணையத்தளத்தில் பார்வையிடமுடியும் எனவும் தேர்தல் திணைக்களம் தமது சுற்றறிக்கையில் குறிப்பிட்டுள்ளது. (எ-72)

# உரிமைகளை மீறுவதாக உள்ளது சங்குகேணி குடியிருப்பு விதிமுறை

### தமக்கென வீடுகள் அமைத்துத் தருமாறு அங்குள்ள பொதுமக்கள் கோரிக்கை

கிளிநொச்சி, பெப். 20

சுதந்திரமாக வாழ்வதற்கு தமக்கெனச் சொந்தமாகக் காணிகளைத் தந்து உதவுமாறு முகாவில் சங்குகேணி குடியிருப்பு மக்கள் கோரிக்கை விடுகின்றனர். குறித்த குடியிருப்பில் விதிக்கப்பட்டுள்ள கடுமையான நிபந்தனைகள், கட்டுப்பாடுகள் எமக்குப் பொருத்தமாக இருக்கவில்லை.

அவை அங்கு நாம் தொடர்ந்து தங்கி வாழ்வதற்கான உரிமையை மீறுவதாக அமைந்துள்ளன. எனவே எமக்கென்று தனியே வீடுகள் கட்டித்தரவேண்டும் என்று குறித்த மக்கள் தெரிவித்தனர்.

இது தொடர்பில் அங்குள்ள பொதுமக்கள் மேலும் தெரிவித்ததாவது:

கிளிநொச்சி மாவட்டத்தின் பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட முகாவில் கிராமத்தில் சங்குகேணி குடியிருப்பு (ஆச்சிரமம் ) உள்ளது. அங்கு பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் உட்பட 67 குடும்பங்கள் வசித்துவருகின்றன.

வடக்கு மாகாணத்தின் நாலாபுறத்திலும் இருந்து மக்கள் அங்கு வசித்து வருகின்றனர்.

கணவனை இழந்தோர், அங்கவீனமானவர்கள், வறுமையால் பீடிக்கப்பட்டோர், சொந்தமாகக் காணி அற்றோர் உள்ளிட்டவர்களே அந்தக் குடியிருப்பில் வசித்து வருகின்றோம். வேறு எங்காவது எமது உழைப்பில் காணி வாங்கவோ, வீடு கட்டவோ முடியாதவர்களாகவே நாம் காணப்படுகிறோம்.

அங்கு நிரந்தரமாக வசிக்கமுடியாத நிலை காணப்படுகின்றது. நாங்கள் அங்கு வசிப்பதாக இருந்தால் எமது ஜீபவ னோபாயத்தைக் கொண்டு செல்லக்கூடியவாறு ஏதாவது சிறுதொழில் முயற்சி இருக்க வேண்டும். குறித்த குடியிருப்பில் கோழிவளர்ப்பு, ஆடு வளர்ப்பு என்பவற்றை மேற்கொள்ள முடியாது என்று கண்டிப்பான உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. அதனை மீறினால் அங்கிருந்து வெளியேற்றப்படுவோம். வெளியே எங்கே போவது? தொழில் நிமித்தம் வெளியே சென்று திரும்பி வரத் தாமதமானால் குடியிருப்பு வளாகத்துக்குள் செல்ல முடியாது.

எமக்கு என்று சொந்தக் காணிகள், வீடுகள் எதுவும் இல்லை. அதனால் தான் நாங்கள் இங்கு வசிக்கின்றோம். காணிகள் அற்றோருக்கு அரச காணிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

அவ்வாறு எமக்கும் வசிப்பதற்கு காணிகளும் தற்காலிக வீடுகளும் தந்தால் எமது ஜீவனோபாயத்தை கொண்டு நடத்தக் கூடியவாறு ஆடு வளர்ப்பு கோழி வளர்ப்புக்களை மேற்கொண்டு எமது பிள்ளைகளின் கல்விச் செலவுகளைப் பார்க்கக் கூடியதாக இருக்கும் என்று கோருகின்றனர். இது தொடர்பில் பிரதேச செயலர், மாவட்டச் செயலர் உள்ளிட்டோர் உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றனர். (எ-4,6)

### மாகாண திணைக்களங்களில் பணி புரிவோருக்கான

## வருடாந்த இடமாற்றம் எதிர்வரும் முதலாம் திகதி நிறைவுக்குவரும்

யாழ்ப்பாணம்.பெப்.20

வடக்கு மாகாண திணைக்களங்களில் பணி புரிவோருக்கான வருடாந்த இடமாற்றம் மார்ச் முதலாம் திகதியுடன் நிறைவுக்குவரும் என்று மாகாண பிரதி முதன்மைச் செயலரின் நிர்வாகப்பிரிவு தெரிவித்துள்ளது.

இது பற்றி மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

வடக்கு மாகாணத்தின் நடப்பு வருடத்துக்கான இடமாற்றம் ஜனவரி முதலாம் திகதியுடன் நடைமுறைப்படுத்தும் வகையில் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

எனினும் உள்ளூராட்சித் தேர்தலின் பின்னர் இடமாற்றங்கள் அமுல்படுத்தப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. அதாவது இடமாற்றங்கள் பெப்ரவரி மாதம் 15ஆம் திகதியிலிருந்து நடைமுறைப்படுத்தும் வகையில் அமைய வேண்டும் என்று திணைக்களங்களுக்குத் தெரிவிக்கப்பட்டது. எனினும் வருட ஆரம்பத்தில் வேலைகள் அதிகமாகக் காணப்பட்டமையாலும், இட மாற்றம் தொடர்பான மேன்முறையீடுகளைப் பரிசீலிக்க வேண்டிய தேவை இருந்தமையாலும் மாற்றங்களில் கால தாமதம் ஏற்பட்டது. வடக்கு மாகாணத்தில் இந்தமுறை 450 பேர் வரையில் இடம் மாற்றம் செய்வதற்கு தெரிவாகியிருந்தனர்.

சேவை செய்யும் இடத்தில் ஐந்து வருடங்களை முழுமை செய்தவர்கள் இடமாற்றம் செய்யப்படுகின்றனர். இடமாற்றம் அனைவருக்கும் ஒத்துபோகும் வகையில் பொதுவான நடைமுறைப்படி அமைந்தாலும் மேன்முறையீடு செய்யவிரும்புவோர் மேன்முறையீடு செய்யலாம். இவ்வாறு 195 பேரின் இடமாற்றம் தொடர்பான மேன்முறையீடு கிடைக்கப்;பெற்றது. மேன்முறையீட்டு சபையின் முதலாவது அமர்வில் 150 மேன்முறையீடுகளும், இரண்டாவது அமர்வில் 45 மேன்முறையீடுகளும் கிடைபெற்றன. அவை சபையால் பரிசீலனை செய்யப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்ட விவரங்கள் திணைக்களங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இடமாற்றம் வழங்கப்பட்ட இடங்களைத் தவிர வேறு இடங்களில் வெற்றிடம் காணப்படும் இடங்களுக்கு அவர்களை நியமிக்ககடகூடிய இடங்களுக்கு விண்ணப்பித்தவரகளின் மேன்முறையீடுகள் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. பெப்ரவரி மாதம் 28ஆம் திகதி அனைத்து இடமாற்றங்களும் மேற்கொள்ளப்பட்டு மார்ச் மாதம் முதலாம் திகதி அளவில் வேலைகளைப் பொறுப்பேற்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டது. (எ-ரி)

## மன்னார் வைத்தியசாலைக்கு உபகரணங்கள் வழங்கி வைப்பு



மன்னார்,பெப்.20

மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலைக்கு சுமார் 7 இலட்சம் ரூபாய் பெறுமதியான நோயாளிகள் நிலமையைக் கண்காணிக்கும் கருவிகள் லண்டன் புனர்வாழ்வு புது வாழ்வு அமைப்பினூடாக அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் வைத்து அமைப்பின் உறுப்பினர் மருத்துவர் சண்முகநாதன் மயூரன் மற்றும் வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ஜீ.குணசீலன் ஆகியோரால் வைத்தியசாலை நிர்வாகத்திடம் கடந்த வெள்ளிக்கிழமை கையளிக்கப்பட்டது.

வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவு மற்றும் அதி தீவிர சிகிச்சைப் பிரிவு ஆகியவற்றில் பயன்படுத்துவதற்கேற்ற குறித்த கருவிகள் 4 வழங்கப்பட்டன. (எ-56)

## இழப்பீட்டு கொடுப்பனவு வழங்கி வைப்பு

முல்லைத்தீவு.பெப்.20

கடந்த வருட இறுதிப் பகுதியில் முல்லைத்தீவு புதுக்குடியிருப்புப் பகுதியில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட இரு வர்த்தகர்களுக்கு இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபன முல்லைத்தீவுக் கிளையால் கடந்த வெள்ளிக்கிழமை இழப்பீடு வழங்கப்பட்டது.

பாதிக்கப்பட்ட இரு வர்த்தகர்களுக்கும் கிளை முகாமையாளர் சி.சிவகுமார் மற்றும் நிர்வாக அலுவலர் ஜெ.பவிதன் ஆகியோர் 1 லட்சத்து 83 ஆயிரம் ரூபா மற்றும் 40 ஆயிரம் ரூபாவுக்கான இழப்பீட்டுக் காசோலைகளை வழங்கினர் எனத் தெரிவக்கப்பட்டது. (எ-9)

## இறந்தநிலையில் மீட்கப்பட்ட பெண்ணின் கணவர் கைது

கிளிநொச்சி, பெப். 20

வட்டக்கச்சியில் இரு பிள்ளைகளின் தாய் இறந்த நிலையில் மீட்கப்பட்ட சம்பவம் தொடர்பில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று தருமபுரம் பொலிஸ் நிலையத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

வட்டக்கச்சி பகுதியில் கடந்த 14ஆம் திகதி வீட்டின் பின்புறம் இறந்த நிலையில் இருந்து இரண்டு பிள்ளைகளின் தாயார் சடலமாக மீட்கப்பட்டிருந்தார். விசாரணைகளை ஆரம்பித்த பொலிஸார் குறித்த பெண்ணின் கணவரைக் கைது செய்து கிளிநொச்சி நீதிமன்றில் முற்படுத்தியுள்ளனர். அவர் தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகள் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சுமேத தலமையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று தருமபுரம் பொலிஸ் நிலைய தகவல்கள் மேலும் தெரிவிக்கின்றன. (எ-6)

## ஆறுமுகத் திட்ட அறிக்கையின் பின்னரே மேலதிக நடவடிக்கை

### மாகாண விவசாய அமைச்சு தெரிவிப்பு

யாழ்ப்பாணம்.பெப்.20

யாழ்ப்பாண மாவட்டத்துக்கான (வடமராட்சியில்) 'ஆறு முகம்' நீர்ப்பாசன திட்டத்தின் சாத்திய வள அறிக்கை சமர்பிக்கப்பட்ட பின்னரே அதன் செயற்பாடுகள் தொடர்பில் ஆராயப்படும் என்று மாகாண விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

இது பற்றி மேலும் தெரிவித்ததாவது:

யாழ்ப்பாண மாவட்டத்தின் விவசாயம், குடி தண்ணீர் ஆகிய தேவைகளை முழுமை செய்வதற்கு தண்ணீரைச் சேமித்து வைப்பது அவசியம். மழை மூலம் கடலுக்குச் செல்லும் நீரினை சேமிப்பது பயன் உள்ளதாக அமையும். ஆகவே இது தொடர்பில் 40 வருடங்களுக்கு முன்னர் 'ஆறுமுகம் திட்டம்' ஆரம்பிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு கைவிடப்பட்டது.

இந்த திட்டத்தை மீண்டும் செயற்படுதல் சாத்தியமாகுமா என்பது தொடர்பில் நெதர்லாந்து நாட்டைச் சேர்ந்த துறை சார்ந்தவர்கள் அண்மையில் வடக்கு மாகாண பிரதி முதன்மைச் செயலர் உள்ளிட்ட அதிகாரிகளைச் சந்தித்துக் கலந்துரையாடல் ஒன்றை மேற்கொண்டதுடன் கள நிலைகளையும் பார்வையிட்டுச் சென்றனர். இந்தத் திட்டம் சாத்தியமாகுமானால் கடலுக்குச் செல்லும் நீர் சேமிக்கப்பட்டு யாழ்ப்பாண மாவட்டத்தின் விவசாயம் மற்றும் குடி தண்ணீர் பிரச்சினைகளைத் தீர்க்க முடியுயும். தொடர்பில் ஆராய்ந்த நெதர்லாந்து நாட்டவர்கள் எதிர்வரும் மே மாதமளவில் சாத்திய அறிக்கை ஒன்றைச் சமர்பிக்கவுள்ளனர். அந்த அறிக்கையின் தன்மையிலேயே திட்டம் முன்னெடுக்கப்படுவது தொடர்பில் மேலான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (எ-ரி)

# ஈ–கற்றல் இறுவட்டுக்கள் அறிமுகமும் கையளிப்பும்

யாழ்ப்பாணம்,பெப்.20
ஜி.சி.ஈ உயர்தர கணித, விஞ்ஞானப் பிரிவு மாணவர்களுக்காக தயாரிக்கப்பட்ட இரசாயனவியல், பௌதீகவியல், உயிரியல் பாடங்களுக்கான ஈ–கற்றல் இறுவட்டுக்களை அறிமுகம் செய்து மாணவர்களுக்கு கையளிப்பதற்கான நிகழ்வு மாகாணக் கல்வித் திணைக்களத்தால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது என்று வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் எஸ். உதயகுமார் தெரிவித்துள்ளார்.

இந்த நிகழ்வு யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையின் தம்பையா மண்டபத்தில் எதிர்வரும் 24ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் காலை 11.30 மணிவரை இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் இணைப்பு 1 இலுள்ள அலுவலர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோர் கலந்து கொள்ள நடவடிக்கை எடுப்பதுடன் தாமும் கலந்து கொள்ள வலயக் கல்விப் பணிப்பாளர்கள் வேண்டப்படுகின்றனர்.

நிகழ்வில் இறுவட்டுக்கள் பாடசாலைக்கு வழங்கப்படும். வடக்கு மாகாகண முதலமைச்சர் இறுவட்டினை வெளியீடு செய்து வைக்கவுள்ளார்.

நிகழ்வில் வடக்கு மாகாண கல்வி அமைச்சர், அமைச்சின் செயலர் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (எ-4)

# இரணைமடுவில் அரச மரம் உயிரோடு நகர்த்தப்படுகிறது

கிளிநொச்சி,பெப்.20
கிளிநொச்சி இரணைமடுக் குளத்தின் வான் பகுதிக்கருகில் 2009ஆம் ஆண்டுக்கு பின்னர் அமைக்கப்பட்ட புத்தர் சிலை அண்மையில் அங்கிருந்து அகற்றப்பட்டிருந்த நிலையில் தற்போது அங்கிருந்த அரச மரமும் உயிரோடு பிடுங்கப்பட்டு வேறு இடத்துக்கு மாற்றப்படவுள்ளது.



அரச மரத்தைச் சுற்றி பெருமளவில் குழி ஏற்படுத்தி மரம் பாதிக்கப்படாத வகையில் உயிரோடு நகர்த்தும் முயற்சிகள் படையினரால் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

குறித்த அரச மரம் மற்றும் ஏற்கனவே குளக்கரையில் இருந்து எடுக்கப்பட்ட புத்தர் சிலையும் பிறிதொரு இடத்தில் வைக்கப்படலாம் என பொதுமக்கள் சந்தேகிக்கின்றனர். (எ-4)

## வட்டுவாகல் காணிகள் அளவீடு செய்யப்பட்டால்

# அரசு இதுவரை பார்த்திராத பெரும் போராட்டம் கோத்தபாய கடற்படை முகாமில் வெடிக்கும்

## காணி உரிமையாளர்கள் எச்சரிக்கை

முல்லைத்தீவு, ஒக்.27
வட்டுவாகல் கோத்தபாய கடற்படை முகாம் அமைந்துள்ள மக்களுடைய காணிகளை சுவீகரிக்கும் நோக்கில் அளவீடு செய்யப்படுமாயின் இதுவரை பார்த்திராத பெரும் போராட்டம் வெடிக்கும். இவ்வாறு வட்டுவாகல் காணி உரிமையாளர்கள் சம்மந்தப்பட்ட தரப்பினருக்கு எச்சரிக்கை விடுத்தனர்.

பொதுமக்களுக்குச் சொந்தமான வட்டுவாகல் கோத்தபாய கடற்படை முகாம் அமைந்துள்ள காணி, மற்றும், அதனை அண்டியுள்ள காணியுமாக மொத்தம் 617 ஏக்கர் காணிகள் மீண்டும் நாளை மறுதினம் 22ஆம் திகதி அளவீடு செய்யப்படவுள்ளது என்று நில அளவைத் திணைக்களத்தால் பகிரங்கமாக ஒட்டப்பட்ட துண்டுப்பிரசுரங்களை அடுத்து கருத்து தெரிவித்த போதே அவர்கள் இவ்வாறு தெரிவித்தனர்.

இறுதிப்போரின்பின்னர் முல்லைத்தீவு, வட்டுவாகல் பிரதேசத்தில் மக்களுக்குச் சொந்தமான 617 ஏக்கர் காணிகள் கடற்படையினால் அபகரிக்கப்பட்டன. அங்கு கடற்படையினர் பாரிய கடற்படைத் தளத்தை அமைத்து நிலைகொண்டனர். மக்களுடைய மீள்குடியமர்வின் போது கடற்படையினரால் அபரிக்கப்பட்ட குறித்த காணிகள் விடுவிக்கப்படவில்லை. மக்கள் நிர்க்கதியாகினர். இதுதொடர்பாக அரசியல் தலைவர்களுக்கும், அரச அதிகாரிகளுக்கும் தெரியப்படுத்தப்பட்டது. மக்கள் பிரதிநிதிகளுக்கும், அரசுக்குக்குமிடையில் பல பேச்சுக்கள் இடம்பெற்றன. எனினும் காணிகள் விடுவிக்கப்படவில்லை.

கடற்படைமுகாமை அகற்றித் தமது நிலங்களை விடுவிக்குமாறு கோரி மக்கள் போராட்டங்களில் ஈடுபட்டனர். இந்தப் போராட்டங்கள் நீண்டகாலமாக இடம்பெற்றன. ஆனால் அரசு பராமுகமாகவே இருந்தது. சுவீகரிப்புக்காகக் காணிகளை அளவிடும் முயற்சியில் கடற்படையினர் முன்னரும் இரண்டு தடவைகள் ஈடுபட்டனர். அந்த முயற்சிகள் மக்களால் தடுத்து நிறுத்தப்பட்டன.

இதுதொடர்பில், பாதுகாப்பு அமைச்சின் உபசெயலாளர் தலைமையில் 2016ஆம் ஆண்டு ஜனவரி 16ஆம் திகதி மற்றும் 24ஆம் திகதிகளில் முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தில் மாவட்டச் செயலாளர் ரூபவதி கேதீஸ்ரன் தலைமையில் கலந்துரையாடல்கள் இடம்பெற்றன. இதில் தமது நிலம் மீளக் கையளிக்கப்படவேண்டும் என்று காணி உரிமையாளர்கள் உறுதியாகக் கோரினர். இவை அனைத்தையும் தாண்டி கடற்படையினர் அடாத்தாக மேற்படி பிரதேசத்தினை அபகரிக்கும் நோக்கில் அளவீடு செய்ய முயன்றனர். எனினும் காணி உரிமையாளர்கள், மக்கள், மீனவர்கள் மற்றும் அரசியல் தலைவர்கள் என அனைவரும் வீதிமறியலில் ஈடுபட்டனர். வட்டுவாகல் பாலம் மறிக்கப்பட்டது. போக்குவரத்துகள் தடைப்பட்டிருந்தன. அங்கு பெரும் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. சம்பவ இடத்துக்கு வந்த மாவட்டச் செயலக அதிகாரிகள் மக்களுக்குச் சாதகமாக வாக்குறுதிகளை வழங்கினர். காணிகளை விடுவிப்பதற்கு தாம் நடவடிக்கைகள் எடுப்பதாக உறுதியளித்தனர். அந்த வாக்குறுதிகளை ஏற்று போராட்டம் கைவிடப்பட்டது. இந்தவிடயம் மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுவின் கவனத்துக்கும் கொண்டுவரப்பட்டது. ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் அந்தப் பிரதேசத்தை எந்தக் காரணம் கொண்டும் கடற்படையினருக்கு வழங்கமுடியாது என்று தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது. ஆனால் வட்டுவாகல் கடற்படைத் தளத்தின் சுற்றுக் காவலரண்கள் அனைத்தும் நிரந்தரமாக சீமெந்தினால் கட்டியமைக்கப்பட்டன. இதனையடுத்து கடந்த ஏப்ரல் மாதம் மீண்டும் மக்கள் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர். இத்தனை போரைாட்டங்கையும் தாண்டி, காணிகளைச் சுவீகரிப்பதாக அரசு அறிவித்தது. இதுதொடர்பாக ஆட்சேபனை இருப்பின் தெரியப்படுத்துமாறும் கோரியது. தமது சொந்த நிலங்களைத் தங்களிடம் கையளித்துவிட்டு கடற்படையினர் அவர்களுக்குப் பொருத்தமான இடங்களுக்குச் செல்ல வேண்டும் என மக்கள் தமது ஆட்சேபனைக் கடிதங்களில் தெரிவித்திருந்தனர். இவை எல்லாவற்றையும் மீறி கடற்படையினரால் அபரிக்கப்பட்டுள்ள மக்களுக்குச் சொந்தமான 617 ஏக்கர் காணிகள் நிரந்தரமாகவே சுவீகரிக்கப்பட்டுவதான வர்த்தகமானி அறிவித்தலை கடந்த ஓகஸ்ட் மாதம் 4ஆம் திகதி அரசு வெளியிட்டது. அதன் பின்னர் நான்காவது தடவையாக அளவீடுகள் முன்னெடுக்கப்பட்டன அதையும் மக்கள் திரண்டு தடுத்திருந்தனர். தற்போது 5ஆவது தடவையாக அந்தக் காணிகள் அளவிடப்படவுள்ளது.

இதன்போது காணி உரிமையாளர்கள் உள்ளிட்ட மாவட்டத்தைச் சேர்ந்த மக்கள் மட்டுமல்லாது படையினரிடம் காணிகளைப் பறிகொடுத்த அனைத்து மக்களும் இணைந்து பெரும் போராட்டத்தை நடத்துவோம். மக்களை ஏமாற்ற நினைக்கும் நல்லாட்சி அரசு இதுவரை பார்த்திராத போராட்டமாக அந்தப் போராட்டம் அமையும் என்று காணி உரிமையாளர்கள் எச்சரித்தனர். (21)

# பளையில் கசிப்பு மீட்பு

## ஒருவர் கைது

பளைத் தம்பகாமம் பகுதியில் கசிப்பு உற்பத்தில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் நேற்றுறு முந்தினம் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். அவரிடம் இருந்து 10 போத்தல் கசிப்பு, மற்றும் கசிப்பு உற்பத்தி பரல் ஒன்றும் மீட்கப்பட்டுள்ளன என பளைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சரத் அமரசிறி தெரிவித்தார்.

தம்பகாமம் பகுதியில் கசிப்பு உற்பத்தி இடம்பெறுகிறது என்று பொலிஸ் நிலையத்துக்குத் தகவல் கிடைத்தது. அதன்அடிப்படையில் அவர் கைது செய்யப்பட்டார். (21)

# 7 பிடியாணைகளில் தேடப்பட்டவர் ஹெரோயினுடன் வவுனியாவில் கைது

## 42 பவுண் நகைகளும் மீட்கப்பட்டன

வவுனியா, பெப். 20
பலநாள் திருடன் ஒருநாள் பிடிபட்டான் 7பிடியாணை பிறப்பிக்கப்பட்ட குடும்பஸ்தர் வவுனியாவில் ஹெரோயினுடன் சிக்கினார். அவரிடம் நடத்தப்பட்ட விசாரணையிலிருந்து 42 பவுண் நகைகள் இதுவரை மீட்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

திருட்டு உட்படப் பல்வேறு குற்றச் செயல்களுடனும் தொடர்புடைய குற்றச்சாட்டில் நீதிமன்றங்களால் பிடியாணை் பிறப்பிக்கப்பட்டுத் தேடப்பட்டுவந்தவர் நேற்றுக் கைது செய்யப்பட்டார். அவர் கைது செய்யப்படும் போது ,ஹெரோயின் போதைப்பொருளுடனேயே கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அவருக்கு யாழ்ப்பாண நீதிமன்றினால் 6 பிடியாணைகளும் ஊர்காவற்துறை நீதிமன்றினால் ஒரு பிடியாணையும் பிறப்பிக்கப்பட்டுள்ளமை தெரியவந்தது. புங்குடுதீவைச் சேர்ந்த அவருக்கு வயது 31. இரண்டு பிள்ளைகள்.

கடந்த 6ஆம் திகதி யாழ்ப்பாணத்திலிருந்து சொகுசு வாகனத்தில் கொழும்பு சென்றபோது தாண்டிக்குளம் பகுதியில் இரவு கடமையில் இருந்த பொலிஸாரால் அவர் கைது செய்யப்பட்டார்.

அவருக்குப் பிடியாணைகள் இருப்பது தெரியவந்தது. திருடப்பட்ட நகைகளை விற்பனை செய்யப்பட்டவற்றுள் 42 பவுண் தங்க நகைகள் வியாபார நிலையங்களிலிருந்து மீட்கப்பட்டுள்ளன. வவுனியா நீதிமன்ற அனுமதியுடன் அவர் பொலிஸ் காவலில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தயப்பட்டுள்ளார் என்று வவுனியா பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (4)

## மயிலிட்டி காச நோய் மருத்துவமனைக் காணியில்

# ஆரம்ப சுகாதாரப் பராமரிப்பு நிலையம் அமைக்க யோசனை

யாழ்ப்பாணம் பெப் 20
இலங்கை இராணுவத்தினரின் கட்டுப்பாட்டிலிருந்து அண்மையில் விடுவிக்கப்பட்ட காச நோய் மருத்துவமனைக் காணியில் ஆரம்ப சுகாதார பராமரிப்பு நிலையம் மற்றும் சுகாதார திணைக்கள உத்தியோகத்தர்களுக்கான பயிற்சி நிலையம் போன்றவற்றை அமைக்க யோசனைகள் முன்வைக் கப்பட்டுள்ளன என்று வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் குணசீலன் தெரிவித்தார்.

அவர் இது தொடர்பாக தெரிவித்ததாவது: யாழ்ப்பாணம் மயிலிட்டிப் பகுதியில் அமைந்திருந்த காச நோய் மருத்துவமனை வளாகம் அண்மையில் உத்தியோகபூர்வமாக விடுவிக்கப்பட்டது. அந்தக் காணியில் இருந்த காச நோய் மருத்துவமனை உள்நாட்டு போரின் காரணமாக முற்றாக அழிவடைந்து விட்டது. இதனால் நாம் அந்தக் காணியில் எவ்வாறான வேலைத்திட்டத்தை மேற்கொள்வது என கலந்துரையாடினோம்.

அந்தக் கலந்துரையாடலில் பலவிதமான யோசனைகளை பல முன்வைக்கப்பட்டன. அதில் வெளிநோயாளர் பிரிவினை உள்ளடக்கிய ஆரம்ப சுகாதார பராமரிப்பு நிலையம் மற்றும் சுகாதார திணைக்கள உத்தியோகத்தர்களுக்கான பயிற்சி நிலையம் ஆகியவற்றை அமைப்பது தொடர்பில் யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது. இந்த யோசனையை நாம் பரிசீலித்து வருகின்றோம். இதுதான் முடிவு என உறுதி செய்யப்படவில்லை. நடப்பாண்டுக்கான நிதி ஒதுக்கீடுகளை ஏற்கனவே செய்யப்பட்டுவிட்டன. ஆகவே மருத்துவமனை அபிவிருத்தி சார்பான நிதி ஒதுக்கீடு அடுத்த ஆண்டிலேயே சாத்தியமாகும் – என்றார்.

மயிலிட்டி காசநோய் மருத்துவமனை இலங்கையில் உள்நாட்டு போர் ஆரம்பமாகி 27 வருடங்கள் வரையில் இராணுவத்தினரின் கட்டுப்பாட்டிலேயே இருந்தது. இராணுவத்தினர் வசம் இருந்த குறித்த மருத்துவமனை முற்றாக அழித்தொழிக்கப்பட்டு அங்கு இராணுவத்தினரின் டாங்கி பிரிவினருக்கான ஓய்வு விடுதி அமைக்கப்பட்டிருந்தது. குறித்த காணி இராணுவத்தினரால் அண்மையில் விடுவிக்கப்பட்டுள்ளமை ட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-8)



## இலவச மருத்துவ முகாம்

திருகோணமலை,பெப்.20

ஆசிரியர்களுக்கான இலவச மருத்துவ பரிசோத்தனை முகாம் கிண்ணியா முஸ்லிம் மகளிர் மகா வித்தியாலயத்தில் நேற்று நடைபெற்றது.

கிண்ணியா பிரதேச சுகாதார மருத்துவ அதிகாரி அலுவலகத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த மருத்துவ முகாம் சுகாதார வைத்திய அதிகாரி ஏ.எம். அஜீத் தலைமையில் நடைபெற்றது.

இதில் கண் பார்வை, உயர் குருதி அழுக்கம், நீரிழிவு, உடல் நிறைச் சுட்டிகள், கெயஸ்ரோல், பெண் ஆசிரியர்களுக்கான கருப்பை மற்றும் மார்பக புற்றுநோய் ஆகிய பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

(ந.ரி4,40)

# சிறுபான்மையினர் ஆதரவு ஆட்சி அமைக்க அவசியம்

## முன்னாள் அமைச்சர் கஜதீர தெரிவிப்பு

**கொழும்பு,பெப்.20**

**சிறுபான்மை இன மக்களின் பிரச்சினைகளுக்கு எதிர்பார்த்த தீர்வுகளை வழங்க அரசு தவறியுள்ளது. சிறுபான்மை இன மக்களை வென்றெடுக்க முடியாது போனால், எவரும் நாட்டில் ஆட்சியமைக்க முடியாது.**

இவ்வாறு முன்னாள் அமைச்சர் சந்திரசிறி கஜதீர தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற சோசலிச மக்கள் முன்னணியின் ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது;

நல்லாட்சி அரசு வழங்கிய வாக்குறுதிகள் எதுவும் கடந்த மூன்று ஆண்டுகளாக நிறைவேற்றப்படவில்லை.

ஆட்சியமைக்க சிறுபான்மை மக்களின் ஆதரவு கட்டாயம் தேவை. இதுவும் நடந்து முடிந்த தேர்தலில் மக்கள் வழங்கிய சமிக்ஞைகளில் ஒன்று.

தெற்கில் மக்களின் ஆதரவை பெற்றாலும், வடக்கில் மக்களின் ஆதரவும் அவசியம். வடக்கிலும் குழப்பமான சமிக்ஞையை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உள்ளிட்டவர்களுக்கு மக்கள்வழங்கியுள்ளனர்.

வடக்கில் இனவாத சக்திகள் இருக்கலாம், ஆனால் மக்களின் வாக்குகளின் அடிப்படையில் அவர்கள் இனவாதிகள் அல்ல என்ற சமிக்ஞையையும் வெளிக்காட்டியுள்ளனர். என்றார்.

(ந.ரி4)

## கத்திக் குத்தில் ஒருவர் சாவு

திருகோணமலை,பெப்.20

திருகோணமலை சாம்பல்தீவுப் பகுதியில் நேற்று நடைபெற்ற கத்திக்குத்துச் சம்பவத்தில் ஒருவர் உயிரிழந்தார் எனப் பொலிஸார் தெரிவித்தனர். வீட்டு உரிமையாளருக்கும் வீட்டில் வாடகைக்கு இருந்தவருக்குமிடையில் ஏற்பட்ட வாக்குவாதத்தில் வீட்டு உரிமையாளரே கத்திக் குத்துக்கு இலக்காகி உயிரிழந்தார். திருகோணமலை பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில், சிகிச்சை பயனின்றி அவர் உயிரிழந்தார். சந்தேக நபர் கைது செய்யப்பட்டதுடன் மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டனர்.

(ந.ரி4)



## குறிஞ்சிக் குமரிகள் நாவல் வெளியீடு

யாழ்ப்பாணம், பெப்.20

கலா பூஷணம் எஸ்.புஸ்பராஜனின் "குறிஞ்சிக் குமரிகள்" நாவல் வெளியீட்டு விழா கவிஞர் ஐ.குமாரதாசன் தலைமையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

அரியாலை கலைமகள் சனசமூக நிலைய முத்தமிழ் கலா மண்டபத்தில் இடம்பெற்ற இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக யாழ்ப்பாண மாநகரசபை ஆணையாளர் த.ஜெயசீலனும், சிறப்பு விருந்தினராக வடமாகாண கல்வி அமைச்சின் சிரேஷ்ட உதவி செயலாளர் திருமதி. அ.சாந்தசீலனும் கலந்துகொண்டனர். நாவலின் முதற் பிரதியை பருத்தித்துறை ப.தெ.வ.கூ சங்க பொதுமுகாமையாளர் வ.இராஜலிங்கம் பெற்றுக்கொண்டார்.

நாவல் அறிமுக உரையை கலாபூஷணம் ந.இராமநாதனும் நூல்வெளியீட்டுரையை கலாநிதி சு.குணேஸ்வரனும் மதிப்பீட்டுரையை திருமதி கௌரி முகுந்தனும் வழங்கியினர். நிகழ்வில் பல் இலக்கிய ஆர்வலர்களும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

(ற)

## தேர்தலின் தோல்விக்கு ஐ.தே.கட்சியே காரணம்

### சக்காப் மௌலானா தெரிவிப்பு

அம்பாறை,பெப்.20

நடந்து முடிந்த குட்டித் தேர்தலில் ஐ.தே.கட்சியின் வீழ்ச்சிக்கு ஐ.தே.கட்சியே காரணமென முஸ்லிம் சமய கலாசார மற்றும் தபால் சேவைகள் அமைச்சின் கல்முனைத் தொகுதி இணைப்பாளர் அஸ்வான் சக்காப் மௌலானா தெரிவித்தார். கட்சியின் [illegible]பலாளரும் அமைச்சருமான கபீர் ஹாசிமுக்கு அனுப்பப்பட்ட மகஜரிலே இவ்வாறு தெரிவிக்கப்பட்டது. அதில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது;

நல்லாட்சி அரசில் அங்கம் வகிக்கின்ற ஐ.தே.கட்சியின் அமைச்சர்களுடைய கோட்டையாக இருந்து வந்த முக்கிய பல இடங்கள் தோல்வியைத் தழுவியதற்கான காரணம் அவர்களுடைய பலவீனமே. ஆட்சியை கைப்பற்றி மூன்று வருடம் எட்டிய நிலையிலும் ஐ.தே.கட்சி சரியான பயணத்தை நோக்கி செல்லவில்லை.

தொழில் வாய்ப்புக்கள் சரியாக வழங்கப்படாமை, சென்ற ஆட்சியாளர்களினால் அரசியல் பழிவாங்கப்பட்ட ஐ.தே.கட்சிகாரர்களை கவனத்தில் எடுக்காமை, அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் அந்தந்தப் பிரதேசங்களில் எதுவித அபிவிருத்தியும் செய்யாமை என்பது போன்ற பல காரணங்கள் தோல்விக்குக் காரணம்.என்றுள்ளது.

(ந.ரி4)

## விமல் வீரவன்சவின் வழக்கு ஒத்திவைப்பு

கொழும்பு,பெப்.20

நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்சவுக்கு எதிராக வழக்கு விசாரணை எதிர்வரும் மே மாதம் 16ம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டது.

இந்த வழக்கு கொழும்பு மேல்நீதிமன்றில் நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

சட்டபூர்வமான வருமானத்துக்கு மேலதிகமாக 75 மில்லியன் ரூபா சொத்துக்கள் சேர்த்துள்ளமை தொடர்பிலேயே இந்த வழக்கு தொடரப்பட்டது. (ந.ரி4)

## சிகரெட்டுகளுடன் பொண் கைது

கொழும்பு,பெப்.20

கட்டுநாயக்க பன்னாட்டு விமான நிலையத்தில் சுமார் 8 இலட்சம் ரூபா பெறுமதியான சிகரெட்டுகளுடன் பொண் ஒருவர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டார்.

சந்தேக நபர் சிங்கப்பூரில் இருந்து சட்டவிரோதமாக சிகரெட்டுக்களைக் கடத்தி வந்ததாக சுங்கத் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட பெண் கொழும்பு, கிராண்ட்பாஸ் பிரதேசத்தை சேர்ந்த 42 வயதுடையவர் என பொலிஸார் தெரிவித்தனர். கைப்பற்றப்பட்ட சிகரெட்டுக்கள் அரசுடைமையாக்கப்பட்டதுடன் 50 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்ட பின்னர் சந்தேக நபர் விடுவிக்கப்பட்டார் எனத் தெரிவிக்கப்பட்டது. (ந.ரி4)

## வாகன விபத்தில் ஒருவர் உயிரிழப்பு

கண்டி,பெப்.20

நாவலப்பிட்டி பொலிஸ் பிரிவில் நேற்று முச்சக்கரவண்டி ஒன்று வீதியை விட்டு விலகி சுமார் 150 அடி பள்ளத்தில் பாய்ந்து விபத்துக்குள்ளானது.

அதில் ஒருவர் உயிரிழந்தார். மற்றொருவர் படுகாயமடைந்தார். ருவான்புர ஹப்புகஸ்தலாவ வீதியில் சென்ற முச்சக்கர வண்டியே வீதியை விட்டு விலகி இவ்வாறு விபத்துக்குள்ளானது.

படுகாயமடைந்தவர் நாவலப்பிட்டி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டனர். (ந.ரி4)





## முல்லைத்தீவில் மருத்துவ முகாம்

முல்லைத்தீவு,பெப்.20

முல்லைத்தீவு மாவட்ட பிராந்திய சுகாதார பணிமனையின் ஏற்பாட்டில் ஜேர்மன் நாட்டு மருத்துவர்களும் இணைந்து நடமாடும் மருத்துவ சேவை மேற்கொண்டு வருகின்றார்கள்

இந்த இலவச மருத்துவ முகாம் முள்ளிவாய்க்கால் கிழக்கு பொதுநோக்கு மண்டபத்தில் நேற்று நடைபெற்றது.

முல்லைத்தீவு செல்வபுரம் பகுதியில் நடமாடும் மூக்குக்கண்ணாடி சேவை ஒன்றை எதிர்வரும் மார்ச் மாதம் 3ஆம் திகதி நடத்தப்படவுள்ளது.

இதில் பெருமளவிலான மக்கள் பயன் பெற்றதுடன் கிராமங்களின் பொதுநோக்கு மண்டபங்களில் நடைபெறும் சேவையில் கிராம மக்களையும் கலந்து பயன்பெறுமாறும் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (ந.ரி4,ரி3)

## பொலிஸ் நடமாடும் சேவை




மட்டக்களப்பு,பெப்.20

மட்டக்களப்பு கரடியனாறு பொலிஸாரால் பொலிஸ் நடமாடும் சேவை நேற்று நடத்தப்பட்டது.

இதில் சுமார் 100 பொது மக்கள் சேவைகளைப் பெற்றுக் கொண்டதாக பொலிஸ் பொறுப்பதிகாரி டி.எம்.ஏ.சமரகோன் தெரிவித்தார்.

மக்களின் நன்மை கருதி, பொலிஸ்மா அதிபரின் பணிப்புரைக்கமைவாகவும், பொலிஸ்-பொதுமக்கள் உறவை வலுப்படுத்தும் விதத்திலும் இத்தகைய பொலிஸ் நடமாடும் சேவைகள் கிரமமாக நடத்தப்படுகின்றன.

இதில் அசாதாரண சூழ்நிலை நிலவிய கடந்த காலத்தில், தமது உடைமைகளை இழந்தவர்கள், தோட்டங்கள் அழிவடைந்தவர்கள் ஆகியோரும் தமது முறைப்பாடுகளைப் பதிவு செய்தனர். கிராம மக்களிடையே காணப்பட்ட சிறு சிறு பிரச்சினைகளும் பொலிஸாரால் தீர்த்து வைக்கப்பட்டன. இதில் அடுத்த இரண்டு மாதங்களில் கரடியனாறு பொலிஸ் பிரிவிலுள்ள புலையவெளி கிராமத்தில் அடுத்த நடமாடும் சேவை நடத்துவதற்கு யோசனையும் முன்வைக்கப் பட்டது. (ந.ரி4)





அகில இலங்கை இந்து மாமன்றத்தின் தலைவரும்,
திருக்கேதீஸ்வரம் திருப்பணிச் சபையினது தலைவரும்,
புகழ்பூத்த சட்டத்தரணியும்,
சமயமும் நீதியும் நிலைக்க உழைத்தவருமான

# மாண்புமிகு கந்தையா நீலகண்டன்

அவர்களின் சிவபதப்பேறு குறித்து

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
குழுமத்தின்

## உளத்தெழுந்த உணர்வலைகள்....



சீர் சைவ நெறி நின்று சிறந்தோங்கி தலைவனுமாய்
பார் தெய்வ ஒளிதந்து பரந்த சட்ட அறிஞனுமாய்
நார் கொண்ட மலர் போல நம் இந்து நிலை காத்து
வேர் நின்ற வித்தகனே விழி நீரில் நனைகிறதே...

உதயத்து செய்தியாய் உம்பிரிவு தனைக்.கேட்டு
உதயனின் குழுமத்தார் உளம் புழுங்கி மனம் சோர்ந்து
இதயத்தில் இருந்தவர்க்கு எங்கள் காணிக்கையதாய்
இதயத்து அஞ்சலியாய் எமது கண்ணீர் விரிகிறதே..

இப்பிறவி தீர்த்தாலும் இனிப்பிறவி எடுத்தாலும்
எப்பொழுதும் எம்மனதில் இறையாய் உறைந்தவன் நீ
ஒப்பிலா உயர்ந்தோனே ஊழி தடம் புரிந்தானை
தப்பாமல் சாருவை நீ தாங்கரிது இந்துலகே

இன்றாகி நாளையாய் இருப்பானை எப்பொழுதும்
நன்றாக நினைப்பவர்கள் நாடார்கள் பிறசமயம்
அன்றாலின் கீழிருந்து அறமுரைத்த பெருமானை
ஒன்றாக மலர்தூவி உன் நினைவு போற்றுவமே.

## ரஜினி – கமல் சந்திப்பால் தமிழகத்துக்கு பயனில்லை

### தமிழக அமைச்சர் ஜெயக்குமார்

சென்னை, பெப். 20

ரஜினி கமல் சந்திப்பால் தமிழகத்திற்கு எந்தப் பயனும் ஏற்படப்போவது இல்லை என்று அமைச்சர் ஜெயகுமார் நேற்றுமுன்தினம் தெரிவித்தார்.

சென்னையில்நேற்றுமுன்தினம் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ரஜினி, கமல்சந்திப்பால்தமிழகத்திற்கு எந்தப் பயனும் ஏற்படப்போவதில்லை. எந்த மாற்றமும் ஏற்படாது. ரூஸ்வெல்ட், வின்சென்ட் சர்ச்சில்சந்திப்பைபோன்றுஇதை ஊடகங்கள் பெரிதுபடுத்துகின்றன. ஸ்டாலின் அனைத்துக் கட்சிக் கூட்டத்தை கூட்டுவது என்பது விட்டலாச்சாரியார் படத்தில் வருவது போன்று மாயவித்தையை காட்டி ஆட்சியை கைப்பற்ற எண்ணும்ஒருமாய உலகத்தில் இருக்கிறார். காவிரி மேலாண்மை வாரியம் அமைக்க வேண்டும் என்பதற்கு அர்த்தம் தெரியவில்லைஎன்றால்சட்டவல்லுனர்களைக்கேட்டுத்தெரிந்துகொள்ளலாம். அதைவிடுத்துஅனைத்துக் கட்சிக் கூட்டம் என்பது தேவையற்ற ஒன்று" என ஜெயக்குமார் மெலும்தெரிவித்தார். (ம)



### 1,300 ஆண்டுகள் பழமையான புத்த விகாரையில் தீ விபத்து

சீனாவின்கட்டுப்பாட்டில்உள்ளதிபெத்தில்மிகவும்பழமையான புத்த விகாரையில் நேற்றுமுன்தினம் தீ விபத்து ஏற்பட்டது. ஜோஹாங் என்ற விகாரையே அவ்வாறு தீக்கிரையானது. இந்தவிகாரைஆயிரத்து300ஆண்டுகள்பழமையானது. கடந்த 2000ஆம் ஆண்டில் புராதன சின்னமாக யுனெஸ்கோ அறிவித்திருந்தது.

திபெத்தில் மிகவும் பாதுகாக்கப்பட்டுவரும் விகாரைகளில் இதுவும் ஒன்று. விபத்துக்கான காரணம் தெரிவிக்கப்படவில்லை. தொடர்ந்துவிசாரணைகள்இடம்பெற்றுவருகின்றன. (ம)



### இஸ்ரேலின் டெல் அவிவ்வில் உள்ள

# போலந்தின் தூதரகத்தில் 'சுவஸ்திகா'

டெல்அவிவ், பெப். 20

இஸ்ரேலில்உள்ளபோலந்துத்தூதரகத்தின்வாயிலில்நாஜிக்களின்'சுவஸ்திகா' சின்னம் வரையப்பட்டுள்ளமை பன்னாட்டு அரங்கில் பெரும் அதிர்வலை களை ஏற்படுத்தியுள்ளது. அது தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்குமாறு இஸ்ரேலுக்கு போலந்து அழுத்தம் கொடுத்துள்ளது.

ஜெர்மனியில் ஹிட்லர் தலைமையிலான நாஜி ஆட்சியில் பல லட்சக் கணக்கான யூதர்கள் கொல்லப்பட்ட 'ஹாலோகாஸ்ட்' எனப்படும் இனப்படுகொலை நிகழ்வுக்கு போலந்தையும் பொறுப்பாக்கிப் பேசுவதற்கு எதிராக போலந்து சமீபத்தில் ஒரு சட்டத்தை இயற்றியது.

இந்தச் சட்டத்துக்கு யூதர்களின் நாடான இஸ்ரேல் கண்டனம் தெரிவித்தது. இதையடுத்து இரண்டு நாடுகளுக்கும் இடையில் உரசல் ஏற்பட்டிருந்தநிலையில், போலந்துதலைமை அமைச்சர் மொராவியட்ஸ்கி, யூத இனப்படுகொலைக்கானகாரணகர்த்தாக்களில் யூதர்களும் இருப்பதைப் போலபொருள்தரும்கருத்தை வெளியிட்டிருந்தார். இதை இஸ்ரேல் தலைமை அமைச்சர் பெஞ்சமின் நெத்தன்யாகு கண்டித்திருந்தார்.

இந்தப் பின்னணியிலேயே டெல் அவிவ்நகரில்உள்ளபோலந்துத்தூதரகத்தில்நாஜிக்களின்ஸ்வஸ்திக்சின்னம் வரையப்பட்டுள்ளது. இது பன்னாட்டு அரங்கில்பெரும் அதிர் வலைகளை ஏற்படுத்தியுள்ளது. (ம)

## ஆலயத்தில்சூடு; 5 பெண்கள் சாவு

### ரஷ்யாவில் துயரம்

மொஸ்கோ, பெப். 20

ரஷ்யாவின்தாகெஸ்தான்பகுதியில்உள்ளஒருஆலயத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் 5 பெண்கள் உயிரிழந்தனர்.

நேற்றுமுன்தினம்நடைபெற்றஞாயிறுதினசிறப்புவழிபாட்டின்போதே இந்த அசம்பாவிதம் இடம்பெற்றது. சம்பவ இடத்தில் நான்கு பெண்கள் உயிரிழந்தனர்.

மருத்துவ மனையில் சேர்க்கப்பட்ட பெண்ணொருவரும் உயிரிழந்ததை அடுத்து சாவு எண்ணிக்கை ஐந்தாக அதிகரித்தது. பொலிஸார் நடத்திய பதில் தாக்குதலில் தாக்குதல் தாரி உயிரிழந்தார். சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (ம)



## பதற்றத்தில் காசா

டெல் அவிவ், பெப். 20

காசா பகுதியில் இஸ்ரேலிய இராணுவம் நடத்திய தாக்குதல்களில் நான்கு பலஸ்தீன இளைஞர்கள் உயிரிழந்ததை அடுத்து, காசா எல்லையில் பதற்றம் மேலும் அதிகரித்தது என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்திவெளியிட்டன.

காசா எல்லையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற குண்டுவெடிப்புச் சம்பவத்தில் இஸ்ரேலியப் பொலிஸார்நால்வர்உயிரிழந்தனர். இதற்குஹமாஸ் அமைப்புப் பொறுப்பேற்றிருந்தது. இதையடுத்தே இந்தத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது என்று இஸ்ரேலின் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. வழக்கமாகவே யூதர்களும், பலஸ்தீனர்களும் முரண்டுபட்டுக் கொண்டிருக்கும் காசா எல்லை இந்த உயிரிழப்புக் களைஅடுத்துமேலும்பரபரப்பாகியுள்ளது. (ம)





உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## வலுப்படுத்துவோம்

காணாமல் ஆக்கப்பட்டவர்களை விடுவிக்கவும் அவர்கள் தொடர்பிலான நிலைப்பாட்டை வெளிப்படுத்தவும் வலியுறுத்தி கிளிநொச்சியில் ஆரம்பிக்கப்பட்ட தொடர்ப்போராட்டம், நேற்றுடன் ஒருவருடத்தை நிறைவுசெய்துள்ளது. இதை முன்னிட்டு இன்று மிகப் பெரும் பேரணியொன்றும் நடத்தப்படவுள்ளது. இந்தப் பேரணியில் கலந்துகொண்டு அரசுக்கும் பன்னாட்டுச்சமூகத்துக்கும் அழுத்தம் கொடுக்க வேண்டும் என்று காணாமல்போனவர்களின் உறவுகள் கோரிக்கைவைத்துள்ளனர். அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பு உள்ளிட்ட சில அமைப்புக்களும் போராட்டத்துக்கு அழைப்பு விடுத்துள்ளன. இந்த அழைப்பை ஏற்று, ஒவ்வொருவரும் பேரணியில் தத்தமது வகிபங்கை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் தார்மீகக் கடமையாகும். அதுவே நியாயமானதும்கூட.

கடந்த 2015ஆம் ஆண்டு நடைபெற்ற அரச தலைவருக்கான தேர்தலில் மைத்திரிபால சிறிசேன வெற்றிபெற்றதன் பின்னணியில் தமிழ் மக்களின் வாக்குகள் துருப்புச்சீட்டுக்களாக அமைந்தன. இதனால் தமிழ் மக்களுக்கு பிரதியுபகாரமாகவும், நன்றிக்கடனாகவும் எதையாவது செய்வேன் என்று அரசதலைவர் தனது முன்னைய உரைகளில் வாக்குறுதிகளை வழங்கியிருந்தார். தமிழ் மக்கள் தமக்கு ஆடம்பரங்கள் எதையும் அள்ளித்தருமாறு கேட்கவில்லை. காணாமல் ஆக்கப்பட்டவர்களின் நிலை தொடர்பில் வெளிப்படுத்தப்பட வேண்டும் என்பது அவர்களின் முக்கிய கோரிக்கைகளில் ஒன்றாக உள்ளது. ஆனால் 'காணாமல் ஆக்கப்பட்டவர்கள் என்று எவரும் இல்லை' என்று அரசதலைவரும், 'காணாமல் ஆக்கப்பட்டவர்கள் எவரும் உயிருடன் இல்லை' என்று தலைமை அமைச்சரும் கடந்த காலங்களில் தெரிவித்திருந்தனர். இதயத்தைக்கிழித்த ஈட்டியாக ஈழத் தமிழர்களுக்கு இந்தப் பதில்கள் வந்தமைந்தன. அத்துடன், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் விவகாரத்தைக் கையாள்வதற்காக அமைக்கத் திட்டமிட்ட பணிமனையும் இன்னும் முழுமை பெறவில்லை. குறைந்தபட்சம் ஒரு பணிமனையைக்கூட கூட்டு அரசால் அமைக்க இயலவில்லை. அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன – தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான கூட்டு அரசின் ஆயுள் முடிவடைந்தாலும், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் விவகாரத்தை கையாள்வதற்கான பணிமனை முழுமை பெறாது என்ற நிலைப்பாடே தற்போது உள்ளது. இவ்வாறானவொரு பின்னணியில் இன்றைய போராட்டம் மிகமிக முக்கியத்தும் மிக்கதாக அமைகிறது.

இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் தொடர்பிலான விசாரணைகளை நடத்தவும், அது தொடர்பில் நடவடிக்கைகள் எடுக்கவும் இலங்கை அரசுக்கு இரண்டு வருடகால அவகாசத்தைக் கொடுத்திருந்தது ஐக்கிய நாடுகள் சபை. காணாமல் ஆக்கப்பட்டவர்கள் விவகாரமும் இதில் முக்கியத்துவம் பெறுகிறது. கடந்த வருடம் மார்ச் மாதம் நடைபெற்ற 36ஆவது கூட்டத் தொடரில் வைத்தே இந்த அவகாசம் இலங்கைக்கு வழங்கப்பட்டது. தனது அவகாசத்தில் பாதி ஆயுட்காலத்தில் இலங்கை எதையுமே சாதிக்கவில்லை என்பதை பன்னாட்டுச்சமூகத்துக்கு தெரிவிக்கும் வாய்ப்பையும் இந்தக்கவனவீர்ப்புப்போராட்டம் எமக்குத் தந்துள்ளது. ஐக்கிய நாடுகள் சபையின் 37ஆவது கூட்டத்தொடர் ஜெனீவாவில் எதிர்வரும் 26ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. இந்தக் கூட்டத் தொடரில், போர்க் குற்றம் தொடர்பான விசாரணைகளின் நிலை தொடர்பில் இலங்கையிடம் வினவப்பட வாய்ப்புக்கள் அதிகம் உள்ளன. அவ்வாறு வினவப்பட்டால், இன்று நடத்தப்படும் பேரணியும் பேசுபொருளாக அமையும். அது இலங்கை அரசுக்கு மேலும் அழுத்தத்தை வழங்கும்.

ஆக, இத்தகைய பின்னணியில் கிளிநொச்சியில் இன்று இடம்பெறவுள்ள பேரணி, கவனவீர்ப்பு முக்கியத்துவம் மிக்கதாக அமைகிறது. அதன் முக்கியத்துவத்தை மேலும் வலுப்படுத்த, பலப்படுத்த இனத்தாலும் மொழியாலும் நாம் ஒன்றுபடுவோம். எமது எதிர்ப்பைப் பதிவுசெய்வோம்.

# நாட்டின் அரசியல் குழப்பத்துக்கு தீர்வு கிடைப்பது சாத்தியமா?

சேரலாதன்

நாட்டில் குழப்பமானதொரு அரசியல் சூழ்நிலை தோன்றியுள்ளது. உள்ளூராட்சித் தேர்தல் முடிவுகள் வெளியான பின்னரே இவ்வாறானதொரு நிலை தோன்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது. நடைபெற்றுமுடிந்த உள்ளூராட்சித்தேர்தலில் எவருமே எதிர் பார்க்காத முடிவுகள் கிடைக்கப்பெற்றதால் இத்தகைய குழப்ப நிலை உருவாகிவிட்டது. அநேகமான உள்ளூராட்சிச் சபைகளை மகிந்த தலைமையிலான சிறிலங்கா பொதுஜன முன்னணி கைப்பற்றியுள்ளது. அரச தலைவர் தலைமையிலான சிறிலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் தலைமை அமைச்சர் தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி ஆகியவை இணைந்து பெற்ற வாக்குகளை விட, மகிந்தவின் கட்சி குறைவான வாக்குகளைப் பெற்றிருந்த போதிலும், அதிக ஆசனங்களை அதனால் பெறமுடிந்துள்ளது. இதனால் மீள் எழுச்சி பெற்ற மகிந்த, 'அரசைக் கலைத்து விடுங்கள்; எதிர்க்கட்சித் தலைவர் பதவியை எம்மிடம் ஒப்படைத்து விடுங்கள்; நாடாளுமன்றத் தேர்தல் உடனடியாக நடத்தப்பட வேண்டும்' என்றெல்லாம் கோரிக்கை விடும் அளவுக்கு நிலைமை மாறிவிட்டது.

### தேர்தல் பரப்புரைகளின்போது இனவாதம் கக்கிய மகிந்த தரப்பினர்

உள்ளூராட்சித்தேர்தலுக்கான பரப்புரைகளின்போது, மகிந்த தரப்பினர் இனவாதக் கருத்துக்களை மக்கள் மத்தியில் தாராளமாகவே பரப்பிவிட்டனர். இந்த அரசு தமிழர்களுக்கெனத் தனிநாட்டை பிரித்துக் கொடுக்கப் போகின்றது, புலிகள் மீண்டும் தலையெடுத்து விட்டதால் சிங்கள மக்களுக்குப் பேராபத்துக் காத்திருக்கின்றது, சிங்கள மக்கள் இனிமேல் வடக்குக் கிழக்கை எட்டிக் கூடப்பார்க்க முடியாது என்றெல்லாம் இனவாதக்கருத்துக்கள் விதைக்கப்பட்டன. மக்களும் அவற்றை நம்பிவிட்டனர். இதன் வெளிப்பாடாகவே தேர்தல் முடிவுகள் மகிந்த தரப்பினருக்குச்சாதகமாக அமைந்துவிட்டன. மகிந்தவின் இந்த முன்னுதாரண அணுகுமுறை எதிர்காலத் தேர்தல்களிலும் பயன்படுத்தப்படப் போகின்றது. இனவாதம் பேசிப்பேசியே அரசியலில் வெற்றிகண்டவர்கள் தென்னிலங்கை அரசியல்வாதிகள். எதுக்கெடுத்தாலும் இனவாத சாயம் பூசுவதே அவர்களின் தொழிலாகிவிட்டது. இதனால் சிறுபான்மை இனங்களுக்குப் பாதிப்பு ஏற்படுமென்பதை இவர்கள் சிறிது கூட நினைத்துப் பார்க்கவில்லை.

### ரணிலைக் கட்சித் தலைமைப் பதவியை விட்டு விலகுமாறு அழுத்தங்கள்

இதே வேளை உள்ளூராட்சித் தேர்தல் முடிவுகள் வெளியானதைத் தொடர்ந்து ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த தலைமை அமைச்சருக்கு எதிராகப் போர்க்கொடி தூக்கப்பட்டது. அவரைக் கட்சியின் தலைமைப் பொறுப்பிலிருந்து விலகிவிடுமாறு அழுத்தங்களும் பிரயோகிக்கப்பட்டன. இதைவிட வெளியிலிருந்தும் அவர் நெருக்கடிகளை எதிர் கொண்டார். இதன் விளைவாக அவர் தமது தலைமை அமைச்சர் பதவியிலிருந்து விலகி விடுவாரென்ற ஊகங்களும் வெளியிடப்பட்டுவந்தன. தனித்து ஆட்சியமைப்பதற்கான முயற்சிகளில் தற்போது ஐ.தே. கட்சியினர் இறங்கியுள்ளனர். இதற்கு கூட்டமைப்பின் உதவியும் நாடப்பட்டுள்ளது.

தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் மத்தியில் ஆட்சிபுரிபவர்களால் அவர்களுக்கு எந்த வித நன்மையும் கிட்டியதில்லை. கூட்டு அரசுக்கு, தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு பல்வேறு வகையிலும் ஆதரவு வழங்கியிருந்த போதிலும், அதற்கு பிரதியுபகாரமாக அரசு தமிழ் மக்களுக்கு எதையுமே செய்யவில்லை. மாறாக தமிழர்கள் பாதிப்படையும் வகையிலான நடவடிக்கைகளையே மேற் கொண்டு வருகின்றது. வடக்குக் கிழக்கு பகுதிகளில் அரசின் முழுஆதரவுடன் சிங்களக்குடியேற்றங்கள் ஏற்படுத்தப்படுவதை இதற்கோர் உதாரணமாகக் கொள்ள முடியும். இதைவிடப் பல தமிழர் விரோதமான நடவடிக்கைகளும் இடம்பெற்று வருகின்றன. இந்தநிலையில் சிங்கள அரசுக்கு ஆதரவளிப்பது தொடர்பாகத் தமிழர்கள் சிந்திப்பது மடமைத்தனமானது. உள்ளூராட்சித் தேர்தலின்போது இடம்பெற்ற பரப்புரைகளில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு எதிரான



அணியினர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, அரசுடன் ஒட்டிக்கொண்டிருப்பதாகக் குறிப்பிட்டுப் பேசினார்கள். தமிழர்களுக்கு உதவாத அரசுடன் ஒட்டிக்கொண்டிருக்கும் கூட்டமைப்பினர் தமிழர்களுக்குத் துரோகம் செய்வதாக அவர்கள் வசைபாடினார்கள். பல தமிழ்மக்கள் இதை நம்பவும் செய்தனர்.

### அரச தலைவரும் கூட அரசியல் சிக்கல்களில் மாட்டுப்பட்டுள்ளார்

தெற்கின் அரசியல் நிலவரங்களைப்பார்க்கும் போது, அரசதலைவர் மீளமுடியாத இக்கட்டுக்குள் மாட்டிக் கொண்டிருப்பது தெளிவாகத் தெரிகின்றது. அவரது கட்சியைச் சேர்ந்தவர்கள் மகிந்த பக்கம் தாவிச் செல்கின்ற நிலையொன்றும் காணப்படுகிறது. இதனால் நாடாளுமன்றத்தின் கட்டுப்பாடு அவரது பிடியி லிருந்து மெல்லமெல்ல நழுவிச்செல்கின்றது.

அவரது பதவிக்கு 2020 வரை ஆபத்து இல்லையென்றாலும், அவரால் தமது அதிகாரங்களை முழுமையாகப் பயன்படுத்த முடியாது போகும். அவருக்கு எதிரான அமைச்சரவை ஒன்று உருவாகுமானால், அரச தலைவரால் ஒன்றுமே செய்யமுடியாத நிலை ஏற்பட்டுவிடும். இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டுதான் மைத்திரிபால சிறிசேன சில காய்நகர்த்தல்களை மேற்கொண்டுள்ளார். அவர் மகிந்த ராஜபக்சவுடன் இரகசியப் பேச்சுக்களை நடத்துவதாக ஒருதகவல் தெரிவிக்கப்படுகின்ற அதேவேளை, கூட்டாட்சி அரசிலிருந்து அவரது தரப்பு விலகிவிடுவதென முடிவை எடுத்துள்ளதாகவும் தெரிவிக்கின்றது. இதனால் அரசு கவிழ்ந்து விடுமென்பதில் ஐயம் எதுவுமில்லை.

இவற்றையெல்லாம் தொகுத்துப் பார்க்கும் போது, நாட்டின் அரசியல் களம் குழம்பிய குட்டையாகக்காட்சியளிப்பது தெரிகின்றது. இதில் தெளிவு ஏற்படுவதற்கான சமிக்ஞை வெகு தூரத்தில் கூடத் தென்படவில்லை.



# உள்ளூராட்சி தேர்தலின் பின்னரான அரசியல் குழப்ப நிலை

மொழிமூலம்:-என்.சத்தியமூர்த்தி (சிலோன் ருடே)
தமிழில்:- ஆனந்த்

உள்ளூராட்சித் தேர்தல் முடிவடைந்து விட்ட நிலையில், தேர்தலில் போட்டியிட்ட சகல அரசியல்கட்சிகளும்அவற்றின்தலைவர்களும், தத்தமதுதரப்புக்களதுதேர்தல்தோல்விக்கு எவரை பலிக்கடாவாக்கலாம் என்று தேடியலைந்து கொண்டிருக்கிறார்கள். இவர்களில்மகிந்தராஜபக்ச இந்த அரசுகலைக்கப்பட்டு பொதுத் தேர்தலொன்று புதிதாக நடத்தப்பட வேண்டுமென்ற நிலைப்பாட்டுடன் காய்நகர்த்துகிறார்.

**மகிந்த தமது இறுக்கமான போக்கை மாற்றிக் கொள்ள வேண்டும்**

ஆனால் இதற்கு முன்னதாகத் தாம் எதிர்க்கட்சித் தலைவராக வேண்டுமென்று நினைக்கும் மகிந்த ராஜபக்ச, அதற்கான திறன் தன்னிடம் உள்ளதென்பதை நிரூபிக்க வேண்டியுள்ளது. தொடர்ச்சியாக, இரண்டு தடவைகள் அரச தலைவராக அவர் அரசியலில் செயற்பட்டிருப்பினும், எதிர்க்கட்சித் தலைவரென வரும்போது, முழு அதிகாரம் கொண்ட அரச தலைவர் என்ற நிலையில் தான் செயற்பட இயலாது என்பதை அவர்உணர்ந்துகொள்ளவேண்டும்.

அந்த வகையில் மகிந்த, அதற்கேற்றாப்போல் மென்மையான போக்கைக் கடைப்பிடிக்கும்விதத்தில்தம்மை மாற்றிக்கொள்ளல்அவசியமானதாகும். இதனைஅவரை ஆதரிக்கும் தரப்பினர் தெரிந்து கொள்வதும் மிக அவசியமாகும். அதுமட்டுமல்லாது, மகிந்தராஜபக்ச நல்லதொரு அரசியல் ஆலோசகர்கள் குழுவொன்றையும் தெரிவுசெய்துகொள்ளவேண்டியது மிக முக்கியமாகும். இவர் தனது கொள்கை நிலைப்பாட்டின் மாற்றங்களை ஊரறிய, உலகறியச்செய்யவேண்டும். பசில் ராஜபக்ச ஒரு சிறந்த தொகுதி அமைப்பாளர்தான். ஜீ.எல்.பீரிஸ்கட்சியின்முக்கிய தலைவராக மகிந்தவால் கணிக்கப்படக் கூடாது. அதே வேளை சிறுபான்மை முஸ்லீம்களை கொடுமைப்படுத்தும்சிங்களபௌத்தபேரினவாதிகளையும் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பது மகிந்தவுக்குமிக அவசியமான ஒன்றாகும். அத்துடன் ஒட்டு மொத்த தமிழர்களையுமே விடுதலைப் புலிகள் அமைப்பின் முன்னாள் உறுப்பினர்களாக நோக்கும் பார்வையை மாற்றிக் கொள்ள வேண்டும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மாற்று அரசொன்றை நிறுவமகிந்தவுக்கு ஆதரவளிக்குமானால், கூட்டமைப்பினர் கூட சற்று இறங்கிவரக் கூடும். ஆனால் அவர்கள் அரசியலில் நீடிக்க வேண்டிய காரணத்தால் இதனை வெளிப்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. ஆயினும்கூட்டமைப்பினருக்குஏதோ ஒரு வழியில் மகிந்தவுக்கு ஆதரவாகச் செயற்படும் நிலைப்பாடும் உள்ளது. சில கூட்டமைப்பின் உறுப்பினர்கள் உப்புச்சப்பற்ற விஷயங்களில் பெரிய அண்டைய நாடான இந்தியாவுடன் முரண்படக்கூடாது. மீண்டும்தமிழீழவிடுதலைப்புலிகள்போல இராணுவத் தீர்வை நோக்கி நகரக்கூடாது. அத்துடன் விடயம் முடிவுக்கு வந்துவிடப் போவதில்லை.

**எதிர்கால அரசியல் குறித்து மகிந்தவுக்கு தெளிவான நிலைப்பாடு அவசியம்**

மகிந்த இப்போது அல்லது இன்னும் இரண்டு வருடங்களின் பின்னராவது தலைமை அமைச்சராக வரும் பட்சத்தில், அவரும்அவரதுகட்சியும்கட்சியின்அடுத்த வாரிசுகுறித்துஇப்பொழுதேதிட்டமிடவேண்டும். மகிந்தவின் அடுத்த வாரிசு எவராக இருந்தாலும், சில வேளை அது நாமல் ராஜபக்சவாகவும் இருக்கலாம், அவருடன் அவருடைய வயதை ஒத்த ஒரு புதுக் குழு, புதிய புத்தி ஜீவிகள், இளம் அரசியல் வாதிகள் என ஒரு இளம் தரப்பினர் புதிய பாதையில் பயணிக்க வேண்டும். மகிந்த ராஜபக்சவின் 10 வருட ஆட்சியில் நிறையவே மாற்றங்கள்ஏற்பட்டிருக்கும். ஆனால்அது மைத்திரிபாலவின் பாணியைவிட வேறுபட்டது. மகிந்த பதவியில் உயரத்துக்குப் போய்விட்டால் ஏனைய எவரையும் மேலே வருவதற்கு அனுமதிக்கமாட்டார். காரணம் அவ்விதம் எவரையாவது வளர விட்டால் அவர்கள் அரசியலில் தன்னை விட பிரபல்யம் பெற்று விடுவார்கள் என்ற பயம்தான் அதற்குக்காரணம். இந்தநிலைமையையும் மாற்ற வேண்டும்.

**ரணிலைப் பதவியிலிருந்து அகற்ற முயலும் ஐ.தே.க நாடாளுமன்ற உறுப்பினர்கள்**

இந்த நேரத்தில் ஐக்கிய தேசியக் கட்சி பற்றியும் குறிப்பிட்டாக வேண்டும். தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவின் பதவியை பறிப்பதற்காக குழிவெட்டிக்கொண்டிருக்கும் அவரது கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர், ரணில் விக்கிரம சிங்கவை வீழ்த்துவதற்காக அவர் 2015ஆம் ஆண்டில், அரசதலைவரால், தலைமை அமைச்சராக நியமிக்கப்பட்ட நாளிலிருந்தே, காத்திருக்கின்றனர். சில வேளை ரணில் விக்கிரம சிங்க அரச தலைவராக தெரிவாகியிருந்தாலும் கூட (இப்போது அப்படி நடப்பதற்கு வாய்ப்பில்லை) அவர்ஐக்கியதேசியக் கட்சியை விட்டு வெளியேறியிருந்திருக்கமாட்டார். எதிர்க் கட்சித் தலைவர்சம்பந்தனைப்பற்றிகூறுவதாயின், அவர் தனக்கு கிடைத்த ஒரு பொன்னான சந்தர்ப்பத்தை, தான் ஒரு உண்மையான எதிர்க்கட்சித்தலைவர்என்றுநிரூபித்திருக்கக்கூடிய வாய்ப்பினைக் கைநழுவ விட்டு விட்டார். பிரச்சனைகள் என்று வரும்போது அதைப் பற்றி கோடிட்டுக் காட்டியதுடன் அவர் நிறுத்திக் கொண்டார். இந்த நாட்டின் தமிழ் பகுதிகளில் மட்டுமல்ல, இலங்கையில் எல்லா இடத்திலும் தமிழர்கள் வாழ்ந்தார்கள். அவர்களுக்கு எதிர்க் கட்சித் தலைவராக இவர் எதுவுமே செய்யவில்லை.



எதிர்கட்சித் தலைவருக்கு உள்ளூரில் பல நெருக்கடிகள் இருந்தன. வடமாகாண முதலமைச்சருக்கும், சம்பந்தனுக்குமிடையிலான நிழல் யுத்தம் வடமாகாணசபை உறுப்பினர்களது செயற்பாடுகள் என்றபல பிரச்சினைகளுக்கு மத்தியில் அவரால் மக்களுக்கு எதுவும் செய்ய முடியாத நிலை ஏற்பட்டது. வடமாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரனுக்கு கடவுளின் அனுக்கிரகம் இருந்தும், அவரும் அவரைச் சார்ந்தவர்களும்சரியானதொருதிட்டத்துடன்செயற்படவில்லை. இந்த முறை நடந்த உள்ளூராட்சித் தேர்தலில் கூட்டமைப்புக்கு எதிரான கட்சிகளேமுன்னிலைவகித்தமைதெளிவாகியிருந்தது. இதற்குக் காரணம் தமிழ்த் தலைவர்களின் பலவீனம்தான். இவை எல்லாவற்றிற்கும் கிரீடம் வைத்தது போல சம்பந்தன் இப்போது மகிந்தவுடன் சமாதானப்பேச்சுக்களை முன்னெடுக்கிறார். மகிந்தவோ தன்னுடைய மகன் நாமலூடாக தமிழர்களின் நாடி பிடித்து பார்க்கிறார்.

போருக்குமுன்னரானதோல்வியில்முடிந்த பேச்சுக்கள் எங்கே நிறுத்தினார்கள் என்பதும் எதற்காக நிறுத்தினார்கள் என்பதும் அவ்விருவருக்கும் நன்றாகத் தெரியும். விட்ட இடத்திலிருந்து அதைத்தொடரவேண்டிய தேவை அவர்களுக்குண்டு. அத்தோடு அவர்கள்தனித்தே அதனை மேற்கொள்ள இயலும்.

## ஆசிரியருக்கான கடிதம்

### இராணுவத்தினரால் விடுவிக்கப்பட்ட மயிலிட்டி காசநோயாளர் வைத்தியசாலை மக்களுக்கு மீண்டும் பயன்தருமா?

1796ஆம் ஆண்டு இலங்கையின் கரையோரப் பகுதி களைக் கைப்பற்றிய ஆங்கிலேயரால் 1932ஆம்ஆண்டுகாசநோயாளர்களுக்கென முதன் முதலில்கட்டப்பட்ட வைத்தியசாலையே மயிலிட்டி காசநோயாளர் வைத்தியசாலையாகும். அலை கடலோரத்திலே, வடமயிலையிலே நோய்தீர்க்கும்அருமருந்தாகவிளங்கியது இந்தவைத்தியசாலை. இந்தவைத்தியசாலையின் முகப்பில் ஏழாவது எட்வேட் அரசர் சுகாதார ஸ்தாபனமென்று பெயர் பொறிக்கப்பட்டிருந்தது. இந்த வைத்தியசாலையின் எல்லைகளாக வடக்கே பணிக்கர் குடும்பமும், தெற்கே விநாயகர் ஆலயமும், மேற்கே ஒபயசேகராவின் கல்வீடும் தென்னந்தோட்டமும், கிழக்கே சின்னட்டி மாணிக்கம் கல்வீடும் தென்னந்தோட்டமும் இருந்ததாக கர்ணபரம்பரைக் கதைகள் கூறுகின்றன.

இந்த வைத்தியசாலை மீண்டும் அதேஇடத்தில் இயங்க வேண்டுமென முதன் முதலில் குரல் கொடுத்தவர் டாக்டர் யமுனானந்தாவே.

இந்த வைத்தியசாலையில் நோயாளர்கள் வழிபடுவதற்கென முருகன் ஆலயமும் பௌத்த ஆலயமும் இருந்துள்ளன. இந்தமுருகன் ஆலயத்தில் வருந்தோறும் விழாக்கள் நடைபெற்று வந்ததுண்டு. அதுமட்டுமல்லாது இந்த வைத்தியசாலையின் அருகாகவுள்ள கடற்கரையோரத்திலே ஒரு நாடகமேடையும் உண்டு. இங்கே பல நாடகங்கள் மேடையேறியிருக்கின்றன. இதற்கான ஒழுங்குகளைச்செய்தவர் இந்த வைத்தியசாலையின் அப்போதைய வைத்தியராக இருந்த பருத்தித்துறையைச் சேர்ந்த பொன்னம்பலம்.

அவர்இந்தவைத்தியசாலைக்குஅரும்பெரும்தொண்டாற்றியுள்ளாரென்பதுகுறிப்பிடத்தக்கது. இத்தகைய வரலாற்றுப் பெருமைமிக்க இந்தக் காசநோயாளர் வைத்தியசாலை மீண்டும் மக்களுக்குப் பயன் தருமென்பதில் சிறிதளவேனும் ஐயமில்லை.

இராணுவத்தினரது அதியுயர் பாதுகாப்பு வலயத்துக்குள் அகப்பட்டதால் செயலிழந்துபோன இந்த வைத்தியசாலை மற்றும் அதனை அண்டிய பிரதேசம் தற்போது இராணுவத்தினரால் விடுவிக்கப்பட்டுள்ளமையாலும், காசநோயாளர் தங்கிச் சிகிச்சை பெறத்தக்க பொருத்தமான சுற்றுச்சூழல் கொண்டதாக இந்தப்பிரதேசம் அமைந்திருப்பதாலும் உரிய நிர்வாகத்தரப்பினர்கள் குறித்த வைத்தியசாலையைப் புனரமைத்து மீண்டும் இயங்க வைக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியது இன்றைய காலத்தின் தேவையாகும். உரிய தரப்பினர் இது குறித்துக் கவனம் செலுத்துவார்கள் என நம்புவோம்.

மா.ஜெயராசா, வட.மயிலை

# கனவுகளும், பலன்களும்

நாம் காணும் ஒவ்வொரு கனவுகளுக்கும் பலன் உண்டு என்று எமது முன்னோர் சொல்லக் கேட்டிருப்போம். கனவுகள் தொடர்பான நம்பிக்கைகள் பற்றியே இந்தப் பதிவு குறிப்பிடுகின்றது.

**நற்பலன் தரும் கனவுகள்**

- ஒன்றுக்கு மேற்பட்ட நட்சத்திரங்களைக் கனவில் கண்டால் பதவி உயர்வு உண்டு.
- வானவில்லை கனவில் கண்டால் பணம், செல்வாக்கு அதி கரிக்கும். பதவி உயர்வு கிடைக்கும்.
- கனவில் நிலவைக் கண்டால் தம்பதிகளிடையே அன்பு பெருகும்.
- விவசாயிகள் உழுவதைப்போல் கனவு கண்டால், சேமிப்பு மேலும் பெருகும்.
- திருமணமாகாதோர், பாம்பு கடித்து குருதி வருவது போல் கனவு கண்டால், விரைவில் திருமணம் நிகழும். திருமணமானோருக்கு செல்வம் வந்து சேரும்.
- இறந்தவர்களின் சடலத்தைக் கனவில் கண்டால் சுபநிகழ்ச்சிகள் நடந்தேறும்.
- சிறு குழந்தைகளை கனவில் கண்டால் நோயிலிருந்து விடுதலை கிடைக்கும்.
- நண்பன் இறந்ததாக கனவு கண்டால் நண்பனின் ஆயுள் கூடும்.
- தெய்வங்களை கனவில் கண்டால் புதையல் கிடைக்கும்.
- இறந்தவருடன் பேசுவதைப் போன்று கனவு கண்டால் அதிகாரம், பதவி, இலாபம் கூடி வரும்.



- திருமண கோலத்தை கனவில் கண்டால், சமூகத்தில் நன்மதிப்பு உயரும்.
- தற்கொலை செய்து கொள்வதை போல் கனவு கண்டால் நெருங்கி வந்த ஆபத்துகள் நீங்கி, நன்மை பிறக்கும்.
- உயரத்தில் இருந்து விழுவது போல் கனவு கண்டால் பணம், பாராட்டு குவியும்.
- கர்ப்பிணியை கனவில் கண்டால் பொருள் வந்து சேரும், நலம் அதிகரிக்கும்.
- மாமிசம் உண்பது போல் கனவு கண்டால் பெரிய அதிர்ஷ்டம் அடிக்கும்.
- வெல்லத்தைச் சாப்பிடுவதாக கனவு கண்டால் வறுமை நீங்கும்.
- குழந்தையைக் கனவில் காண்பது நல்லது. தொழில் விருத்தி ஏற்படும். பொருள் வரவு அதிகமாகும்.
- சூரியனைக் கண்டால் வியாதிகள் நீங்கும். விரோதிகளை வெல்லும் ஆற்றல் கிட்டும்.
- கோயிலைக் கண்டால் நூதனமான தொழில் விருத்தியா கும். செல்வம் குவியப்போவதைக் குறிக்கும்.

**தீய பலன் தரும் கனவுகள்**

- பூனையைக் கனவில் கண்டால் வியாபாரத்தில் திடீர் என நஷ்டம் ஏற்படும்.
- இடியுடன் மழை பெய்வதைப் போல் கனவில் கண்டால், உறவினர்கள் விரோதியாவார்கள்.
- பசு எம்மை விரட்டுவதை போல கனவில் கண்டால் உடல் நலம் கெட்டு வியாதி சூழும்.
- புயல் காற்று, சூறாவளி ஆகியவற்றை கனவில் கண்டால் நோய் உண்டாகும்.
- சமையல் செய்வது போல் கனவு கண்டால் அவமானம் வந்து சேரும்.
- நீர்க்குமிழியைக் கண்டால் சிறு சிறு நஷ்டங்கள் ஏற்படும். பிறர் எம் மீது வீண்பழி சுமத்துவர்.

(தொடரும்)

## சிலுவைகள் மகிமைகள்




ஒரு சிறுமிக்கு மரத்தினாலான ஒரு சிலுவை சுமக்கக் கொடுக்கப்பட்டது. அந்தச் சிலுவை அவளுக்குப் பிடிக்கவில்லை. இன்னும் அழகான சிலுவையைப் பெற்றிருக்கலாமே என்று நினைத்தாள். இயேசு அவளுக்குத் தோன்றி விண்ணகத்திற்கு அழைத்துச் சென்று ஓர் அறையில் உள்ள பலவகை வர்ணங்களுடைய சிலுவைகளைக் காட்டி விரும்பியதை எடுத்துக் கொள் என்றார். ஜொலிக்கும் கற்களினால் உருவாக்கப்பட்ட சிலுவையை எடுக்க முயன்றாள் ஆனால் அதை அசைக்கக் கூட முடியவில்லை.

இவ்வாறு பலவித அழகுடைய சிலுவைகளை எடுக்க முயன்று தோற்றுப் போனாள். இறுதியாக மரத்தினாலான சிலுவை ஒன்றை எடுத்துச் சுமந்தாள். அது அவளுக்கு இலகுவாக இருந்தது.

இயேசு அவளை நோக்கி "இந்தச் சிலுவை தான் முதலில் உனக்குக் கொடுக்கப்பட்டது. ஏனெனில் உன்னால் எவ்வளவு சுமக்க முடியும் என அறிந்துதான் அதைக் கொடுத்தேன்" என்றார். இக்கதை எமக்குச் செல்வதென்ன. எம்மால் எவ்வளவு துன்பங்களைச் சுமக்க முடியுமோ அவ்வளவு தான் கடவுளால் எமக்குத் தரப்படுகின்றது. கடவுளுக்குக் கண் இல்லையா? என்று முணுமுணுப்பதை விடுத்து அன்றாட சிலுவைகளை பொறுமையுடன் ஏற்று சிலுவையின் பின்னால் உள்ள மகிமையை அடைந்திடுவோம்.

எஸ்.யேசுதாஸ்
கொழும்புத்துறை

## வரலாற்றில் இன்றைய தினம் 20.02.2018



1547 - இங்கிலாந்து அரசராக ஆறாம் எட்வேட் முடிசூடினார்.
1872 - நியூயோர்க் நகரில் மெற்ரோ பொலிற்றன் ஓவிய காட்சிக்கூடம் தொடங்கப்பட்டது.
1935 - அந்தாட்டிக்காவில் கால் பதித்த முதல் பெண்மணியானார் கரோலின்.
1944 - ஜேர்மனிய வானூர்தி உற்பத்தி நிறுவனங்கள் மீது அமெரிக்கா குண்டுவீச்சு.



**1979**
இந்தோனேசியாவில் ஏற்பட்ட நிலநடுக்கத்தைத் தொடர்ந்து 179 பேர் உயிரிழந்தனர்.

## நாளை

**21.02.2018**
புதன்கிழமை

**மாசி 09.**

திதி: ஷஷ்டி பி.இ. 01.56
நட்சத்திரம்: அச்சுவினி பி.ப. 12.22 வரை
சுபநேரம்: 05.01–06.31 வரை
ராகுகாலம்: 12.31–02.01 வரை

## பத்தி எழுத்து

### தமிழ்த் தலைவர்கள் இதய சுத்தியுடன் ஒன்றிணைந்து பாடுபடவேண்டும்

தெற்கில் என்னதான் அரசியல் மாற்றம் ஏற்பட்டாலும் அதனால் தமிழர்களுக்கு எந்தவிதமான நன்மையும் கிடைக்கப் போவதில்லை. சிலவேளை தீமைகள் ஏற்படுவதைத்தான் எதிர்பார்க்க முடியும். மகிந்தவுக்குப் பதிலாக மைத்திரி பால சிறிசேன பதவிக்கு வந்த போது தெற்கில் உள்ளவர்களை விட வடக்கு- கிழக்கில் வாழ்கின்ற சிறுபான்மையின மக்களே அதிக மகிழ்ச்சியடைந்தனர்.

ஏனென்றால் அந்த அளவுக்கு அவர்கள் முன்னைய ஆட்சியில் அதிக அவலங்களை எதிர்கொண்டிருந்தனர். இதனால் ஆட்சி மாற்றமொன்றை வேண்டி நின்றனர். அவர்கள் எதிர்பார்த்தவாறு ஆட்சி மாற்றம் நிகழ்ந்தது. ஆனால் அந்த மக்களின் வாழ்வில் மாற்றம் எதுவும் நிகழ்ந்து விடவில்லை. அவர்களின் அவலங்கள் தொடரவே செய்கின்றன.

கூட்டமைப்பின் தலைவரான சம்பந்தன் எதிர்க்கட்சித் தலைவர் பதவியை இழந்தால் சபா நாயகர் பதவியில் அவர் அமர்த்தப்படுவாரரெனத் தகவல் வெளியாகியுள்ளது. இதைப் பார்க்கும்போது அழுவதா? அல்லது சிரிப்பதா? என்பது தெரியவில்லை. எதிர்க்கட்சித் தலைவர் பதவியையும் சபாநாயகர் பதவியையும் தமிழ் மக்கள் ஒருபோதுமே வேண்டி நின்றதில்லை.

இந்தப் பதவிகளால் தமக்கு எந்தவித நன்மையும் கிடைக்கப்போவதில்லை என்பதும் அவர்களுக்கு நன்கு தெரியும். இந்தப் பதில்கள் என்ற எலும்புத்துண்டுகளை வீசித் தமிழர்களின் அவலங்களை மறைத்து விடுவதற்குத் தென்பகுதி அரசியல்வாதிகள் முனைவதும் தமிழ் மக்களுக்கு நன்கு தெரியும். கடந்த காலங்களிலும் தமிழர்கள் பலமுறை ஏமாற்றப்பட்டிருக்கின்றார்கள் என்பது நினைவில் கொள்ளத்தக்கது. தமிழர்களின் விடயத்தில் தென்பகுதி அரசியல்வாதிகள் ஒரேகுட்டையில் ஊறிய மட்டைகள் போன்றே நடந்துகொள்கிறார்கள். அந்த மக்கள் தொடர்ந்து அலட்சியப்படுத்தப்பட்ட நிலையில் தமது காலத்தைக் கழித்துக் கொண்டிருக்கிறார்கள். தமிழ் அரசியல் தலைவர்கள் தீர்க்கமான முடிவுகளை எடுக்க வேண்டிய காலம் கனிந்துவிட்டது. பதவிக்கான சண்டையை அவர்கள் நிறுத்தவிட்டுத் தமது இனத்தின் விடிவுக்காக இதய சுத்தியுடன் அவர்கள் உழைக்க வேண்டும். அப்போது தான் தமிழர்களின் வாழ்வில் ஒளிக்கீற்றைக் காண முடியும்.

## மரண அறிவித்தல்

### Dr. நமசிவாயம் சத்தியசீலன்

(ஆயுள்வேத வைத்தியர்)



பிறப்பு 02.12.1938 இறப்பு 19.02.2018

யாழ். கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் நாவற்குழியை வசிப்பிடமாகவும் கொண்ட நமசிவாயம் சத்தியசீலன் நேற்று (19.02.2018) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நமசிவாயம் தங்கம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான கனகலிங்கம் மரகதம் தம்பதிகளின் அன்பு மருமகனும் நேசமலரின் அன்புக் கணவரும் இராஜஇராஜேஸ்வரி (கனடா), காலஞ்சென்றவர்களான தேவசகாயம், ஞானேஸ்வரி, பரமேஸ்வரி, கனகலிங்கம் மற்றும் மகேஸ்வரன், மகேந்திரன்(கனடா), சகுந்தலாதேவி(கொழும்பு) ஆகியோரின் சகோதரனும் காலஞ்சென்றவர்களான சுந்தரலிங்கம், மகேஸ்வரி, பொன்னுத்துரை , பால்சிங்கம் மற்றும் சரஸ்வதி (கனடா), திலகவதி, சாந்தி(கனடா), காலஞ்சென்ற விவேகானந்தராஜா மற்றும் வாகீஸ்வரன், நாகேஸ்வரன், லீலாவதி (கனடா), யோகேஸ்வரன்(கனடா), புஸ்பவதி, தவபாலன்(ஜேர்மனி) ஆகியோரின் மைத்துனரும் சத்தியமலர்(ஆசிரியர், யா/யாழ் இந்து ஆரம்ப பாடசாலை), சத்தியநேசன் (சுவிஸ்), சத்தியநாதன் (சுவிஸ்), சத்தியமாலா(சுவிஸ்), சத்தியராணி(அபிவிருத்தி உத்தியோகத்தர், யாழ் கல்வி வலயம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் நந்தகுமார்(நீர்ப்பம்பி இயங்குனர், யாழ் பல்கலைக்கழகம்), மாலினி(சுவிஸ்), தர்சினி(சுவிஸ்), தர்மகுலசிங்கம்(சுவிஸ்), கஜீதன்(அபிவிருத்தி உத்தியோகத்தர், கல்வி அமைச்சு, வடமாகாணம்) ஆகியோரின் அன்பு மாமனாரும் சாயிதன், டிலானி, யாழினி, சரணி, சரண், சஞ்ஜை, டினுஷா, அபிஷா, அபிசாயி, அனுசாயி ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (21.02.2018) புதன்கிழமை மு.ப 11.30 மணியளவில் "நந்தவனம்" குளங்கரை வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவிலில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**"நந்தவனம்"**
**குளங்கரைவீதி, கொக்குவில்கிழக்கு,**
**கொக்குவில்.**

**தகவல்: குடும்பத்தினர்.**
**0777742459, 0776062749**

---

அன்னை மடியில் 01 . 10 . 1940



இறைவன் அடியில் 16 . 02 . 2018

### திருமதி மேரிமாகிறேற் பாக்கியநாதன்

யாழ். நாவற்குழியைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸை வசிப்பிடமாகவும் கொண்டதிருமதிமேரிமாகிறேற்பாக்கியநாதன்கடந்த(16.02.2018)வெள்ளிக் கிழமை இறைவனடி சேர்ந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசேந்திரம் - எலிசபெத்தம்மா தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற சந்தியோகு பாக்கியநாதனின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான பீற்றர் சிறிதரன், மேரி பாஸ்கலீனா மற்றும் விக்டர் ராஜேஸ்வரன் (ராஜன் - சுவிஸ்), மேரி சரோஜினியா (கலா - பிரான்ஸ்), மேரி குளோரியா (கவிதா - பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் நிரோஜினி (ஷியானி), காணிக்கைநாதன், சந்திரகுமார்(வினோதன்) ஆகியோரின் அன்புமாமியும் ஷயான், மெகன்டியா, கமிலஸ், மதுலஸ்,. கனிஷியா, யுகானா, ரிஷானா, லிரோஜன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் இம்மானுவேல் (இலங்கை), செல்வராக்கினி (இலங்கை), சிசிலியம்மா (இலங்கை), மரியரஞ்சிதம் (இத்தாலி), காலஞ்சென்ற மேரி அஞ்சலீனா (இலங்கை) மற்றும் ஞானசோதி (இலங்கை), அருள்நேசன் (லண்டன்), குணசீலன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் நாளை (21.02.2018) புதன்கிழமை பிரான்ஸில் நடைபெறும். அன்றையதினம் ஆன்ம இளைப்பாற்றுக்காக முற்பகல் 11.00 மணிக்கு கேரதீவு வீதி, நாவற்குழியில் அமைந்துள்ள தூய அந்தோனியார் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*- அதன் பின்னர் அன்னாரின் இல்லத்தில் வழிபாடும் மதியபோசனமும் இடம்பெறும்.*


**கேரதீவு வீதி, நாவற்குழி.**

**தகவல்: குடும்பத்தினர்.**

| | | |
|---|---|---|
| *தொடர்பு :* ஞானசோதி | - இலங்கை | - 077 444 0277 |
| விக்ரர் | - சுவிஸ் | - 0041787637406 |
| கலா | - பிரான்ஸ் | - 0033658696399 |
| கவிதா | - பிரான்ஸ் | - 0033651114682 |

---

## இதய அஞ்சலி



### திரு. கந்தையா நீலகண்டன்

(தலைவர், அகில இலங்கை இந்து மாமன்றம்)

இந்து மக்களுக்காக அயராது குரல்கொடுத்த
உன்னத தலைமகனின் பிரிவு மிகுந்த வேதனை
தருகின்றது. எங்கள் தேவஸ்தானத்துக்கும்,
துர்க்காபுரம் மகளிர் இல்லத்தின் வளர்ச்சிக்கும்
அன்னார் ஆற்றிய பணி மறக்க முடியாது.
அன்னாரின் ஆத்மா சாந்தி பெறத்
துர்க்கா தேவியைப் பிரார்த்திக்கின்றோம்.

(IN 5932)(10)

**துர்க்காபுரம் மகளிர் இல்லம்.**

**நிர்வாக சபை**
**ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,**
**தெல்லிப்பழை.**

---

## ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி

### அமரர் கந்தவனம் சின்னையா சண்முகலிங்கம்

(ஓய்வுபெற்ற உப அதிபர்)



தோற்றம் 10.10.1939

மறைவு 14.02.2013

ஐந்தாண்டுகள் ஆனபோதும் ஆறுமோ
எம் துயரம்
அப்பா இன் முகமும் கம்பீரப் பேச்சும்
தெய்வசிந்தையுமாய்
எமக்கு கல்வி எனும் பெரும் பேற்றுடன்
அன்பு, கருணை, பண்பு என அனைத்தையும்
கற்றுத் தந்து எமைப் பேணி வளர்த்தீர்கள்
கூடிக் கழித்த நாள்களைப் பின் திரும்பிப் பார்க்கின்றோம்
அம்புகளாய் நெஞ்சத்தில் குத்துகின்றதே உங்கள் நினைவு
அப்பா உங்கள் பாசத்துக்காய் ஏங்கித் தவிக்கின்றோம்
மீண்டும் எம்முடன் வந்து விடுங்கள் அப்பா...

**வருவீர்கள் என வாஞ்சையுடன் காத்திருக்கும்...**

**கைதடி நுணாவில், சாவகச்சேரி.**


**மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

(CS/13946)(11,17)

---

## மரண அறிவித்தல்

### செல்லத்துரை கனகராசா



தோற்றம் 01.04.1943 மறைவு 10.02.2018

யாழ்ப்பாணம், சுதுமலை, மானிப்பாயைப் பிறப்பிடமாகவும், கொழும்பு வெள்ளவத்தையை வதிவிடமாகவும், தற்போது பிரான்ஸில் வசித்து வந்தவருமாகிய செல்லத்துரை கனகராசா 10.02.2018 சனிக்கிழமை பிரான்ஸில் சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களாகிய செல்லத்துரை - சின்னத்தங்கச்சி தம்பதிகளின் அன்புப் புதல்வரும், காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு - இராசம்மா தம்பதிகளின் பாசமிகு மருமகனும், இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும், காண்டீபன், பார்த்தீபன், திலீபன், துஷ்யந்தி, தமயந்தி ஆகியோரின் அன்புத்தந்தையும், முரளிதரன், ரவீந்திரன், சுகுணா, சங்கவி, கவிதா ஆகியோரின் அன்பு மாமனாரும், சங்கர், கோபிகா, அட்சஜா, காயத்திரி, ஹரினி, கிஷானி, தனுஷ், அனனியா ஆகியோரின் பேரனும், அத்விக்காவின் பூட்டனாரும், லீலாவதி, பாலாம்பிகை, தர்மகுலசிங்கம், காலஞ்சென்ற பாலகிஸ்ணன் ஆகியோரின் சகோதரரும், லட்சுமிகாந்தன், காலஞ்சென்ற இராஜரட்ணம் ஆகியோரின் மைத்துனரும், அன்னலட்சுமி, புவனேஸ்வரி, காலஞ்சென்ற சந்திரலட்சுமி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (21.02.2018) புதன்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் பிரான்ஸில் நடைபெறவுள்ளது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: அன்பு மகன் கனகராசா காண்டீபன்**
**நியூபெற்றா எசன், றோயல் எசன் உரிமையாளர்.**
**077 902 5728**

(00268)(11,17)

உதயன்
விளம்பர தொடர்புகளுக்கு
advt@uthayan.com,
021 493 1111

## ஈரவிழிகளுடன் ஒன்பதாம் ஆண்டில்

மண்ணில் 17 . 09 . 1964



விண்ணில் 20 . 02 . 2009

**அமரர் இலட்சுமணப்பிள்ளை கிருபாகரன்**

ஆசிரியர் - கிளி/ வட்டக்கச்சி மகாவித்தியாலயம்)

செங்கோல் தடுமாற செங்குருதி ஆறுபாய
தங்குமிடம் அறியாமல் தறிகெட்டு ஓடுகையில்
எறிகணைக்கு இலக்காகி எல்லாம் முடிந்ததப்பா...
எப்படித் தாங்குவோம் மறுபிறப்பு உண்மையெனில்
வரவேண்டும் அப்பாவாய்

**என்றும் உங்கள் நினைவுகளுடன்**

தாவடி. (CS/14034)(11,17) **அன்பு மனைவி, பிள்ளைகள்**

## மரண அறிவித்தல்கள்

### திருமதி சூசைப்பிள்ளை லில்லி



பிறப்பு:19.11.1938
இறப்பு:17.02.2018

யாழ். கரம்பொன் தெற்கு, மெலிஞ்சிமுனையைப் பிறப்பிடமாகவும், பிரான்ஸ் Nevers ஐ வசிப்பிடமாகவும் கொண்ட சூசைப்பிள்ளை லில்லி 17.02.2018 சனிக்கிழமை காலமானார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான பிரகாசம் - கித்தோரி தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சந்தியாகு - யக்கமுத்து தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சூசைப்பிள்ளையின் அன்பு மனைவியும், யோகராசா (சுவிஸ்), சுசிலா (நோர்வே), மாலா (ஜேர்மனி), கலா (பிரான்ஸ்), நிக்சன் (சுவிஸ்), கணீஸ்ரன் (இலங்கை), சுயாமிலா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், கயல் (சுவிஸ்), தவம் (நோர்வே), மில்டன் (ஜேர்மனி), வேனோ (பிரான்ஸ்), நீற்றா (சுவிஸ்), ஜெனீரா (இலங்கை), சுதாகர் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும், துரைசிங்கம், யுஸ்தீனம்மா, சின்னராசா, ராணி, சகாயன், ஜெசிந்தா ஆகியோரின் அன்புச் சகோதரியும், நேசமலர், காலஞ்சென்ற மகராசம்பிள்ளை, ஜெயா, சின்னக்கிளி, அற்புதராணி, யேசுதாசன், விக்ரோறியாபிள்ளை, சவிரியான் ஆகியோரின் அன்பு மைத்துனியும், லிடியா (சுவிஸ்), யோஜல் (சுவிஸ்), மயூரி (நோர்வே), அன்ரோ (ஜேர்மனி), யோகான் (பிரான்ஸ்), நோவிஸ் (பிரான்ஸ்), சீனு (பிரான்ஸ்), லிலியானா (சுவிஸ்), லிவியா (இலங்கை), லவுறா (இலங்கை), லினோ (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், எழில் (நோர்வே) அவர்களின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பிரான்ஸ் Nevers இல் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**077 331 6776** (CS/14032)(11,17) **தகவல்: குடும்பத்தினர்**

---

தோற்றம் 14 . 06 . 1941



மறைவு 17 . 02 . 2018

### சின்னத்துரை கிருஷ்ணசாமி (சாமி)

யாழ். சாவகச்சேரி சரசாலை தெற்கைப் பிறப்பிடமாகவும், மயூராபதி வெள்ளவத்தையினை வதிவிடமாகவும் கொண்ட சின்னத்துரை கிருஷ்ணசாமி 17.02.2018 சனிக்கிழமை கொழும்பில் அகாலமரணமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - சிவக்கொழுந்து தம்பதிகளின் பாசமிகு புதல்வரும், காலஞ்சென்றவர்களான அப்பாக்குட்டி - மகிழம்மா தம்பதிகளின் மருமகனும், காலஞ்சென்ற செல்வரத்தினத்தின் அன்புக் கணவரும், மமிலாவின் (லண்டன்) பாசமிகு தந்தையும், கேதீஸ்வரரூபன் (ஈசன் - லண்டன்) அவர்களின் பாசமிகு அன்பு மாமனாரும், விக்னேஸ், குமரேஸ் (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேரனும், பரமேஸ்வரி, தம்பியையா ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (20.02.2018) செவ்வாய்க்கிழமை ஜெயரத்னமலர்சாலை (Jayaratne Funeral Directors (pvt)Ltd) பொறளையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பிற்பகல் 3 மணியளவில் கிரியைகள் செய்யப்பட்டு மாலை 4 மணியளவில் பொறளை பொதுமயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(ACO1/)(11,17) **தகவல்:- குடும்பத்தினர்.**

**மமிலா - 077 321 2886,**
**யோகரத்தினம் - 011 205 5747, 077 295 2775,**
**மலர் - 077 263 6780**

---

**MICRO PC SYSTEMS**
SOLAR | CCTV | NETWORKING | IT HARDWARE
www.solarpowerlk.com

## Product Manager

(Jaffna & Kilinochchi)

**Job Description**

We are looking for dynamic, result oriented and self-motivated team players who have a passion for marketing and sales. Employees are encouraged to grow and expand their role and impact in the company.

**The role will include:**

- Maintaining and developing our existing client base.
- Securing new business opportunities while expanding on existing relationships.
- Communicate well with customers, management and colleagues and providing Clear concise and accurate information.

**Position Requirements:**

- A/L, part or fully professional qualification in sales & marketing.
- Have ability to ride a motor bike.
- Experience in marketing or sales will be an added bonus.
- Computer literacy is mandatory.
- A team player with excellent interpersonal skills.
- An outgoing personality who is willing to take up challenges.

**Experience in sales & marketing would be an advantage**


Total earnings will be Rs.50, 000.00 - Rs.100, 000.00 & more, after the training period of three month.

Please forward a detailed resume with your contact details of two non-related referees to reach us within 14 days of this advertisement.

Email: mail@micropcsystems.com
Web : www.solarpowerlk.com
Postal Address : No. 115c , W.A. Silva Mawatha Colombo-06.

---

## துயர்பகிர்கிறோம்



### சி.நாகமுத்து சண்முகநாதன்

(உரிமையாளர், சுகபாணிஸ்ரோர்ஸ் - யாழ்ப்பாணம், முன்னாள் பொருளாளர் - நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அமுதசுரபி அன்னதான சபை)

**நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அமுதசுரபி அன்னதான சபையின் நீண்டகால உறுப்பினரும் முன்னாள் பொருளாளருமான ச.பரமேஸ்வரன்** அவர்களின் பாசமிகு தந்தை **நா.சண்முகநாதன்** அவர்கள் தமிழ் நாட்டில் காலமானதையிட்டு எமது சபையின் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்ம சாந்திக்காக அன்னை ஸ்ரீ நாகபூஷணி அம்மனை இறைஞ்சுகின்றோம்.

ஓம் சாந்தி!

பிரதான சாலை,
நயினாதீவு 02.
**021 321 3575** (CS/14035)(11,17)

நிர்வாகம்,
நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அமுதசுரபி,
அன்னதான சபை.

## மரண அறிவித்தல்

### யோகேஸ்வரராஜா இதயராஜா



கொக்குவில் மேற்கு, மஞ்சவனப்பதி வீதியில் உள்ள இராமுப்பிள்ளை லேனை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட யோகேஸ்வரராஜா இதயராஜா நேற்று (19.02.2018) திங்கட்கிழமை அகால மரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற யோகேஸ்வரராஜா (தொழில் நுட்ப உத்தியோகத்தர்) மற்றும் தவமணிதேவி தம்பதியரின் அன்புமகனும் செந்தூரன் (ஆசிரியர், மன்னார் சித்திவிநாயகர் பாடசாலை), இதயகாந்தன் (பொறியியலாளர், யாழ். நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை) ஆகியோரின் அன்புச்சகோதரரும் சந்திரகலாவின் மைத்துனரும் காலஞ்சென்றவர்களான தம்பு, திருநாவுக்கரசு மற்றும் பொன்னுத்துரை தம்பதியரின் அன்புப்பேரனும் யதுநந்தன், அமிர்தவாகினி ஆகியோரின் அன்புச்சித்தப்பாவும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (20.02.2018) செவ்வாய்க்கிழமை மு.ப.10 மணியளவில் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இராமுப்பிள்ளை லேன், கொக்குவில் மேற்கு.**

**தகவல்: மங்களேஸ்வரன் (சித்தப்பா) - 077 174 8019**
**தவராஜா - 077 2140 483, புஸ்பராசா - 077 5977 166,**
**இதயகாந்தன் - 077 910 3439, செந்தூரன் - 077 699 4953**

---

### அறைகள் வாடகைக்கு

பெண்பிள்ளைகள் மாத்திரம் தங்குவதற்கு ஏற்ற அறைகள் உண்டு.
077 218 0378, 077 625 0515
(cs 14062)(16,17)

### தவறிவிட்டது

கொக்குவிலுக்கும் நவாலிக்கும் இடையில் தே.அ.அட்டை (194815300237) மற்றும் முக்கிய ஆவணங்கள், பொருள்கள் அடங்கிய கைப்பை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்வரும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும்.

**077 326 6705** (CS/114037)(11,17)

### வாகன விற்பனை

**TATA Supper AC Full Body**
**2012** ஆம் ஆண்டு சுப்பர் **AC**
விற்பனைக்கு உண்டு.
(**PU** தொடரிலக்கம்)
(AKN/375)(16,17)

தொடர்புகளுக்கு **077 374 7825**

---

**ES Printers**


அனைத்தும்
தனித்துவமான
கணினி வடிவமைப்புடன்








021 492 7471,
021 492 7472
esprintersjaffna@gmail.com
357, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.



## எனை நோக்கிப் பாயும் தோட்டா படத்தில்

# சிறப்புத் தோற்றத்தில் சசிகுமார்

கௌதம்மேனன் இயக்கத்தில் தனுஷ் நடித்து வரும் எனை நோக்கி பாயும் தோட்டா படத்தில் சிறப்புத் தோற்றத்தில் நடிக்க சசிகுமாருடன் பேச்சு நடத்தப்பட்டு வருகிறது என்று தெரிவிக்கப்பட்டது. இந்தப் படத்தில் தனுஷ்க்கு ஜோடியாக மேகா ஆகாஸ் நடிக்கிறார். நடிகர் ராணா, சுனைனா இருவரும் முக்கிய கதாபாத்திரங்களில் நடிக்கின்றனர். இந்த நிலையில், சிறப்புத் தோற்றத்தில் நடிக்க தற்போது சசிகுமாருடன் பேச்சு நடத்தப்பட்டு வருவதாக தகவல் வெளியாகி இருக்கிறது. எதிர்வரும் மே மாதத்தில் படம் திரைக்கு வர வாய்ப்புள்ளது என்றும் கருதப்படுகிறது.

## இரு வரியில் வாழ்க்கை தத்துவங்கள்

| | |
|---|---|
| வருவதும் போவதும் | - இன்பம்,துன்பம் |
| வந்தால் போகாதது | - புகழ்,பழி |
| போனால் வராதது | - மானம்,உயிர் |
| தானாக வருவது | - இளமை,மூப்பு |
| எம்முடன் வருவது | - பாவம்,புண்ணியம் |
| அடக்க முடியாதது | - துக்கம்,ஆசை |
| தவிர்க்க முடியாதது | - பசி ,தாகம் |
| எம்மால் பிரிக்க முடியாதது | - பந்தம்,பாசம் |
| அழிவைத் தருவது | - பொறாமை,கோபம் |
| எல்லோருக்கும் சமனானது | - பிறப்பு , இறப்பு |

அம்மாவின்
தலாட்டுக்கு
இணையானது
**மதிய சாப்பாடு**

இந்தக் காலத்துப் பசங்க எப்போவும் பேஸ்புக்லயே இருந்து நிறைய நண்பர்களை பேஸ்புக்ல சேத்துட்டாங்க! ஆனா நிஜ வாழ்க்கைல யாருமில்லாம போயிட்டாங்க!

இந்த உலகத்தில் ஏழை, பணக்காரன் எல்லாத்துக்கும் பொதுவான ஒரே விடயம் **நேரம்**

twitter

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** உற்சாக மனப்பான்மையுடன் பணியாற்றுவீர்கள். தொழில், வியாபாரத்தில் குறுக்கிட்ட இடையூறு விலகும். இலாபம் படிப்படியாக உயரும்.

**இடபம்:**திடீர் அவசரப்பணியால் சிரமப்படலாம். தொழில் வியாபாரத்தில் மறைமுகப் போட்டி குறுக்கிடும். பெண்கள் பிள்ளைகளின் வழியில் செலவு செய்வர்.

**மிதுனம்:** நேர்மை எண்ணத்துடன் செயற்படுவீர்கள். புதிய சாதனை நிகழ்த்த வாய்ப்பு கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் வருமானம் அதிகரிக்கும்.

**கடகம்:** நற்செயலில் ஈடுபட்டு புகழ் பெறுவீர்கள். தொழில் வியாபாரத்தில்லாபம்பன்மடங்குஅதிகரிக்கும்.பணியாளர்கள் நிர்வாகத்தினரிடம் பரிசு, பாராட்டு காண்பர்.

**சிங்கம்:** மனதில் இருந்த குழப்பம் நீங்கும். வளர்ச்சிக்கான புதிய வாய்ப்பு கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த இலாபம் கிடைக்கும்.

**கன்னி:**சிலர் சுயநல எண்ணத்துடன் நெருங்கிப் பழகுவர். தொழில்வியாபாரத்தில்உழைப்புக்கேற்ப இலாபம்கிடைக்கும். பணியாளர்கள் பணிச்சுமையில் இருந்து ஓரளவு விடுபடுவர்.

**துலாம்:** அறிமுகம் இல்லாதவரிடம் உதவி கேட்க வேண்டாம். தொழில் வியாபாரத்தில் குறுக்கிட்ட இடையூறு விலகும். வருமானம் சுமாராக இருக்கும்.

**விருச்சிகம்:**எதிர்பார்ப்பு இனிதே நிறைவேறும். தொழில் வளர்ச்சியால் ஆதாயம் பன்மடங்கு உயரும். பணியாளர்கள் பணியிடத்தில் செல்வாக்குடன் திகழ்வர்.

**தனுசு:**நண்பரின் செயலை விமர்சிக்க வேண்டாம். தொழில் வியாபாரத்தில் மிதமான வருமானம் கிடைக்கும். பணியாளர்கள் பணிச்சுமையைச் சந்திப்பர்.

**மகரம்:** நேர்மை எண்ணத்துடன் செயல்படுவீர்கள். முயற்சி முழு அளவில் வெற்றி பெறும். தொழில், வியாபாரத்தில் வியத்தகு வளர்ச்சி உண்டாகும்.

**கும்பம்:** யாரிடமும் குடும்பவிஷயத்தைப் பேச வேண்டாம். தொழில், வியாபாரத்தில் வருமானம் சுமாராக இருக்கும். பணியாளர்கள் சக ஊழியர்களுடன் கருத்து வேறுபாடு கொள்வர்.

**மீனம்:** வாழ்க்கைத்தரம் மேம்படும். தொழில், வியாபார வளர்ச்சியால் வருமானம் அதிகரிக்கும். பணியாளர்கள் எதிர்பார்த்த சலுகை கிடைக்கும்.

## நினைக்கிறது எல்லாம் நடக்கிறதே இல்லை....



நடந்திடுமோன்னு பயப்படுறது மட்டும் நடந்திடுது...

## சொல் பேச்சு கேளாதவர்கள்



'ஹெட் செட்' அணிந்தவர்கள்

## உள்ள இருந்தாலும் சாப்பிடுறானுங்க... வெளியே வந்தாலும் சாப்பிடுறானுங்க...



என்ன பண்றதெண்டே தெரியலையே....

# சுடோக்கு

எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | 1 | 6 | | 2 |
| | 7 | | | 6 | | | | |
| | 8 | | 5 | 9 | | | | |
| | 5 | | | | | 9 | | 8 |
| | | 3 | 9 | | 4 | 7 | | |
| 4 | | 7 | | | | | 3 | |
| | | | | 4 | 9 | | 2 | |
| | | | | 5 | | | 6 | |
| 9 | | 1 | 2 | | | | | |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | 6 | 4 | 3 | 2 | 7 | 9 | 8 | 1 |
| 8 | 7 | 2 | 5 | 9 | 1 | 4 | 3 | 6 |
| 1 | 9 | 3 | 8 | 4 | 6 | 2 | 5 | 7 |
| 6 | 2 | 9 | 4 | 3 | 5 | 7 | 1 | 8 |
| 7 | 1 | 8 | 2 | 6 | 9 | 5 | 4 | 3 |
| 4 | 3 | 5 | 7 | 1 | 8 | 6 | 2 | 9 |
| 3 | 5 | 1 | 9 | 7 | 4 | 8 | 6 | 2 |
| 2 | 8 | 7 | 6 | 5 | 3 | 1 | 9 | 4 |
| 9 | 4 | 6 | 1 | 8 | 2 | 3 | 7 | 5 |

நேற்றைய விடை

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரை களையும் கொண்டது. 3X3ஆக உள்ளே 3 நிரல்களையும் 3 நிரைகளை யும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்ப வற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கி றார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படு கையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக் கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனைய வற்றை நிரப்ப வேண்டியதே வேலை.





## வர்ணம் தீட்டுவோம்

# காகமும் நாகமும்



காட்டில் பெரிய மரம் ஒன்றில் கூடு கட்டி ஆண் காகமும் பெண் காகமும் மகிழ்ச்சியுடன் வசித்து வந்தன. நான்கு முட்டைகளைப் பெண் காகம் இட்டது. அன்று இரண்டும் ஜோடியாக இரை தேடி வெளியே கிளம்பின. அந்த மரத்தின் கீழே இருந்த புற்றில் கருநாகம் ஒன்று வசித்தது. காகங்கள் சென்ற பின் மரத்தின் மீதேறிய நாகம் ஒரு முட்டையை விழுங்கி விட்டது. அப்போது இரைதேடிச் சென்ற காகங்கள் இரண்டும் வந்து சேர்ந்தன. பெண்காகம் "நாகமே! செய்வது சரியா? உன்னுடைய வாழ்வுக்கு நாங்கள் என்றாவது இடையூறு செய்திருக்கிறோமா? இல்லையே! பின் ஏன் இப்படி எமக்கு இடையூறு செய்கிறாய்?" என்றது. அதற்கு கரு நாகம் "காகமே! நீ புத்தி சொல்லிக் கேட்கும் அளவுக்கு நான் தாழ்ந்து போய் விடவில்லை. இன்னும் மூன்று முட்டைகள் உள்ளன. தினமும் ஒரு முட்டையாக நான் சாப்பிடப் போகிறேன். உன்னால் முடிந்ததைச் செய்" என்று சொல்லி விட்டுச் சென்றது.

அப்போது ஆண் காகம் "பொல்லாத நாகத்திடம் போய் கருணை பற்றிப் பேசுகிறாயே! நம் முட்டைகளைத் தின்று விட்டது என்று நியாயம் கேட்கிறாய்'' அது தனது முட்டைகளில் இருந்து வெளியேறும் குட்டிகளையே விரட்டிப் பிடித்துத் தின்னும் சுபாவம் கொண்டது. அதனிடம் எப்படி நியாயம் கிடைக்கும்?" என்றது. "தினமும் ஒரு முட்டையாகத் தின்றால் பின்னர் தம் இனத்தை நாம் எப்படி விருத்தி செய்வது?" என்று பரிதாபமாகக் கேட்டது பெண் காகம்.

இரண்டும் மிகுந்த சோகத்துடன் பேசிக் கொண்டிருப்பதை அந்த வழியாக வந்து நரி ஒன்று பார்த்தது. "ஏன் இருவரும் சோகமாக இருக்கிறீர்கள்?" என்று கேட்டது. நடந்ததையெல்லாம் காகங்கள் கூறின. அதற்கு நரி "அந்த நாகத்தை எதிர்க்க வலிமையில்லை என்று தானே கவலைப்படுகிறீர்கள். உங்கள் அறிவையும் ஆற்றலையும் பயன்படுத்த வேண்டியதுதானே.

"நரி அண்ணா! நீங்கள் தான் ஒரு யோசனை சொல்லுங்கள்" என்று கேட்டது பெண் காகம். நரி காகங்களுக்கு ஒரு யோசனை சொன்னது. அதன் படி பெண் காகம் பறந்து சென்றது. அரசியர் குளிக்கும் கேணியடிக்குச் சென்றது. அங்கே அரசியார் தனது விலையுயர்ந்த ஆபரணங்களை கழற்றி ஒரு பக்கத்தில் வைத்து விட்டு நீராடிக்கொண்டிருந்தார். காகம் அரசியாரின் விலையுயர்ந்த மாணிக்க மாலை ஒன்றைத் தன் அலகினால் கவர்ந்து எடுத்துக்கொண்டு பறந்தது. காகத்தின் இந்தச் செயலைக் காவலர்கள் பார்த்து விட்டனர். காகத்தை துரத்திக் கொண்டோடினர். காகம் தன் இருப்பிடம் வந்து கருநாகம் குடியிருந்த புற்றினருகே மாலையுடன் உட்காந்திருந்தது. காகத்தைத் துரத்தி வந்த காவலர்கள் காகம் புற்றின் மீது மணிமாலையுடன் இருப்பதைக் கண்டனர். இந்த நேரம் பார்த்து காகம் ம்ணி மாலையைப் புற்றின் வாசலில் வைக்க அது நழுவி புற்றுக்குள் விழுந்தது. சேவகர்கள் புற்றை இடிக்கத் தொடங்கினர். அப்போது புற்றினுள்ளே இருந்த கருநாகம் சீறிக்கொண்டு வெளியே வந்தது. சேவகர்கள் கைகளில் இருந்தால் வாள்களால் நாகத்தை வெட்டிக்கொன்று மணிமாலையை எடுத்துச் சென்றனர். காகங்கள் நிம்மதிப் பெருமூச்சு விட்டன. நரியைத் தேடிச் சென்று நன்றி கூறின.

**புத்திமான் பலவான்.**

## சாக்ரடீஸ்



கிரேக்க நாட்டின் மாபெரும் சிந்தனையாளரும் தத்துவஞானியும் எனப் போற்றப்படுபவர் சாக்ரடீஸ். ஏதென்ஸ் நகரில் கி.மு. 470இல் பிறந்தார். இவரின் தந்தை ஒரு சிற்பி. இவர் சில காலம் தந்தையின் தொழிலையே செய்தார். பின்னர் இராணுவத்தில் பணி புரிந்தார். உரையாடல் மூலம் உலகைத் திருத்த முடியும் என்று நம்பினார்.

சாக்ரடீஸ் படிக்காத மேதை. எழுதப்படிக்கத் தெரியாதவர். இருபதாம் நூற்றாண்டின் அநேக சீர்திருந்தங்களுக்கு அவரே அடித்தளம். மக்களிடமே பிரச்சினைகளை எழுப்பி கேள்விகள் கேட்பார். சமுதாயக் கோட்பாடுகளின் அடி வேரைத் தொட்டுக்காட்டுவார். இது பொறுக்காத போலியான அரசியல்வாதிகள் அவர்மீது வழக்குத் தொடர்ந்தனர்.

"மக்களுக்கு விழிப்புணர்வை ஊட்டுகிறார்" என்பதே அவர் மீதுள்ள குற்றச்சாட்டு.

அவருக்குச் சாவுத் ண்டனை விதிக்கப்பட்டது. விஷம் கொடுத்துக் கொல்லும்படி தீர்ப்புக் கூறப்பட்டது. அவரைச் சிறையிலிருந்து தப்பிச் செல்ல நண்பர்கள் வழிவகுத்தனர். "நான் சட்டத்தை மதிப்பவன்" என்று கூறி நண்பர்கள் விருப்பத்தைஅவர் மறுத்துவிட்டார். கி.மு.339இல் ஒரு கோப்பையில் கொடுக்கப்பட்ட நஞ்சை அருந்தி அவர் உயிர்விட்டார்.

அவரது சீடராக பின்நாள்களில் பிளோட்டோ என்ற தத்துவஞானி விளங்கினார்.



# துருவமான்

ஆர்டிக் பிரதேசத்துக்குரிய சிறப்பான விலங்காக துருவமான் விளங்குகிறது. முனைவுப் பிரதேச மக்களின் வீட்டு வளர்ப்பு விலங்காகவும் இது பராமரிக்கப்பட்டு வருகிறது. ஸ்கன்டினேவியாவிலிருந்து கிழக்கு சைபீரியா வரை பரந்த நிலப்பரப்பிலே துருவமான்கள் மந்தை மந்தையாகச் சஞ்சரித்து வருகின்றன. வடஅமெரிக்காவின் தண்டராப் பிரதேசத்திலும் ஊசியிலைக் காட்டுப் பிரதேசத்திலும் கனடாவின் காட்டுப்பகுதிகளிலும் துருவமான்கள் உள்ளன. துருவமான்களில் ஆண், பெண் இரண்டுக்கும் கொம்புகள் இருப்பதால் இவை ஏனைய மான்களில் இருந்து வேறுபடுகின்றன. இந்த மான்களின் கிளைக் கொம்புகள் அவற்றுக்கு அழகையும் பாதுகாப்பையும் தருகின்றன. நன்கு வளர்ச்சியடைந்த ஒரு துருவ மான் 0.7-1.4மீற்றர் உயரத்தைக் கொண்டதாகவும் 300 கி.கிராம் நிறையுடையதாகவும் இருக்கும். பனிபடர்ந்த தரைமீது ஊன்றி நடப்பதற்கு வாய்ப்பாக துருவ மானின் கால்களில் அகன்ற பிளவுக்குளம்புகள் உதவுகின்றன. இந்த மான்கள் வெண்மை இளங்கருமை, கபில நிறத் தோற்றங்களைக் கொண்டவை. இவை நன்கு நீந்தக் கூடியவை. இவை எப்போதும் கூட்டமாகவே காணப்படும். ஆர்டிக் பிரதேசத்தில் பனி பெய்யத் தொடங்கியதும் அவை தென்புறமாக இடம்பெயர்ந்து செல்லும் இயல்பின. துருவ மான்களின் எண்ணிக்கை குறைவடைந்து வருவதற்கு அவை வேட்டையாடப்படுவதும் இனப்பெருக்கம் குன்றியமையும் காரணங்களாகும். துருவ மான்களில் ஒவ்வொரு ஆணும் தனக்கென ஒரு கூட்டம் பெண் மான்களைக் கொண்டிருப்பதற்காக ஏனைய ஆண் மான்களுடன் சண்டையிட நேரிடுகின்றது. ஒன்றின் தலைமைத்துவத்தை ஏற்காத ஏனைய மான்கள் மந்தையிலிருக்க முடியாது பிரிந்து செல்கின்றன.

இவை தண்டிராவின் பாசியினத் தாவரங்களையும் புற்கள் தளிர்கள் என்பனவற்றையும் உண்கின்றன. இவற்றின் பிரதான எதிரிகள் மனிதன் ஓநாய் காட்டுப்பூனை என்பவையாகும்.

இறைச்சி, தோல், கொம்பு போன்றவற்றுக்காக இவை வேட்டையாடப்படுகின்றன.

## அலட்சியப்படுத்த வேண்டிய பிரச்சினைகள்



1. இரவு பகலாக உழைத்தும் நேர்மையான உழைப்பை மதிக்காத, பாராட்டத் தெரியாத மேல் அதிகாரிகளின் ஆணவத்தை, அவர்கள் கொடுக்கும் பிரச்சினைகளை அலட்சியப்படுத்த வேண்டும்.
2. தன்னுடைய சுகங்களைத் தியாகம் செய்து தன் பெற்றோருக்காக உடன் பிறந்தவர்களுக்காக உழைத்தும் பாராட்டாத குடும்பத்தாரின் பிரச்சினைகளை அலட்சியப்படுத்துங்கள்.
3. புகுந்த வீட்டின் பெருமைக்காக, ஒற்றுமைக்காக ஓயாமல் உழைக்கின்ற மருமகளைக் குறை சொல்லிக்கொண்டே இருகின்ற மாமியாரின் பிதற்றலை அலட்சியம் செய்யுங்கள்.
4. பல வழிகளில் பல முயற்சிகள் செய்தும் தீய பழக்கங்களிலிருந்து திருந்தாத கணவனை அலட்சியம் செய்யுங்க்ள.
5. தந்தை எத்தனை நல்வழிகளை வகுத்துக்கெடுத்தாலும் பயன்படுத்தாமல் தகப்பனையே எதிரியாக நினைத்து ஒதுக்கும் பிள்ளையை அலட்சியம் செய்யுங்கள்.
6. வயதான மாமனாரை வயதுக்காகக் கூட மதிக்காமல் அவருடைய அத்தியாவசிய தேவைகளைப் பூர்த்தி செய்யாத மருமகளை அலட்சியப்படுத்துங்கள்.

மேற் கூறிய விடயங்களை அலட்சியப்படுத்துவதால் பிரச்சினைகளின் வலிமை குறையும்.

## உயர் நீதிமன்ற...

பாதுகாக்க கூட்டு அரசில் இணைந்து செயற்பட பகல் முடிவெடுத்துள்ளோம். கூட்டு அரசில் தொடர முடியுமா இல்லையா என்பது தொடர்பில் உயர் நீதிமன்றம் தீர்மானம் வழங்கும் வரையிலேயே கூட்டு அரசில் எமது பயணம் தொடரும்.

இவ்வாறு சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மூத்த உறுப்பினரும், பிரதி சபாநாயகருமான திலங்க சுமதிபால தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுத் திங்கட்கிழமை தற்போதைய அரசியல் நெருக்கடி தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்தன முன்வைத்த சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை மீதான விவாதத்தில் கலந்து கொண்டு சுதந்திரக்கட்சியின்நிலைப்பாட்டைஅறிவித்துஉரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

கூட்டு அரசிலிருந்து விலக வேண்டும் என்று சுதந்திரக் கட்சியினரான நாம் கோரியது உண்மையாகும். அதற்கான பேச்சுக்களையும் நாம் நடத்தினோம். கூட்டு அரசிலிருந்து இருந்து விலக முடியுமா என்றும் அடுத்த கட்ட நகர்வுகள் தொடர்பில் ஆராய்வதற்கும் அரச தலைவர் மைத்திரிபாலசிறிசேன சட்டமா அதிபரின் ஆலோசனையை பெற்றுக்கொள்ளத் தீர்மானித்தார்.

கூட்டு அரசு இருப்பதால் இதற்குத் தீர்ப்பு வழங்குவது கடினமாகும். உயர் நீதிமன்றத்தின் நாடி இது தொடர்பில் தீர்ப்பைப் பெற்றுக்கொள்ளுங்கள் என்று சட்டமாஅதிபர் அரச தலைவருக்கு ஆலோசனை வழங்கினார்.

நேற்று (நேற்று முன்தினம்) அரசிலிருந்து விலகப் போகிறோம் என்றும், உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பை பெறவுள்ளோம் என்றும் நான் அறிவித்தேன். நேற்று பகல் நாம் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவை மீண்டும் சந்தித்தோம். நாடு தற்போது உறுதியற்ற நிலைமையில் உள்ளது. 2015 ஆம் ஆண்டு மக்கள் ஆணையின் பிரகாரம் நாம் செயற்பட வேண்டியுள்ளது. உயர் நீதிமன்றத் தீர்ப்பு வரும் வரை கூட்டு அரசுடன் இணைந்து பயணிக்க வேண்டும் என்று அரச தலைவர் மைத்திரி கோரினார். கூட்டு அரசுடன் இணைந்து பயணிக்க நாம் தீர்மானித்துள்ளோம் என்றார். (ρ-5,61)

## பட்டம்...

வனே உயிரிழந்தான். தீஸன் தரம் 11 இல் கற்கின்றார்.

விளைவேலி பயல் பகுதியில் அறுவடை நடக்கின்றது. அறுவடை முடிந்து விவசாயிகள் சென்றபின்னர், அறுவடை முடிந்த வயலில் தீஸன் பட்டம் ஏற்றினான். அப்போது பாதுகாப்பற்ற கிணற்றில் தவறி வீழ்ந்துள்ளான். அருகில் நின்ற சிறுவன் ஓடிச் சென்று உறவினர்களை அழைத்துவந்தான். அவர்கள் தீஸனை மீட்டு மருத்துவமனைக்குக் கொண்டு சென்றனர். ஆனால் தீஸன் ஏற்கனவே உயிரிழந்துவிட்டான் என்று மருத்துவர்கள் உறுதிப்படுத்தியுள்ளனர். உடல் சாவகச்சேரி மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் சாவகச்சேரிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். அதேவேளை, கடந்த மாதம் அச்சுவேலி, ஆவரங்காலில் 11 வயதுச் சிறுவன் ஒருவன் தோட்டக் கிணறு ஒன்றில் இருந்து சடலமாக மீட்கப்பட்டான். அவனும் பட்டம் ஏற்றச் சென்ற சமயமே கிணற்றில் தவறி வீழ்ந்தான் என்று தெரிவிக்கப்பட்டது. (ρ-9)


### அறை வாடகைக்கு

சுன்னாகம் நகர மத்தியில் வீட்டுடன் சேர்ந்த அறை வாடகைக்கு விடப்படும் வேலை செய்யும் பெண்கள் மட்டும். தொடர்பு - 077 330 2006

ஜயோதா
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 1443 | சீட்டிழுப்பு திகதி 19.02.2018
வெற்றி இலக்கங்கள் 10 21 47 56 ஆங்கில எழுத்து O
அடுத்த வியாழக்கிழமை ஜக்பொட் ரூ. 17, 008, 660/=
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

சனிக்கிழமை அதிர்ஷ்டம்
வெற்றி வாரம்:2997 | திகதி:19.02.2018 | திங்கட்கிழமை | நீலம்
வெற்றி இலக்கங்கள் மற்றும் ஆங்கில எழுத்து 07 16 46 69 P
போனஸ் இலக்கம் 04
அடுத்த புதன்கிழமைக்கான ஜக்பொட் 30,000,000/-
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

அத கோடிபதி
சீட்டிழுப்பு வாரம்: 173
வர்ணம் : சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 2018.02.19
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 50,921,270/-
வெற்றி இலக்கங்கள் 11 58 60 71 ஆங்கில எழுத்து J
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

Galaxy Star
வெற்றி வாரம் 239 / திகதி 18.02.2018
நட்சத்திர மற்றும் வெற்றி இலக்கங்கள் 08 20 32 37 60
அடுத்த புதன்கிழமை சுப்பர் பரிசுப் பொதி ரூ. 3,397,452/-
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு: 1919


### கண்ணீர் அஞ்சலி

எமது சக உத்தியோகத்தர்
**திருமதி. இ.இராஜலிங்கம்**
அவர்களின் பாசமிகு மாமனார்

**சின்னத்தம்பி கந்தையா**

அவர்களின்
மறைவுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**ஊழியர் நலன்புரிச் சங்கம்**
**வடக்கு வலய அலுவலகம்**
**மற்றும் காணிப் பதிவகம்,**
**யாழ்ப்பாணம்.**

(IN 5933)(10)

### கண்ணீர் அஞ்சலி

சங்க உறுப்பினர் **அன்ரனிற் யூனியா** அவர்களின் அன்புத் தாயார்

**திருமதி சந்தியா யோகம்மா**

அவர்கள் கடந்த 08.02.2018 வியாழக்கிழமை காலமானார்.
அன்னாரின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்திக்கின்றோம்

ஊழியர் நல்ன்புரி சங்கம்,
சாவகச்சேரி பிரதேச சபை – கொடிகாமம்

(IN/5934)(11,17)


### உளம் கனிந்த நன்றிகள்

யாழ்ப்பாணம் இந்து கல்லூரியில் இருபத்து ஐந்து வருடத்திற்கு மேல் கடமையாற்றி ஓய்வு பெற்றதினத்தில் எனது பிரிவுபசார விழாவில் கலந்து சிறப்பித்த யாழ் இந்துக்கல்லூரி அதிபர், பிரதி அதிபர்கள், ஆசிரியர்கள், கல்விசார உத்தியோகத்தர்கள், முன்னாள் அதிபர்கள், பிரதி அதிபர்கள், ஆசிரியர்கள் கல்விசார் உத்தியோகத்தர்கள் நலன் விரும்பிகள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன்.

தாங்கள் அன்பின்
**திரு. சு. இலட்சுமணன் (B.Sc. PGDE)**

## மரண அறிவித்தல்கள்

### சின்னக்குட்டி கணேஸ்



உரும்பிராய் வடக்கு, உரும்பிராயை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னக்குட்டி கணேஸ் 17.02.2018 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னக்குட்டி - பொன்னி தம்பதிகளின் சிரேஸ்ட புதல்வனும், இந்திராதேவியின் அன்புக் கணவரும், ஜமேலா, ஜமீரா (கனடா), ஜஜீலா ஆகியோரின் அன்புத் தந்தையும், கயேந்திரனின் (கனடா) அன்பு மாமனாரும், அஸ்வினின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.02.2018) செவ்வாய்க்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக உரும்பிராய் வடக்கு இருளன் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**கற்பகப்பிள்ளையார் வீதி,** (CS/14040)(11,17) **தகவல்**
**உரும்பிராய் வடக்கு, உரும்பிராய்.** **குடும்பத்தினர்**

### இராமலிங்கம் சிவகுருநாதன்

**(சீரணிச்சந்தி சண்டிலிப்பாய்)**



பண்ணாகத்தைப் பிறப்பிடமாகவும், சீரணிச்சந்தி சண்டிலிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட இராமலிங்கம் சிவகுருநாதன் (இளைப்பாறிய படவரைவாளர், மாநகர சபை யாழ்ப்பாணம்) கடந்த (17.02.2018) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பண்ணாகம் இராமலிங்கம் மாரிமுத்து தம்பதியரின் அன்புமகனும் காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம் நாகரத்தினம் தம்பதியரின் அன்புமருமகனும் வரதராசா, சரவணமுத்து ஆகியோரின் அன்புச்சகோதரரும் சண்டிலிப்பாயைச் சேர்ந்த பத்மசுந்தரி (இளைப்பாறிய ஆசிரியர், சமாதானநீதவான்) அவர்களின் அன்புக்கணவரும் சந்திரிகா, சக்திவேல் காலஞ்சென்ற சிவகாமி மற்றும் பவதாரணி, ரவிசங்கர் ஆகியோரின் அன்புத்தந்தையும் இராஜமோகன், இளங்கோ காலஞ்சென்ற திலீப்குமார் மற்றும் கலியுகராஜா, ரஜனி ஆகியோரின் அன்புமாமனாரும் காலஞ்சென்றவர்களான பத்மநாதன், பத்மநேசன், பத்மரஞ்சினி மற்றும் பத்மதேவன், பத்மானந்தன், திலகவதி, பத்மஜோதி ஆகியோரின் அன்பு மைத்துனரும் காலஞ்சென்றவர்களான சந்திராவதி, ஜெகதீஸ்வரி மற்றும் குகதாசன், சேனாதிபதி, சிவனேசன், புஸ்பா, நாகராஜேஸ்வரி ஆகியோரின் சகலனும் உமையாள், தேனுகா, சாரங்கா, பிரசன்னா, சாரா, விதூஷணன், விசாலி ஆகியோரின் அன்புப்பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (21.02.2018) புதன்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மானிப்பாய பிப்பிலி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினா நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**சீரணிச்சந்தி, சண்டிலிப்பாய்.** **தகவல்:**
**077 6160030, 075 0417539** **குடும்பத்தினர்.**

## 11ஆம் ஆண்டு நினைவஞ்சலி | 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு 07.12.1926 – இறப்பு 23.01.2007

### அமரர் கந்தர் அம்பிகைபாகன்

திதி : பஞ்சமி, பூர்வபக்கம்

எங்கள் அன்புத் தெய்வம் ஐயாவே!
கற்பவை கற்று கற்றாங்கு ஒழுகி
உத்தமனாக ஊர்போற்ற வாழ்ந்து
சிலம்படித்துறையில் வித்தகனாகி
ஏழைகளுக்கு இரங்கி ஏதிலார்க்கு உதவி
இறைவனடி சேர்ந்த எமதருமை ஐயாவே!
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.



பிறப்பு 22.07.1934 – இறப்பு 13.03.2016

### அமரர் அம்பிகைபாகன் தங்கம்மா

திதி : பஞ்சமி, பூர்வபக்கம்

எங்கள் அன்புத் தெய்வம் அம்மாவே!
அல்லும் பகலும் எம்மை ஆதரித்தாயே
எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு சென்றதேனோ?
துயர் உற்றவேளையில் எம் துயர் துடைத்தீர்
இன்று எங்கள் துயர்பகிரவோ எம்மோடு
தாயே நீங்கள் இல்லை...!
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

'அம்பிகை வாசா' புலோலி தென்மேற்கு, புலோலி. **குடும்பத்தினர்.**
**021 226 4280, 021226 2484**

## விபத்தில்...

லையில் சேர்த்தார். கடந்த 7 நாள்களாக .நந்தகுமார் அங்க சிகிச்சை பெற்று வந்தார். சிகிச்சை பயனின்றி நேற்று அவர் உயிரிழந்தார். இறப்பு விசாரணையை திள் இறப்பு விசாரணை அதிகாரி பிரேமகுமார் மேற்கொண்டார். (21)

## ரணில்....

சந்திப்புநாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் நேற்று நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கை வரலாற்றில் முதல் தடவையாக சட்ட பூர்வமான அரசு இல்லாத நிலையில் நாடாளுமன்றம் கூடியுள்ளது. தலைமை அமைச்சர் பதவி வெற்றிடமாகும் சந்தர்ப்பம், அமைச்சரவை கலையும் சந்தர்ப்பம் மற்றும் நாடாளுமன்ற உறுப்புரிமை இல்லாமல் போகும் சந்தர்ப்பம் பற்றி அரசமைப்பின் 46 (2) உறுப்புரை சுட்டிக் காட்டுகிறது. கூட்டு அரசிலிருந்து சிறிலங்கா சுதந்திரக் கட்சி, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி என்பன தற்போதைய நிலையில் விலகியுள்ளன. கூட்டு அரசு இல்லாது போயுள்ளது. கூட்டு அரசு நடைமுறையில் இல்லாத சந்தர்ப்பத்தில் அமைச்சர்களின் எண்ணிக்கை 30 ஆக மட்டுப்படுத்தப்பட வேண்டும். அதனைவிடுத்து அமைச்சர்களின் எண்ணிக்கையை நாற்பத்தெட்டாக தொடரமுடியாது. இந்த அமைச்சரவை கலைந்தவுடன் தலைமை அமைச்சர் பதவி வெற்றிடமாகும். தற்போதைய நிலையில் உத்தியோகபூர்வமாக அமைச்சரவையும் இல்லை. தலைமை அமைச்சரும் இல்லை. 2015 ஆம் ஆண்டு மக்கள் ஐக்கிய தேசியக் கட்சி அரசுக்கு ஆணை வழங்கியுள்ளதாகவும் அதற்கிணங்க நாடாளுமன்றத்தைத் தொடர்வதாகவும் ஐக்கிய தேசியக் கட்சி தரப்பினர் குறிப்பிடுகின்றனர். உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் மக்கள் நல்லாட்சி அரசுக்கு முழு அளவில் எதிர்ப்பைத் தெரிவித்துள்ளனர். அதனை மறைப்பதற்கு ஒவ்வொரு கருத்தை ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்கள் தெரிவித்து வருகின்றனர்.

தற்போதைய நிலையில் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையில் மாற்றம் கொண்டுவரப்பட வேண்டும். 2011 ஆம் ஆண்டு நடைபெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் அந்தக் கட்சி எதிர்க் கட்சியில் அங்கம் வகித்துக்கொண்டு 32 சதவீதமான வாக்குகளைப் பெற்றுக்கொண்டது. இந்த முறை ஆளுங்கட்சியில் அங்கம் வகிக்கின்ற நிலையில் 33 சதவீத வாக்குகளையே பெற்றுள்ளது. தற்போதைய நிலையிலாவது ரணில் விக்ரமசிங்கவை கட்சியின் தலைமையிலிருந்து விலக வேண்டும். எதியோப்பியா, நேபாளம் மற்றும் தென்னாபிரிக்க நாடுகளில் சிறு காரணங்களை அடிப்படையாகக் கொண்டு அந்த நாடுகளின் அரச தலைவர் மற்றும் தலைமை அமைச்சர் ஆகியோர் பதவி விலகிய சம்பவங்கள் கடந்த இரு வாரகாலத்தில் நிகழ்ந்துள்ளன. உள்ளூராட்சி மன்றத் தேர்தல் முடிவுகளின் காரணமாக இங்கு யாரும் பதவி விலகவில்லை. ஆகவே எதியோப்பியாவை விட எமது நாடு ஜனநாயகத்தில் பின்னிலை வகிக்கின்றதனையே இதன் மூலம் உணரமுடிகிறது - என்றார். (5,61)

## ராஜித -...

போது மகிந்த அணி உறுப்பினர் விமல் வீரவன்ச உரையாற்றுகையில் அமைச்சர் ராஜித சேனாரத்னவை விமர்சித்து கருத்துக்களை முன்வைத்திருந்தார். இதன்போது சுகாதார அமைச்சில் ஊழல் செய்துள்ளதாகவும், முன்னைய ஆட்சியில் மீன்பிடி அமைச்சராக இருந்த சந்தர்ப்பத்தில் கப்பல்களை வாங்கியதாகவும் சபையில் விமர்சித்திருந்தார். இதற்குப் பதிலளித்த அமைச்சர் ராஜித, விமல் வீரவன்ச சாதாரண தரப் பரீட்சையில் சித்தியடையாது நாடாளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தி வருகின்றார். மக்கள் விடுதலை முன்னணியில் அங்கம் வகித்த காலத்தில் ஏனைய உறுப்பினர்கள் உயர்கல்வி கற்றுக் கொண்டு புரட்சிகளில் ஈடுபட்ட நிலையில் விமல் வீரவன்ச வெறுமனே வாய் வார்த்தைகளில் மட்டுமே செயற்பட்டார் என்று விமர்சித்தார். முன்னைய ஆட்சியில் வீடமைப்பு அமைச்சராக செயற்பட்ட காலத்தில் தனது நெருங்கிய உறவினரின் திருமணம் ஒன்றை அரச நிதியில் நடத்தி வைத்ததாகவும், 23 இலட்சம் ரூபா அளவிலான நிதி இதற்காக அரச நிதியில் இருந்து பெற்றுக் கொண்டுள்ளதாகவும் விமர்சித்திருந்தார். இடதுசாரி என்று கூறிக்கொண்டு களவுகளையும் குற்றங்களையும் செய்யும் நபர்களை விமல் வீரவன்ச போன்றவர்களின் மூலமாக அறிந்து கொள்ள முடிந்தது என்று அமைச்சர் ராஜித சேனாரத்ன விமர்சித்திருந்தார். இதன்போது ஒழுங்குப் பிரச்சினை எழுப்பி அமைச்சரின் உரையை குறுக்கிட்ட விமல் வீரவன்ச அமைச்சர் ராஜித சேனாரத்ன முன்வைக்கும் காரணிகள் உண்மைக்குப் புறம்பானவை. அவர் முன்வைக்கும் காரணிகளை ஆதாரபூர்வமாக நிரூபிக்க முடிந்தால் தான் அடுத்த கணமே நாடாளுமன்ற உறுப்புரிமையில் இருந்து நீங்குவதாகவும் குறிப்பிட்டார். (5,61)

## கூட்டு அரசு...

அத்துடன், அரசியல் நெருக்கடி தொடர்பில் விவாதிப்பதற்கு நேரம்கோரியும் அது வாதிட்டது. இதனால் நேற்றைய சபை அமர்வில் பெரும் சர்ச்சை ஏற்பட்டது. சபை நடவடிக்கைகூட 15 நிமிடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்டது. பரபரப்பான அரசியல் சூழ்நிலைகளுக்கு மத்தியில் நேற்று முற்பகல் 10 மணிக்கு சபாநாயகர் கரு ஜயசூரிய தலைமையில் நாடாளுமன்றம் கூடியது.

தினப் பணிகள் முடிவடைந்த பின்னர் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான ஒழுக்கக்கோவை மீதான விவாதம் ஆரம்பமாகவிருந்தது. எனினும், ஒழுங்குப் பிரச்சினையொன்றை எழுப்பிய கூட்டு எதிரணி உறுப்பினரான தினேஸ் குணவர்தன, நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடியால் உறுதியற்ற நிலை உருவாகியுள்ளது. இது பற்றி விவாதம் நடத்தப்பட்டு பிரச்சினைக்குத் தீர்வு காணப்படவேண்டும். என்று கூறினார்.

நாட்டில் நெருக்கடிநிலை குறித்து விவாதிப்பதற்கு 22 நாடாளுமன்ற உறுப்பினர்கள் விருப்பம் தெரிவித்தால் போதும் என்று நாடாளுமன்ற நிலையியல் கட்டளையின் 17 (2)ஆம் பிரிவில் கூறப்பட்டுள்ளது. இது பற்றி சபாநாயகருக்கு எழுத்துமூலம் கடிதமொன்றைக் கையளிக்க வேண்டும் என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இதன்பிரகாரம் அறிக்கையொன்றை தினேஸ் குணவர்தன சபாநாயகரிடம் கையளித்தார்.

**கட்சித் தலைவர்களுடன் பேசுவோம்**

இதற்குப் பதிலளித்த சபாநாயகர், தற்போது அதற்காக நேரம் இல்லை. கட்சித் தலைவர்களுடன் பேசி ஒரு தீர்மானத்துக்கு வருவோம். என்று தெரிவித்தார். குறுக்கிட்ட சபை முதல்வரும் அமைச்சருமான லக்ஸ்மன் கிரியெல்ல, நிலையியல் கட்டளைகளின் 17/2ஆம் பிரிவின் பிரகாரம் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் அறிவிக்காத விவாதத்தை நாடாளுமன்றில் செய்யமுடியாது. இது குறித்து எதிரணியினர் எவ்வித அறிவித்தலையும் விடுக்காது தற்போதை சபையில் அறிக்கையை சமர்ப்பிக்கின்றனர் - என்றார்.

இதற்குப் பதலளித்த சபாநாயகர், நாடாளுமன்றத்தை 15 நிமிடங்கள் ஒத்திவைத்துவிட்டு இந்த விவகாரம் தொடர்பில் தீர்மானிப்போம், என்று அறிவித்தார். அதற்கு அனைவரும் சபையில் இணக்கம் வெளியிட்டதால் கட்சித் தலைவர்கள் கூட்டம் நடத்தப்பட்டது. கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் நேற்று மாலை 4 மணிமுதல் இரவு 7 மணி வரை எதிரணியின் கோரிக்கைக்கமைய நாட்டில் ஏற்பட்டுள்ள சமகால அரசியல் நெருக்கடிகள் குறித்து விவாதிக்கத் தீர்மானிக்கப்பட்டி ருந்தது. 15 நிமிடங்களின் பின்னர் சபாநாயகர் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் எடுத்த முடிவை அறிவித்துவிட்டு சபை நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான ஒழுக்கக்கோவை மீதான விவாதத்தை ஆரம்பிப்பதற்கான அழைப்பை விடுத்திருந்தார்.

**குழப்பம்**

விவாதம் ஆரம்பமாகி அஜித் தனது உரையை முடித்த பின்னர் மீண்டும் ஒழுங்குப் பிரச்சினையொன்றை எழுப்பிய தினேஸ் குணவர்தன, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலர் மகிந்த அமரவீர, கூட்டு அரசில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி அங்கம் வகிக்காது என்று அறிவித்துள்ளார். கூட்டு அரசு தொடருமா அல்லது இல்லையா என்று இரண்டு தடவைகள் நாம் கேள்வி எழுப்பியுள்ளோம். ஆனால், சபாநாயகரால் உரிய பதில் எதுவும் வழங்கப்படவில்லை. கூட்டு அரசிலிருந்து சுதந்திரக் கட்சி விலகி விட்டதால் தற்போது கூட்டு அரசு நடைமுறையில் இல்லை. அமைச்சர்களின் எண்ணிக்கை குறைக்கப்படவேண்டும். ஐக்கிய தேசியக் கட்சி தமக்குள்ள பெரும்பான்மையைக் காட்டி அரசாள பதவிப்பிரமாணம் செய்யவேண்டும் - என்றார்.

**அறிவித்தல் கிடைக்கவில்லை**

இதற்குப் பதிலளித்த சபாநாயகர், எனக்கு கூட்டு அரசு முடிவுக்கு வந்துவிட்டதாக உத்தியோகபூர்வமாக இதுவரை அறிவிக்கப்படவில்லை. நான் இது தொடர்பில் ஆராய்ந்து உரிய பதிலை அளிக்கிறேன் - என்றார். இதன்போது குறிக்கிட்ட சபை முதல்வர் லக்ஸ்மன் கிரியெல்ல, பத்திரிகையில் ஒருவர் கூறியுள்ளமைக்கு எல்லாம் சபாநாயகரால் பதிலளிக்க முடியாது. கூட்டு அரசுக்கு இரண்டு பக்கங்கள் உள்ளன. நாங்கள் இன்னமும் அதில் இருக்கின்றோம். இதில் இரண்டு கட்சிகள் உடன்படிக்கையைக் கைச்சாத்திட்டுள்ளன. கூட்டு அரசு முடிவுக்கு வந்துவிட்டதென ஒரு கட்சி தனியாக தீர்மானிக்க முடியாது - என்றார்.

இதன்போது குறிக்கிட்ட வாசுதேவ நாணயக்கார, இலங்கையர் என்ற அடிப்படையில் அரசியல் ரீதியாக நாடு நெருக்கடிக்கு முகம்கொடுத்துள்ளதென அறிவோம். கூட்டு அரசின் பங்காளிக் கட்சியாகவுள்ள சுதந்திரக் கட்சி, உத்தியோகபூர்வமான தேசிய அரசிலிருந்து சு.க. விலகிவிட்டதாக அறிவிக்கவேண்டும். கூட்டு அரசிலிருந்து ஒரு கட்சி விலக முடியாது என்பது காட்டு சட்டமாகும் - என்றார்.

**பதிலடி**

இதேவேளை, மகிந்த அணியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான பந்துல குணவர்தன, டலஸ் அழகப்பெரும, விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில, நாமல் ராஜபக்ச, கெஹலிய ரம்புக்வெல ஆகியோரும் இங்கு கருத்து வெளியிட்டிருந்தனர். மகிந்த அணிக்குப் பதிலளிக்கும் வகையில் இங்கு கருத்து வெளியிட்ட ஐ.தே.கவின் நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார.

நடந்தது உள்ளூராட்சி சபைத் தேர்தலாகும். அதனால் கூட்டு அரசும், நாடாளுமன்றமும் மாற வேண்டிய அவசியமல்ல. அப்படியானால், 2015ஆம் ஆண்டு நாங்கள் பொதுத் தேர்தலில் வெற்றிபெற்றிருந்தபோது உள்ளூராட்சி சபை ஆட்சியை இவர்கள் பதவி விலகியிருக்க வேண்டும். கூட்;டு அரசை அமைப்பதும் தொடர்வதும் சு.கவுக்கும், ஐ.தே.க.வுக்கும் உள்ள பிரச்சினையாகும். இது இவர்களுக்குள்ள (மகிந்த அணிக்குள்ள) பிரச்சினையல்ல. இவர்கள் இன்று 113 உறுப்பினர்களைக் கொண்ட பெரும்பான்மையைக் காட்டவே நாடாளுமன்றம் வந்தனர். 113ஐக் காட்டவந்தவர்களுக்கு 13ஐக் கூட காட்டமுடியாதுள்ளது. 48 மணித்தியாலயத்தில் அரசை அமைப்போம் என்று தினேஸ் கூறினார். எங்கே அரசை அமைத்தனர்?, என்றார். கூட்டு அரசு முடிவுக்கு வந்துவிட்டது என்று சட்டரீதியான ஆவணம் எதுவும் என்னிடம் இதுவரை சமர்ப்பிக்கப்படவில்லை. சமகால அரசியல் விவகாரங்கள் தொடர்பில் மாலை 4 மணிக்கு விவாதிப்போம். என்று சர்ச்சையை சபாநாயகர் முடிவுக்குக் கொண்டுவந்திருந்தார். (5)


## மரண அறிவித்தல்

### செல்லையா நந்தகுமார்

*(தலைமை நிர்வாக அதிகாரி - MCAI Campus, கணினி கல்வி நிலையம், கல்வியங்காடு)*



திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் கேசாவில் பிள்ளையார் கோவில், வண்ணார்பண்ணையை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா நந்தகுமார் நேற்று (19.02.2018) திங்கட் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா பாக்கியம் தம்பதிகளின் அன்பு மகனும் பிறேமாவதி, சந்திரவதி (குஞ்சு), கருணாகரன் (இந்தியா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் முத்துலிங்கம் சிவாந்தி ஆகியோரின் அன்பு மைத்துனரும் சதீஸ் (இந்தியா), பிரதீஸ் (இந்தியா), மேனகா, குபேரன் (நோர்வே) ஆகியோரின் சித்தப்பாவும் பிரியதர்சினி (நோர்வே), பிருதிவிராஷ் (ராஜ் ஸ்ரூடியோ ஆறுகால்மடம்) ஆகியோரின் அன்பு மாமனும் வினோஜன், விவேகா, சாரன் (இந்தியா), ஷீபா (இந்தியா) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (21.02.2018) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


தகவல்: பிரேமாவதி, சந்திராவதி (சகோதரிகள்)

077 2719477



## மரண அறிவித்தல்

பிறப்பு 29 . 04 . 1929



இறப்பு 09 . 02 . 2018

### பொன்னுத்துரை யோகலிங்கம்

**(இளைப்பாறிய உதவி இயக்குநர், பொதுத் திறைசேரி, கொழும்பு, இலங்கை)**

சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும், Toronto கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை யோகலிங்கம் கடந்த 09.02.2018 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை - செல்லம்மா தம்பதிகளின் அன்புமகனும், காலஞ்சென்றவர்களான வெற்றிவேலு - பாக்கியம்தம்பதிகளின்பாசமிகு மருமகனும், புவனேஸ்வரியின் பாசமிகு கணவரும், ராஜ்குமார் (ஆஸ்திரேலியா), தக்ஷினி (கனடா) ஆகியோரின்பாசமிகுதகப்பனாரும், கௌரி, இரவீந்திரா ஆகியோரின் அன்பு மாமனாரும், திவ்யன், வைஸ்ணவி, மகிஷா, மதுரன் ஆகியோரின் அன்புப் பேரனும், கனகராஜா (கனடா), தேவி (கனடா) ஆகியோரின் சகோதரரும், தயா (கனடா), காலஞ்சென்றவர்களான தேவதாசன் (இலங்கை), கனகலிங்கம் (கனடா) மற்றும் கனகேஸ்வரி சுப்பிரமணியம் (ஆஸ்திரேலியா), பரமேஸ்வரி வைத்திலிங்கம் (கனடா), இராஜலிங்கம் (இங்கிலாந்து) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (21.02.2018) புதன்கிழமை காலை 8 மணியளவில் 71/2, 37 ஆம் ஒழுங்கை, வெள்ளவத்தையில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 11.30 மணியளவில் பொரளை கனத்தை பொது மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**71/2, 37ஆம் ஒழுங்கை, வெள்ளவத்தை.**

**தகவல் குடும்பத்தினர்.**

0(01.17)

# பெண்களுக்கு குங்குமப்பூ தரும் அழகு

எந்தப் பூவிலும் இல்லாத் குணங்கள் குங்குமப்பூவில்உள்ளன. உடல்நிறத்தை வெள்ளையாக மாற்றக் கூடிய அற்புதக் குணம் இதில் நிறைந்து காணப்படுகிறது. சிகப்பழகைப் பெறத் துடிக்கும் பெண்மணிகள் முக அழகு கிரீம்களை தேட வேண்டியதில்லை. குங்குமப்பூ ஒன்றே போதும்.

குங்குமப்பூவை தூளாக்கி வைத்துக் கொண்டு அதில் தினமும் ஒரு சிறங்கை அளவு எடுத்துக் கொள்ளவும். அதில் சில சொட்டுக்கள் பால் விட்டு கலந்து குழைத்துக் கொள்ளவும். இந்தக் கலவையை முகத் தில் பூசி வர முகத்தில் படர்ந்துள்ள கருமை நிறம் குறைவதை கண் கூடாகக் காணலாம்.



குங்குமப்பூவை உரசி ஒரு மேசைக் கரண்டி தண்ணீர் விட்டு சிறிது நேரம் ஊற விடவும். குங்குமபூவின் நிறம் முழுக்க நீரில் ஊறியதும் சிறிது வெண்ணை கலந்து நன்றாக குழைக்கவும். இந்த கலவையை தினமும் முகத்திலும், உதடுகளிலும் பூசிவர, உதடுகள் செவ்வாழை நிறம் பெறும். உதடுகளின் வறட்சி இருந்த இடம் தெரியாமல் ஓடி விடும். முகத்தில் உள்ள கரும்புள்ளிகளும் மறைந்து விடும்.

இந்தக் கலவையை நகங்கள் மீது பூசி வர நகங்களும் இயல்பான நிறம் பெறும். நக சுத்தி வந்து அழுகிப் போன நகங்கள், உடைந்து போன நகங்கள் போன்றவற்றை குங்குமப்பூ வெண்ணை கலவையானது சீர்படுத்தி இழந்த அழகை மீட்டுத்தரும். முகத்திற்கு வசீகரத்தை தரு வது கவர்ச்சி மிகு கண்கள்தான் அந்த கண்களுக்கு பளிச் அழகைத் தருவது அடர்த்தியான இமைகள் பட்டாம்பூச்சி போல படபடக்கும் இமைகள் அமைய குங்குமப்பூ உதவுகிறது.


நக சுத்தி வந்து அழுகிப் போனநகங்கள், உடைந்து போன நகங்கள் போன்றவற்றை குங்கு மப்பூ வெண்ணை கலவையானது சீர்படுத்தி இழந்த அழகை மீட்டுத்தரும்.

சில பெண்கள் நல்ல நிறமாக இருப்பார்கள். ஆனால் உதடுகள் மட்டும் கருமை படர்ந்து அசிங்கமாக இருக்கும். இப்படிப்பட்ட பெண்கள் குங்குமப்பூவை பயன்படுத்தினால் அழகு தேவதையாக மாறி விடுவார்கள்.

## கடலுணவின் நேற்றைய விலை நிலவரம்



| | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித்துறை | சாவகச்சேரி |
|---|---|---|---|---|
| இறால் | 900 | 900 | 1000 | 900 |
| நண்டு | 400 | 500 | 500 | 400 |
| கணவாய் | 700 | 800 | 800 | 1000 |
| பாரை | 600 | 600 | 700 | 700 |
| சுறா | 600 | 700 | 600 | 1000 |
| சீலா | 500 | 400 | 400 | 500 |
| விளை | 500 | 450 | 450 | 400 |
| முரல் | 400 | 400 | 400 | 400 |
| கும்பிளா | 400 | 350 | 400 | – |
| கிளாக்கன் | 800 | – | 500 | 600 |
| ஓரா | 400 | 300 | 450 | – |
| திரளி | 200 | 200 | 200 | 200 |
| நகரை | 200 | 300 | 400 | 300 |
| சூடை | 150 | 150 | 120 | 150 |
| ஒட்டி | 200 | 200 | 300 | – |
| திருக்கை | 300 | 300 | 400 | 300 |
| மதனம் | 200 | 250 | 250 | – |
| கொய் | 100 | 100 | 80 | 100 |
| பாலை | 250 | 300 | 500 | 400 |
| வாளை | 300 | 250 | 400 | 4000 |



## இது புதுசு

பெண்களுக்கான காதணி வகைகள் சில சந்தைக்கு அறிமுகமாகியுள் ளன. இவை 500 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்றன.

# குடல்புண்ணை குணமாக்கும் உணவுகள்

'அல்சர்' என்னும் குடல்புண்ணால் பலரும் அவதிப்படுகின்றனர். அனைத்து வயதினரையும் பாதிக்கும் ஒன்றாக அல்சர் உள்ளது.

வேளாவேளைக்குச் சரியாக உணவு உண்ணாமல் தள்ளிப்போடுவது குடல்புண்ணுக்கு முக்கியக் காரணமாகிறது. சரியான நேரத்தில் சாப்பிடாதபோது, இரைப்பையில் சுரக்கும் சமிபாட்டுக்கான அமிலங்கள் புண்களை உண்டாக்குகின்றன.

இதனால் கடுமையான வயிற்றுவலி ஏற்படும். தொடக்கத்திலேயே கவனிக்கவில்லை என்றால் மோசமான பாதிப்புக்கு உள்ளாக நேரிடும். சில எளிய வழிமுறைகளின் மூலமாகவே ஆரம்ப நிலை குடல்புண்ணை குணமாக்கலாம்.

முட்டைக்கோஸ், பாகற்காய் மற்றும் முருங்கைகாயை அடிக்கடி உணவில் சேர்த்து வந்தால் குடல்புண் குணமாகும். தினமும் சாதத்தில் தேங்காய்ப் பால் ஊற்றிச் சாப்பிட்டு வரலாம்.

தினமும் ஆப்பிள் பழச்சாறு, அகத்திக் கீரைசாறு, பிற்றூட் சாறு குடித்து வந்தாலும் அல்சர் பிரச்சினையில் இருந்து விடுபடலாம். நெல்லிக்காய்ச் சாறில் தயிர் சேர்த்து குடித்து வந்தாலும் நிவாரணம் கிடைக்கும்.

தினமும் காலையில் வெதுவெதுப்பான தண்ணீரில் இரண்டு கரண்டி தேனை ஊற்றிக் குடித்தால், அல்சரால் ஏற்படும் வயிற்று எரிச்சல் சரியாகும். பக்ரீரியா எதிர்ப்புப் பொருள் நிறைந்துள்ள வெள்ளைப்பூண்டை தேன் கலந்து சாப்பிடலாம். வெந்தயம் கலந்த தேனீர், கற்றாழைச் சாறு ஆகியவை குடல்புண்ணுக்கு ஒரு நல்ல தீர்வாகும். குறிப்பாக அதிகளவு தண்ணீர் பருக வேண்டும்.

## வடக்கில்...

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை ஒரு சிலர் கருத்துக் கணிப்பாக கருதுகின்றனர். மகிந்த அணி இதனை கருத்து கணிப்பாகவே கருதியது. அவ்வாறாயின் இதனை நாம் கருத்துக் கணிப்பாகக் கருதினால் இதில் மகிந்த அணி தோல்வியுற்றுள்ளது. இது கிராமத்துக்கான தேர்தலாகும். இந்தத் தேர்தலில் ஒவ்வொரு கட்சியும் வெவ்வேறு கதாபாத்திரங்களின் ஊடாக போட்டியிட்டது. இதனை ஒருபோதும் கருத்துக் கணிப்பாகக் கருத முடியாது.

ஆளும் ஐக்கிய தேசியக் கட்சியும் சுதந்திரக் கட்சியும் அரசு எம்மிடம் உள்ளமையினால் எமக்கு ஆணை வழங்க வேண்டும் என்றனர். ஒரு தரப்பினர் தற்போதைய போக்குச் சரியல்ல. ஆகவே மீண்டும் எமக்குத் தாருங்கள் என்று கோரினர். நாம் இவர்களினால் எதுவும் செய்ய முடியாது ஆகவே ஆணை எமக்குத் தருமாறு கோரினோம். இந்தத் தேர்தலில் பிரதான கட்சிகள் இரண்டும் பெரிய தோல்வியை சந்தித்துள்ளன. வடக்கில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு வெற்றி பெற்றாலும் வடக்கில் இனவாதிகள் முகாம் பலமாகி வருகின்றது. இது பெரும் பாதிப்பாகும். ஆகவே இதனை சிங்கள மக்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

2015ஆம் ஆண்டு மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை. அதற்கு மாறாக அரச தலைவர் கதிரையைக் கைப்பற்றுவதற்காக திருட்டுக் கும்பலுடன் 'டீல்' வைத்து கொண்டு அரச தலைவரும், தலைமை அமைச்சரும் செயற்பட்டனர். திருடர்களைப் பாதுகாத்தனர்.

அரச தலைவரும், தலைமை அமைச்சரும் மக்களின் பிரச்சினைகளை மறந்து கதிரைகள் மீது ஆசைப்பட்டனர். இந்த கதிரை மீதான போராட்டமே அரசின் தோல்விக்குக் காரணமாகும். குறிப்பாக அவன்கார்ட் விவகாரத்தில் கோத்தபாய ராஜபக்சவிற்கு எதிராக வழக்கு தாக்கல் செய்த போது அதற்காக திலருக்சி விக்கிரமசிங்கவை பதவி நீக்கினர். இதற்கு எந்த காரணத்தையும் அரசு இதுவரை வழங்கவில்லை. இனிமேல் ரணில் விக்கிரமசிங்கவினால் வாழ்நாளில் அரச தலைவராக முடியாது. அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கு அரச தலைவர் கதிரையில் இனிமேல் அமர முடியாது. ஆகவே அரச தலைவர் கதிரை மீதான போராட்டத்தைக் கைவிட்டு உடன் அரச தலைவர் முறைமையை நீக்குங்கள். விட்ட தவறுகளைத் திருத்திக்கொண்டு வாக்குறுதிகளை நிறைவேற்றுங்கள். நாம் தொடர்ந்து 2015 ஆண்டு மக்களின் ஆணையின் மீதே நிலைத்துள்ளோம். அதற்காக மக்கள் விடுதலை முன்னணி பூரண ஆதரவு வழங்கும் என்றார். (5,31)

## பேசாமல்...

மாறு அரச தலைவர் மைத்திரிபாலவிடம் கோருகின்றேன். தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடிக்கு நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்தித் தீர்வு காணாமல் வெறுமனே பெயரளவில் அரச தலைவர் அதிகாரத்தில் இருப்பது வேடிக்கையாக உள்ளது.

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தனது நிறைவேற்று அதிகாரத்தை பயன்படுத்தாமல் வெறும் நிர்வாகியாகவே செயற்படுகின்றமை கண்டிக்கத்தக்கது. நாட்டின் அரசியல் நெருக்கடி தொடர்பில் உடனடி தீர்மானத்தை அரச தலைவர் மேற்கொள்ளாவிட்டால் மக்களை ஒன்றுதிரட்டி பெரிய போராட்டத்தை நல்லாட்சிக்கு எதிராக மேற்கொள்ளவேண்டியிருக்கும் என்றார். (5)

## மரக்கறிகளின் நேற்றைய விலை

| மரக்கறிகள் | சாவகச்சேரி | சுன்னாகம் | மருதனார்மடம் | நெல்லியடி | திருநெல்வேலி |
|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 60 | 50 | 30 | 60 | 30 |
| கத்தரி | 50 | 80 | 50 | 50 | 50 |
| மரவள்ளி | 50 | 50 | 30 | 40 | 50 |
| பயிற்றை | 120 | 150 | 100 | 120 | 120 |
| பாகல் | 80 | 200 | 120 | 120 | 160 |
| க.கிழங்கு | 60 | 60 | 50 | 80 | 40 |
| பெ.வெங்காயம் | 70 | 140 | 120 | 100 | 90 |
| சி.வெங்காயம் | 120 | 150 | 100 | 120 | 120 |
| பூசணி | 40 | 50 | 50 | 50 | 40 |
| தக்காளி | 50 | 80 | 40 | 50 | 40 |
| வாழைக்காய் | 60 | 70 | 70 | 60 | 60 |
| கீரை | 20 | 30 | 20 | 10 | 20 |
| பொன்னாங்காணி | 40 | 40 | 35 | 40 | 20 |
| ப.மிளகாய் | 70 | 120 | 80 | 80 | 60 |
| புடோல் | 70 | 70 | 70 | 80 | 40 |
| கோவா | 60 | 70 | 70 | 80 | 40 |
| வெண்டி | 80 | 100 | 100 | 80 | 80 |
| போஞ்சி | 120 | 150 | 0100 | 100 | 100 |
| லீக்ஸ் | 160 | 200 | 170 | 200 | 160 |
| தேங்காய் | 75 | 80 | 80 | 100 | 80 |
| உ.கிழங்கு | 60 | 60 | 60 | 60 | 60 |
| தேசிக்காய் | 40 | 40 | 40 | 30 | 40 |
| வல்லாரை | 20 | 20 | 30 | 20 | 10 |
| கறிமிளகாய் | 80 | 180 | 160 | 100 | 70 |
| கரட் | 80 | 150 | 80 | 120 | 120 |
| முருங்கைக்காய் | 600 | - | 600 | 400 | 400 |

## மரண அறிவித்தல்

### திருமதி மீனாம்பிகை சந்திரகாந்தன் (மீனாம்பு)



குப்பிளான் தெற்கு, ஏழாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி. மீனாம்பிகை சந்திரகாந்தன் நேற்று (19.02.2018) காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நடராஜா பார்வதி தம்பதியரின் மூத்தபுதல்வியும் காலஞ்சென்றவர்களான இராசையா செல்லமுத்து தம்பதியரின் அன்புமருமகளும் இராசையா சந்திரகாந்தன் (ஓய்வு பெற்ற பரிசாரகர், பிரதேச வைத்திய சாலை, தெல்லிப்பழை) அவர்களின் அன்புமனைவியும் கோகுலகாந் (ஆசிரியர், யாழ். மகாஜனக்கல்லூரி), றஜீவ்காந், (பொலிஸ் உத்தியோகத்தர், மன்னார்), செல்வகாந், மயூரகாந், வக்சலா ஆகியோரின் அன்புத்தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.02.2018) செவ்வாய்க்கிழமை பி.ப.2.30 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக குப்பிளான் காடாகரம்பை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: கணவர்.

# ஏமாற்றமே!




கட்டார் ரென்னிஸ் தொடரில் காயமடைந்து வெளியேறியமை மிகப்பெரும் ஏமாற்றமே என்று தெரிவித்தார் பிரபல வீராங்கனை சிமோனா கேலப்.

காலிறுதியில் வெற்றிபெற்று அரையிறுதிக்குத் தகுதி பெற்றுவிட்ட நிலையில் கேலப் விலகியிருந்தார். இதையடுத்தே தனது ஏமாற்றத்தை அவர் பதிவு செய்தார்.

"கட்டார் ரென்னிஸ் தொடரில் தொடர்ச்சியாக சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்தி வந்தேன். கிண்ணத்தைக் கைப்பற்ற முடியும், பெரியளவில் சாதிக்க இயலும் என்ற எதிர்பார்ப்பு ஆழமாக இருந்தது. எனினும் காயம் காரணமாக விலகியமை பெரும் ஏமாற்றமே. காயம் பெரியளவில் இல்லை. தற்காப்புக்காகத்தான் விலகினேன். ஆதலால் விரைவில் மீண்டு வருவேன்" என கேலப் மேலும் தெரிவித்தார். (ம)

# நவஜீவன்ஸ் அபாரம்

யாழ்ப்பாணம், பெப். 20

சிறிஅம்பாள் விளையாட்டுக் கழகத்தின் 49ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்படும் கால்பந்தாட்டத் தொடரில் உடுப்பிட்டி நவஜீவன்ஸ் அணி கிண்ணம் வென்றது.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற இந்த இறுதியாட்டத்தில் கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதியது. 2:0 என்ற கோல் கணக்கில் நவஜீவன்ஸ் அணி வெற்றிபெற்றது.

உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழக அணியின் ரஜீவன் சிறந்த கோல் காப்பாளராகத் தெரிவானர். அதே அணியின் சஞ்சீவன் ஆட்ட நாயகனாகத் தெரிவானார். கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் அணியின் பா. சுதாகரன் தொடராட்ட நாயகனாகத் தெரிவானார். (ம-23)


# வில்லியர்ஸுக்கு மீண்டும் காயம்

## ரி-20 தொடரில் விலகல்

காயம் காரணமாக இந்தியாவுக்கு எதிராக எஞ்சியுள்ள இரண்டு ரி-20 ஆட்டங்களில் இருந்தும் விலகினார் அதிரடி வீரர் வில்லியர்ஸ்.

இந்திய அணி தென்னாபிரிக்காவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளது. இந்த இரண்டு அணிகளுக்கும் இடையிலான டெஸ்ட் தொடரின்போது காயமடைந்தார் வில்லியர்ஸ். இதனால் ஆறு ஆட்டங்களைக் கொண்ட ஒருநாள் தொடரின் முதல் மூன்று ஆட்டங்களிலும் அவர் களமிறங்கவில்லை. இறுதி மூன்று ஆட்டங்களிலும் விளையாடினார். மூன்று ஆட்டங்களைக் கொண்ட ரி-20 தொடர் நேற்றுமுன்தினம் ஆரம்பமானது. இந்த ஆட்டத்திலும் காயமடைந்ததை அடுத்து மீண்டும் விலகினார் வில்லியர்ஸ். வில்லியர்ஸின் விலகல் தென்னாபிரிக்க அணிக்குப் பெரும் பின்னடைவே.

தென்னாபிரிக்க அணியின் அனுபவ வீரர்களில் பெரும்பாலானவர்கள் தற்போது காயமடைந்துள்ளனர். வில்லயர்ஸ், அணித் தலைவர் பிளாசிஸ், வேகப்பந்து வீச்சாளர் ஸ்ரெய்ன் என்று இந்தப் பட்டியல் செல்கிறது. (ம)




# ஆஸியிலும் அசத்தும் குல்தீப், சாகல் இணை

## நம்பிக்கை தெரிவித்தார் சப்பல்

தற்போது வீசிக்கொண்டிருப்பது போன்று தொடர்ச்சியாகப் பந்துவீசினால் ஆஸ்திரேலியாவிலும் குல்தீப் யாதவ், சாகல் இணை அசத்தும் என்று தெரிவித்தார் ஆஸ்திரேலிய அணியின் முன்னாள் வீரர் இயன் சப்பல்.

தென்னாபிரிக்க வீரர்களை சுழல்பந்து வீச்சாளர்கள் திணறடிப்பது இதுவொன்றும் புதிதல்ல. குல்தீப், சாகல் இருவரும் இணைந்து தென்னாபிரிக்கா மீது மிகப்பெரிய பதற்றத்தைத் திணித்தனர். தென்னாபிரிக்காவிலேயே அவர்களுக்குப் பெரிய் சிம்ம சொப்பனமாக இருவரும் திகழ்ந்தனர். தென்னாபிரிக்காவில் பலவீனங்களை கருணையற்றுப் பயன்படுத்திக் கொண்டனர். இருவரும் தைரியமானவர்கள், சாதுரியமானவர்கள் பந்தை எப்போது மேலே தூக்கி வீச வேண்டும் என்பதை அறிந்திருக்கின்றனர். இதேபோன்று அவர்கள் தொடர்ச்சியாக பந்துவீசினால் ஆஸ்திரேலியாவிலும் அவர்களால் சாதிக்க முடியும்" என சப்பல் மேலும் தெரிவித்தார். (ம)



# தனிப்பட்ட போட்டிகள் எவருடனும் இல்லை

## கோக்லி வெளிப்படை

இந்திய அணியின் வெற்றிக்காக அன்றாடம் பாடுபடுகிறேன். ஆனால் எவருடனும் தனிப்பட்ட போட்டியென்று எனக்கு இல்லை. ஊடகங்கள் அவ்வாறான பிம்பத்தை வெளிப்படுத்துவதை என்னால் ஏற்றுக்கொள்ள முடியாது என்று தெரிவித்தார் இந்திய அணியின் தலைவர் கோக்லி.

தென்னாபிரிக்காவுக்கு எதிராக நேற்றுமுன்தினம் நடைபெற்ற முதலாவது ரி-20 ஆட்டத்தில் வெற்றிபெற்ற பின்னர் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது, "நான் யாருடனும் போட்டிபோட விரும்பவில்லை. ஒவ்வோர் ஆட்டத்துக்கு முன்பும் நான் எப்படித் தயாராகிறேன், எனது நெறிமுறைகள் என்ன, அந்த குறிப்பிட்ட நாளில் நான் எப்படி உணர்கிறேன் என்பதே முக்கியம். நல்ல மனநிலையில் இருக்க வேண்டும் என்பதே எனது நோக்கமாக இருக்கும்.




எனக்கு எந்தப் பட்டமும் தேவையில்லை. எந்தத் தலைப்புசெய்தியிலும் இடம்பெறத் தேவையில்லை. களத்தில் சென்று என் வேலையைச் செய்கிறேன். எழுதுபவர்கள் எழுதுவது அவர்கள் விருப்பம். எந்தப் பட்டம் வைத்தும் என்னை அழைக்க வேண்டாம். இது எனது வேலை. என் கடமையை நான் செய்ய வேண்டும். அணி நிர்வாகம் என்னைப் பற்றி என்ன நினைக்கிறது என்பது தான் முக்கியம். அணி வீரர்களைப் பற்றி நான் நினைப்பதும், அவர்கள் என்னைப்பற்றி என்ன நினைக்கிறார்கள் என்பதும்தான் எனக்கு முக்கியம். நாளுக்கு நாள் தலைப்புச் செய்திகள் மாறும். அதலால் அதன் பின்னால் செல்பவன் நானல்ல" - என்றார். (ம)

# ஹத்துருசிங்கவால் பங்களாதேஷின் நுட்பங்கள் அம்பலம் இலங்கையின் வெற்றிக்கு அதுவே காரணம் என விசனம்

பங்களாதேஷுக்கு எதிரான ரி-20, டெஸ்ட், ஒருநாள் தொடர்களை இலங்கை அணி கைப்பற்றியமைக்கு, பங்களாதேஷின் நுட்பங்கள் அனைத்தும் இலங்கையின் தலைமைப் பயிற்சியாளர் ஹத்துருசிங்கவால் அம்பலப்படுத்தப்பட்டதாலேயே என்று பன்னாட்டு ஊடகங்கள் கருத்துத் தெரிவித்துள்ளன.

பங்களாதேஷ் அணியின் தலைமைப் பயிற்சியாளராகச் செயற்பட்டுவந்த ஹத்துருசிங்க கடந்த சில வாரங்களுக்கு முன்னரேயே தனது பதவியில் இருந்து விலகி இலங்கை அணியின் தலைமைப் பயிற்சியாளராகப் பொறுப்பேற்றார். இலங்கை அணியைப் பொறுப்பேற்ற பின்னர் ஹத்துருசிங்க சந்தித்த முதல் தொடர் பங்களாதேஷுக்கு எதிராகவே அமைந்திருந்தது.

இந்தத் தொடரில் இலங்கை அணி வெற்றிபெற்றதன் பின்னணியில் ஹத்துருசிங்க பங்களாதேஷின் பலம், பலவீனங்களை பங்களாதேஷ் வீரர்களுக்கு எடுத்துரைத்தமையே உள்ளது என்று சில ஊடகங்கள் விமர்சித்துள்ளன.

ஹத்துருசிங்கவும் இந்தக் கருத்துக்களை ஏற்றுக்கொள்ளும்படியாக கருத்தொன்னை வெளியிட்டுள்ளார். "ஆம். உண்மையைக் கூற வேண்டுமென்றால் வங்கதேச வீரர்கள் பற்றிய தகவல்கள் உதவியது. சிலவீரர்களுக்கு எதிராகத் திட்டங்களை வகுக்க முடிந்தது. நெருக்கடியில் அவர்கள் எப்படி வினையாற்றுவார்கள் என்பது எங்களுக்குத் தெரிந்திருந்தது. நான் எதையும் விட்டுவைக்கவில்லை. இது எனக்கு மகிழ்ச்சியையே அளிக்கிறது. இந்தத் தொடர் எனக்கு தனிப்பட்ட முறையில் மகிழ்ச்சியளிக்கும் தொடராக அமைந்தது. ஆனாலும் நான் பங்களாதேஷை விட்டு வந்தாலும் அவர்கள் சிறப்பாக விளையாட வேண்டும் என்றே விரும்பினேன். அவர்களின் முன்னேற்றத்தில் எனக்கு ஒரு கண் இருந்து கொண்டுதான் இருக்கிறது" என ஹத்துருசிங்க தெரிவித்துள்ளார். (ம)



# மாகாணமட்ட கால்பந்தாட்டத் தொடரின் இறுதியில் பண்டத்தரிப்பு பெண்கள் பங்கேற்காததால் சர்ச்சை

யாழ்ப்பாணம், பெப். 20

யாழ்ப்பாண பாடசாலைகள் விளையாட்டுச் சங்கம் நடத்திய மாகாண மட்ட 20 வயது பெண்களுக்கான கால்பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டத்தில் பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை அணி நேற்றுப் பங்கேற்கவில்லை. மாகாண மட்டத் தொடரொன்றின் இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்ற போதிலும் அந்த அணி ஆட்டத்துக்குச் சமூகம் தராமையானது அதிர்வலைகளையும் சர்ச்சைகளையும் தோற்றுவித்துள்ளது. அந்த அணியின் அசமந்தப் போக்குத் தொடர்பில் விளையாட்டு ஆர்வலர்கள் பலரும் மைதானத்தில் தமது விசனத்தைத் தெரிவித்துச் சென்றனர்.

யாழ்ப்பாண பாடசாலைகள் விளையாட்டு சங்கம் நடத்திய இந்தத் தொடரின் இறுதியாட்டம் யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நேற்று இரவு 8 மணியளவில் நடைபெறவிருந்தது. இறுதியாட்டத்தில் பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தர பாடசாலை அணியை எதிர்த்து தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி அணி மோதவிருந்தது. பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை அணி ஆட்டத்துக்கு சமூகம் தந்திருக்கவில்லை. இதையடுத்து மகாஜனக் கல்லூரி கிண்ணத்தைப் பெற்றுக்கொண்டது.

**பாடசாலை அதிபரின் கருத்து**

இது தொடர்பாக பாடசாலை அதிபர் திருமதி தேவராஜாவுடன் தொடர்பு கொண்டு கேட்ட போது, "பாடசாலை மாணவர்கள் இந்த இறுதியாட்டத்தில் பங்குபற்றாமைக்கான காரணத்தை வெளிப்படையாக அறிவிக்க முடியாத நிலையில் உள்ளோம்' என்று தெரிவித்தார்.

வலிகாமம் வலய கல்வி பணிப்பாளர், பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தர பாடசாலை உத்தியோகத்தர்களுக்கான கல்வி அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடலொன்றை நேற்று நடத்தியிருந்தார். அதில் வைத்து மாணவர்களின் கல்வி நிலை வீழ்ச்சி அடைவதனால் கால்பந்தாட்டத்தை நிறுத்துமாறும் இன்னும் சில பாடசாலைகள் கபடி போன்ற பெண்களுக்கு ஒத்துவராத விளையாட்டுக்களில் ஈடுபட்டு வருவதாகவும் சுட்டிக் காட்டியதாகவும் 'உதயன்' செய்தியாளருக்கு தெரிவிக்கப்பட்டது.

**வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளரின் கருத்து**

இதையடுத்து, வலிகாமம் வலய கல்வி பணிப்பாளர் சந்திரராஜாவுடன் தொடர்பு கொண்டு கேட்ட போது, "மாணவர்களின் கல்வி வீழ்ச்சி அடைவதாக கலந்துரையாடியதாகவும் அதில் கால்பந்தாட்டம் போன்ற விளையாட்டுக்களை குறையுங்கள் என்று வலியுறுத்தினேன்" என்று தெரிவித்தார். இந்தப் பதில் வந்ததும் தொலைபேசி அழைப்பு துண்டிக்கப்பட்டது. மேலதிக விளக்கங்களைப் பெறுவதற்காக அழைப்பை ஏற்படுத்திய போதும் அவர் பதிலளிக்கவில்லை.

**பெற்றோரின் கருத்துக்கள்**

இது தொடர்பாக பெற்றோர் கருத்துத் தெரிவிக்கையில், "மாலை 4 மணிக்கு எமது பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்பினோம். ஆனால் பிள்ளைகள் 6 மணியளவில் வீட்டிற்கு அழுதபடி வந்தார்கள். இனி மேல் கால்பந்தாட்டம் விளையாட முடியாதாம் இது பெண்களுக்குரிய விளையாட்டு அல்லவாம் எனக்கூறி அழுதனர். எம்மில் சிலர் யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் காத்திருந்து பிள்ளைகளின் அணி வராததையடுத்து ஏமாற்றமடைந்தோம். இளவாலை மக்கள் மத்தியில் கால்பந்தாட்டம் குருதியில் ஊறியுள்ளது. எங்களுக்கு ஏனைய விளையாட்டுக்களைவிட கால்பந்தாட்டமே மிக விருப்பமான விளையாட்டு. என்ன காரணத்தால் நிறுத்தப்பட்டுள்ளதாக எமக்கு தெரியவில்லை. நாளை (இன்று) காலை பாடசாலை அதிபரைச் சந்திக்கவுள் ளோம். இதற்கு பாடசாலை நிர்வாகம் ஒத்துழைக்காவிடில் கால்பந்தாட்டம் விளையாட அனுமதிக்கக் கூடிய பாடசாலையில் பிள்ளை களைச் சேர்ப்போம்' என்று அவர்கள் தெரிவித்தனர். (ம-422)

## வடமராட்சி கால்பந்தில் இன்றைய மோதல்கள்

வடமராட்சி கல்வி வலய பாடசாலைகளுக்கு இடையிலான ஆண்களுக்கான கால்பந்தாட்டத் தொடர் நேற்று முதல் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது. இந்தத் தொடரில் இன்று இடம்பெறவுள்ள ஆட்டங்கள் சிலவற்றின் விவரங்கள்.

**16வயப் பிரிவு**

தேவரையாளி இந்து கல்லூரி மைதானத்தில் இன்று இடம்பெறவுள்ள 16 வயதுக்கு உட்பட்ட பிரிவில் உடுத்துறை மகா வித்தியாலய அணியை எதிர்த்து மணற்காடு றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையும், வல்வை சிவகுரு அணியை எதிர்த்து பொலிகண்டி இந்து தமிழ் கலவன் பாடசாலை அணியும், நெல்லியடி மத்திய கல்லூரி அணியை எதிர்த்து இமையாணன் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை அணியும், பருத்தித்துறை ஹாட்லிக்கல்லூரி அணியை எதிர்த்து கொற்றாவத்தை அரசினர் தமிழ் கலவன் பாடசாலை அணியும், தேவரையாளி இந்து கல்லூரி அணியை எதிர்த்து மணற்காடு றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை அணியும், பொலிகண்டி இந்து தமிழ் கலவன் பாடசாலை அணியை எதிர்த்து உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரி அணியும் மோதவுள்ளன.

**18 வயதுப் பிரிவு**

குஞ்சர்கடை கொலின்ஸ் விளையாட்டு கழக மைதானத்தில் இடம்பெறவுள்ள 18 வயதுக்கு உட்பட்ட பிரிவில் தேவரையாளி இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து அல்வாய் வடக்கு றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை அணியும், சிதம்பர கல்லூரி அணியை எதிர்த்து மருதங்கேணி இந்து தமிழ் கலவன் பாடசாலை அணியும், வல்வை சிவகுரு அணியை எதிர்த்து உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரி அணியும், உடுத்துறை மகா வித்தியாலய அணியை எதிர்த்து இமையாணன் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை அணியும், அல்வாய் வடக்கு றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை அணியை எதிர்த்து இமையாணன் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை அணியும், அல்வாய் வடக்கு றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை அணியை எதிர்த்து கொற்றாவத்தை அரசினர் தமிழ் கலவன் பாடசாலை அணியும், மருதங்கேணி இந்து தமிழ் கலவன் பாடசாலை அணியை எதிர்த்து பருத்தித் துறை ஹாட்லிக் கல்லூரி அணியும் மோதவுள்ளன.

**20 வயதுப் பிரிவு**

அல்வாய் மனோகரா விளையாட்டு கழக மைதானத்தில் இடம்பெறவுள்ள 20 வயதுக்கு உட்பட்ட பிரிவில் தேவரையாளி இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து சிதம்பராக் கல்லூரி அணியும், உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரி அணியை எதிர்த்து வேலாயுதம் மகா வித்தியாலய அணியும், தேவரையாளி இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து பருத்தித் துறை ஹாட்லிக் கல்லூரி அணியும், உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் க்ல்லூரி அணியை எதிர்த்து நெல்லியடி மத்திய கல்லூரி அணியும், சிதம்பரா கல்லூரி அணியை எதிர்த்து உடுத்துறை மகா வித்தியாலய அணியும், வேலாயுதம் மகா வித்தியாலய அணியை எதிர்த்து விக்னேஸ்வரா கல்லூரி அணியும் மோதவுள்ளன.



## வட மாகாணத்தில் மகாஜனா சம்பியன்

யாழ்ப்பாணம், பெப். 20

யாழ்ப்பாண மாவட்ட பாடசாலைகள் விளையாட்டுச் சங்கம் நடத்திய கால்பந்தாட்டத் தொடரில் 20 வயதுப் பெண்கள் பிரிவில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி சம்பியனானது.

யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நேற்று இரவு 8 மணியளவில் இந்த ஆட்டம் நடைபெறுவதாக இருந்தது. மகாஜனக் கல்லூரியுடன் மோதவிருந்த பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை அணி மைதானத்துக்கு சமூகம் தராததை அடுத்து மகாஜனா கிண்ணம் வென்றது. (ம-23-422)

## கூடைப்பந்தாட்ட தொடரில் நண்பர்கள் சம்பியன்

யாழ்., பெப். 20

நல்லூர் பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட கிராம சேவகர் பிரிவுகளுக்கு இடையிலான விளையாட்டு விழாவின் ஓர் அங்கமான பெண்களுக்கான கூடைப்பந்தாட்டத் தொடரில் நண்பர்கள் அணி கிண்ணம் வென்றது.

கொக்குவில் இந்துக் கல்லூரியின் கூடைப்பந்தாட்டத் திடலில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்த இறுதியாட்டத்தில் நண்பர்கள் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டு கழக அணி மோதியது. 68:50 என்ற புள்ளிகளின் அடிப்படையில் நண்பர்கள் அணி வெற்றிபெற்றது. (ம-23)





# சென். பற்றிக்ஸ் மாகாணச் சம்பியன்

யாழ்ப்பாணம், பெப். 20

யாழ்ப்பாண மாவட்ட விளையாட்டுச் சங்கம் நடத்திய மாகாண மட்ட கால்பந்தாட்டத் தொடரில் 20 வயது ஆண்கள் பிரிவில் யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி கிண்ணம் வென்றது.

யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நேற்று இரவு நடைபெற்ற இறுதியாட்டத்தில் யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி அணி மோதியது. ஆட்டத்தின் 20ஆவது நிமிடத்தில் சென். பற்றிக்ஸின் முதல் கோலைப் பதிவுசெய்தார் பற்றிக்ஸின் வீரர் கெயின்ஸ். 25ஆவது நிமிடத்தில் சாந்தன் பற்றிக்ஸின் இரண்டாவது கோலைப் பதிவுசெய்தார். 41ஆவது நிமிடத்தில் கெயின்ஸ் மற்றொரு கோலைப் பதிவுசெய்ய 3:1 என்று ஆதிக்கம் செலுத்தியது சென். பற்றிக்ஸ். 43ஆவது நிமிடத்தில் காஸ்ரோ மகாஜனவின் சார்பாக ஒரு கோலைப் பதிவுசெய்ய முதல் பாதியின் முடிவில் 3:1 என்ற கோல் கணக்கில் முன்னிலை பெற்றது யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ்.

இரண்டாம் பாதியின் 68ஆவது நிமிடத்தில் சாந்தன் மற்றொரு கோலைப் பதிவுசெய்தார். அதுவே ஆட்டத்தின் இறுதிக் கோலுமாக அமைய முடிவில் 4:1 என்ற கோல் கணக்கில் கம்பீரமான வெற்றியுடன் கிண்ணம் வென்றது யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி. (ம-23)

SPOKEN ENGLISH
WITH DIPLOMA CERTIFICATE
O/L எழுதிய மாணவர்கள், பல்கலைக்கழக நுழைவு மாணவர்கள், தொழில்புரிவோர்
வெளிநாடு செல்வோர், இல்லத்தரசிகள், பட்டதாரிகள்
விற்பனை மற்றும் வியாபார பிரதிநிதிகள் இணையமுடியும்
பாடப்புத்தகங்கள், DVDகள் மற்றும் சான்றிதழ் இலவசம்
சனி, ஞாயிறு பிரிவுகள் ஆரம்பம் – 25.02.2018 (ஞாயிறு)
1. காலை 08-10 3.மதியம் 01-03
2. காலை 10-12 4.மாலை 03-05
வாரநாள் பிரிவுகள் (திங்கள், புதன்) ஆரம்பம் – 21.02.2018
1. காலை 08-10 2. காலை 10-12
ஆங்கிலம் கதைக்க மற்றும் பரீட்சைகளில் தேர்ச்சிபெற விரும்பும் ஒவ்வொருவரும் கற்க வேண்டிய பாடநெறி
SAAMSON
403, மணிக்கூட்டு வீதி, பெருமாள் கோயிலடி, யாழ்நகர்,
021 320 3313 077 1570 486

## மரண அறிவித்தல்

### அம்பலவாணர் தில்லைநாதன்

(ஓய்வுநிலை உப அதிபர் - ஆவ. நடராசா இராமலிங்க வித்தியாசாலை, தர்மகர்த்தாசபை தலைவர் - ஆவரங்கால் நடராச இராமலிங்க சுவாமி கோயில்)



ஆவரங்காலைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட அம்பலவாணர் தில்லைநாதன் நேற்று (19.02.2018) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்
222 305 8023, 071 815 1764
திருமதி சிவகுமார் சுகந்தி (கொழும்பு),
தி.தேவநாதன் (லண்டன்), தி.ஸ்ரீரங்கநாதன் (கனடா)
சிவன்வீதி, ஆவரங்கால், புத்தூர். (CS/14036)(11,17)

## மரண அறிவித்தல்

### திருமதி மரியம்மா மரியாம்பிள்ளை



ஊராவில், மாங்கொல்லை காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகவும், வடக்கு நாரந்தனை மற்றும் பெரியகுளம் கண்டாவளை ஆகிய இடங்களில் வாழ்ந்தவரும் தற்போது இல. 185, கொழும்புத்துறை வீதி, பாண்டியன்தாழ்வு, யாழ்ப்பாணத்தில் வசித்து வந்தவருமாகிய திருமதி மரியம்மா மரியாம்பிள்ளை நேற்று (2018.02.19) திங்கட்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னாரின் இறுதி அடக்கம் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 185, கொழும்புத்துறை வீதி,
பாண்டியன்தாழ்வு, யாழ்ப்பாணம்
077 4468 200

தகவல் :
குடும்பத்தினர்.

# சென்.ஹென்றிஸை தோற்கடித்து யாழ்ப்பாணம் மத்தி மூன்றாமிடம்

போட்டிப்பரீட்சை வகுப்புக்கள்
இன்று செவ்வாய் (20 / 2) தொடக்கம் தினமும் பிற்பகலில் வகுப்புக்கள்
சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்
பி.ப. 2.00 - 5.30 மணி வரை
*சட்டமாணி நுழைவு
*பல்கலைக்கழக விசேடகற்கை தெரிவு
*வனவளமுகாமைத்துவ உதவியாளர்
*முன்பள்ளி ஆசிரியர் தெரிவு
வகுப்புக்கள் தினமும்
பி.ப. 3.30 - 5.30 மணி வரை
தொடர்புகளுக்கு - 076 688 3394
DMI
வெலிங்ரன் சந்தி.



யாழ்., பெப். 20

யாழ்ப்பாண மாவட்ட பாடசாலைகள் விளையாட்டுச் சங்கம் நடத்திய கால்பந்தாட்டத் தொடரில் 20வயது ஆண்கள் பிரிவில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி மூன்றாம் இடத்தைத் தனதாக்கியது.

யாழ்ப்பாணம் துரையப்பா மைதானத்தில் நேற்று மாலை இடம்பெற்ற மூன்றாம் இடத்துக்கான ஆட்டத்தில் இளவாலை சென். ஹென்றிஸ் கல்லூரி அணியை எதிர்த்து யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி மோதியது. 2:1 என்ற கோல் கணக்கில் முதல் பாதியில் முன்னிலை வகித்தது யாழ்ப்பாணம் மத்தி. இரண்டாம் பாதியின் சென். ஹென்றிஸ் 2 கோல்களையும், மத்திய கல்லூரி ஒரு கோலையும் பதிவுசெய்தன.

நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களின் நிறைவில் இரண்டு அணிகளும் தலா 3 கோல்களைப் பதிவுசெய்தமையால் சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

சம நிலைத் தவிர்ப்பு உதைகளிலும் இரண்டு அணி வீரர்களும் விடாப் போராட்டத்தை வெளிப்படுத்தினர். இறுதி ஆட்டத்துக்குரிய பாணியில் மூன்றாம் இடத்துக்கான இந்த ஆட்டம் அமைந்தது. முடிவில் ஒருவாறாக 4:3 என்ற கோல் கணக்கில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி வெற்றிபெற்று மூன்றாம் இடத்தைத் தனதாக்கியது.

(ம-23)

அறிமுகம் - Rs 250/=
சிக்கன் பிரியாணி
ப்றைட் சிக்கன் - றைஸ் & பைட்ஸ்
Fried Chicken - Rice & Bites
யாழ் பாடியில் 49-51, அம்மன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
021 222 6868, 077 736 0353,
075 987 5800

பணியாள் தேவை
கிளிநொச்சியில் இயங்கும் பிரபல ஹாட்வெயார் நிறுவனம் ஒன்றுக்கு அனுபவம் வாய்ந்த முகாமையாளர், கணக்காளர் தேவை.
தொடர்புகளுக்கு: 0770786594/0774204674 (AKN 3776)(10)

பணியாளர்கள் தேவை
கிளிநொச்சி New Sun Ceramic (Pvt) Ltd என்னும் பிரபல மாபிள் கடைக்கு விற்பனையாளர்கள், உதவியாளர்கள், கணக்காளர்கள் ஆகிய பதவிகளுக்கு அனுபவமுள்ள, அனுபவமற்ற ஆண், பெண் இருபாலாரும் தொடர்புகொள்ளவும்.
தொடர்பு:021 228 3872 / 072 9532 598 (AKN 3777)(10)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 20.02.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.